
www.tamilarangam.net

ஏப்ரல் 1996

# எரிமலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# அன்புடன் ஆசிரியருக்கு!

அன்புடன் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!

எரிமலை சஞ்சிகையின் வளர்ச்சியில் நான் மிக சந்தோஷம் அடைகிறேன். எனினும் எழுத்துப் பிழைகள் வருவதை தவிருங்கள். ஏனெனில் எழுத்துப் பிழை கருத்துப் பிழைகளை தந்துவிடும். முன்னர் போல் எரிமலை தவறுகளை பின் பக்கத்தில் தந்தால் நிறைவாக இருக்கும்.

நன்றி

ப. துளசி
பாரிஸ்

அன்புள்ள ஆசிரியருக்கு!

வணக்கம்! நான் தமிழ் நாட்டைச் சேர்ந்தவன். தற்பொழுது கர்நாடக மாநிலம் பெங்களூரில் வேலை செய்கிறேன். எனக்கு வயது 18. எரிமலை புத்தகம் ஒன்று வருவதே எனக்குத் தெரியாது. ஆனால் இங்கு பக்கத்து வீட்டுக்காரர் ஒருவரிடம் எரிமலை புத்தகம் கண்டேன். அந்தப் புத்தகத்தை நன்றாகப் படித்தேன். எனக்கு விடுதலைப்புலிகள் இயக்கத்தில் சேர வேண்டும் என்று 15 வயதிலிருந்தே ஆர்வமாக உள்ளது. உயிரை விட மேலாக தமிழ் மக்களை மதிக்கிறேன்.

பெங்களூர்
இளங்கோ.

அன்புடையீர்,

தங்கள் எரிமலை புத்தகம் எனது நண்பர் ஒருவர் மூலமாக எனக்கு கிடைத்தது. தொடர்ந்து உங்கள் வெளியீடுகளை நான் படிக்க விரும்புகிறேன். 1983–ல் கொழும்பில் சிங்கள இராணுவ காடையர்களால் பலமுறை சொத்துக்களை இழந்து உறவினர்களை இழந்து வவுனியாவை சென்றடைந்தோம். இனி ஒருபோதும் சிங்கள ஆட்சியில் தமிழன் வாழவே முடியாது. இதை எல்லா தமிழ் பேசும் மக்களும் உணர வேண்டும். இதுவே எனது ஆசை. இலங்கை வாழ் தமிழ் மக்களின் ஒரே தலைவர் பிரபாகரன் அண்ணா அவர்களே. அவருக்கு நீண்ட ஆயுளை கொடுத்து எந்த இடைஞ்சலும் வராமல் அவர் முயற்சி வெற்றியடைய நான் ஆண்டவனை வேண்டுகிறேன். எனக்கு தயவு செய்து வெளியிடும் புத்தக பிரதிகளை அனுப்பி வைக்கவும்.

இப்படிக்கு என்றும் உங்கள்
சகோதரன்.
ஜெயபாலன்.
குவைத்.


www.tamilarangam.net

## அக்கறைப் பூக்கள்

அன்பின் எரிமலை ஆசிரியர் குழுவுக்கு!
வணக்கங்களோடு என் நன்றிகளும்.

எனது 'மண்ணை மறப்பதா' எனும் சிறுகதையை பக்குவமாய் வெளியிட்டுள்ளீர்கள். வாசகர்களிடத்தில் அது பாராட்டு பெறுமாயின் சந்தோசம் தான். என் முயற்சிக்கே உரமூட்டும் எரிமலையே நன்றி.

ஜனவரி இதழின் அட்டைப்பட அப்துல் ரவூப் நம் கண்களால் புகுந்து எம் இதயத்தில் இடம்பிடித்து மாவீரர் வரிசையில் தானும் ஓர் விடுதலை வித்தாகி விட்டார்.

இப்படிக்கு
அன்பு வாசகி
கேதிஸ்.

எரிமலையே வருக!

உன்னை அழகுபடுத்திப் பார்க்க வேண்டும் என்று விரும்பும் வாசகி நான். இன்று வரை உன்னை நான் சிந்தித்தேன். ஆனால் எழுத முடியவில்லை. உன்னில் ஒரு பக்கத்தில் ஒரு சிறிய கவிதையாவது படைக்க விரும்புகிறேன். அதனால் முயற்சி செய்கிறேன். என் தேசியத் தலைவனின் உருவம் மட்டுமல்ல, அவரின் இலட்சியமும், எதிரிகளை நிலை கலக்கிக் கொண்டிருக்கும் வீரமும், உறுதியும் தமிழ் மக்களாகிய எம் இதயக் கண்களில் நாடி நரம்புகளில் நிலைத்திருக்க விரும்புகிறேன்.

அன்புடன் ஷியாமா
பிரான்ஸ்.

அன்பின் எரிமலை ஆசிரியர் குழுவுக்கு!

நாங்கள் தமிழர்கள் என்ற உணர்வில் ஒருமித்து செயல்பட வைக்கும் எரிமலை உலக தமிழருக்கு ஆற்றும் சேவை முக்கியமானது; மகத்தானது. தமிழ் வாழ்க! தமிழ் வளர்க!

நன்றி

ந. காண்டிபன்
ஜேர்மனி

அன்பின் எரிமலை ஆசிரியர் அவர்கட்கு!

இங்கு நாங்கள் சில நண்பர்களின் மூலமாக எரிமலை இதழ் (சனவரி 1996) முதன் முறையாக படிக்க நேர்ந்தது. இதுபோன்ற உணர்வூட்டும் இதழை இப்பொழுதுதான் படிக்கிறோம். உணர்ச்சிகள் பொங்கிவிட்டன. இதுபோன்ற இதழ்கள் 'தாய்த் தமிழ் நாடு' என்று சொல்லிக்கொள்ளும் தமிழ்நாட்டிலிருந்தும் வெளிவருவதில்லை. இது தமிழ் நாட்டின் சாபக்கேடு.

தமிழின வாலிபர் அப்துல் ரவூப்பின் ஈகையை நினைவுகூர்ந்ததற்கு நன்றி.

'மண்ணிரிமை' என்னும் கட்டுரை பாராட்டத்தக்கதாக இருந்தது. தாய்த் திருநாட்டில் மண்ணுரிமையை பற்றி எதுவும் தெரியாதவர்களாக இருக்கிறார்கள். தங்கள் இனத்தையும் நாட்டையும் மாற்றிச் சொல்ல பழக்கப்பட்டுவிட்டார்கள். அதனால்தான் ஈழத் தமிழர்களின் மண்ணுரிமையைப் பற்றி புரிந்துகொள்ள முடியாதவர்களாக இருக்கிறார்கள்.

லாரன்சு திலகரின் பேட்டி சிறப்பாக இருந்தது.

'மண்ணை மறப்பதா' என்னும் சிறுகதை மரக்கட்டைகளாக உலக மூலைகளில் ஒளிந்துகொண்டு வாழும் எல்லா தமிழர்களுக்கும் சாட்டை அடியாக வீழ்ந்தது.

முடிவாக நாங்கள் வாழும் இந்த ஊர் ராசராச சோழனின் கல்வெட்டுக்கள் கொண்ட ஊர். இது கர்நாடக, பெங்களூரிலுள்ளது. எரிமலை இதழை தொடர்ந்து படிக்கவும் நண்பர்களுக்கு செய்திகளைப் பரப்பவும் விரும்புகிறோம். தயவுகூர்ந்து எங்கள் முகவரிக்கு மறக்காமல் அனுப்பிவைக்கவும்.

ஜெயராமன்
பெங்களூர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எரிமலை

கலை பண்பாடு

அரசியல் சமூக ஏடு

★

பதின்நான்காம் ஆண்டு

ஏப்ரல் 1996

★

ஆக்கங்கள்

அபிப்பிராயங்கள்

மற்றும் தொடர்புகட்கு

★

**எரிமலை**
தாய்மண் வெளியீடு
தமிழர் ஒருங்கிணைப்புக் குழு
C/O T.C.C-France,
341, Rue des Pyrénées,
75020 Paris.
Tel: 43 58 11 42

# இனப்படுகொலைப் போருக்கெதிரான சர்வதேசத்தின் குரலை ஒலிக்கச்செய்வோம்

புலம் பெயர்ந்து தமிழ் மக்கள் வாழும் நாடுகளில் தமிழ்மக்களின் தேசிய விடுதலைப் போராட்டம் தொடர்பாக புதியவகை அணுகுமுறைகள் தோன்றி வருவதை அவதானிக்க முடிகிறது. வெளிநாடுகளில் செயலாற்றும் தமிழ் அமைப்புகள் மாத்திரமல்லாமல், ஆய்வு நிறுவனங்கள், பல்வேறு நாடுகளைச் சேர்ந்த புத்திஜீவிகள், வல்லுனர்கள் தமிழ் மக்களின் தேசியப்பிரச்சனைக்கான தீர்வு குறித்து ஆய்வதும், அது தொடர்பான கருத்துருவாக்கத்தில் ஈடுபடுவதும் அண்மைக்காலங்களில் அவதானிக்கத்தக்கவையாக உள்ளன.

இந்த வகையில் அண்மையில் நோர்வே, கனடா போன்ற நாடுகளில் இடம் பெற்ற இது தொடர்பான மாநாடுகள் முக்கியத்துவம் பெறுகின்றன. நோர்வேயில் இடம்பெற்ற, கனடாவில் இடம்பெற்ற மாநாடுகள் தமிழ்மக்களின் தேசிய இனப் பிரச்சினை குறித்த பல்வேறு வகை மாயைகளையும் களைந்து சிங்கள தேசம் தமிழ்மக்களின் தேசிய அபிலாசைகளைப் பூர்த்தி செய்யக்கூடிய அரசியல் தீர்வுக்கு உடன்பட வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி நிற்கின்றன. சர்வதேச சட்டவல்லுனர்கள், தமிழ்மக்களின் தேசிய சுயநிர்ணய உரிமையானது சர்வதேச சட்ட வரம்புக்கு உட்பட்டதென்றும், அந்த உரிமைகள் தொடர்பான ஆயுதப் போராட்டம் சர்வதேச சட்டங்கள் வாயிலாக ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்றும் ஐக்கிய நாடுகள் சபையின் உடன்படிக்கை மற்றும் சர்வதேச சட்ட ஆவணங்களைச் சுட்டிக்காட்டுகிறார்கள்.

இந்த வகையில் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டமும் அதனை முன்னின்று நடாத்தும் விடுதலைப் புலிகள் அமைப்பும் நியாயப்படுத்தப்படும் செயற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் போது, சிறீலங்கா அரசு தமிழ் மக்களின் தேசியப் பிரச்சினையை பயங்கரவாதப் பிரச்சினை போல் அணுகுவதும், மேற்கு நாடுகள் விடுதலைப் புலிகள் அமைப்பினைப் பயங்கரவாத அமைப்பாக சித்தரிக்கச் செய்யும் வேலைத் திட்டங்களும் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

கடந்த 24–04–1996 கனடா நாட்டில், "தமிழீழ மக்கள் ஓர் தேசிய இனமென்றும், அவர்கள் ஐக்கிய நாடுகள் சபை உடன்படிக்கைகள், சர்வதேச சட்ட ஆவணங்களுக்கமைய தேசிய சுயநிர்ணய உரிமைகள் உரித்துடையவர்கள்" என்ற தலைப்பில் இடம்பெற்ற மாநாட்டில்,

பிரான்சிஸ் போயில் என்ற சட்ட அறிஞர் "சிறீலங்கா இனவாத அரசாங்கத்தின் ஒடுக்குமுறைக்கு எதிராக தமது சுயநிர்ணய உரிமையை நிலைநாட்ட, ஆயுதம் ஏந்திப் போரிட தமிழர்கள் உரிமை உடையவர்கள். பிரிட்டிஸ் ஆட்சியாளர்கள் பிரிந்திருந்த இரண்டு தேசங்களை ஒன்றாக இணைத்துவிட்டுப் போனார்கள். தற்போதுள்ள அரசாங்கம் குடியேற்றவாதத்தின் எச்சசொச்சமாக உள்ளது. தமிழ் மக்கள் நவகாலனித்துவ, இனவாத அரசாங்கத்துக்கு எதிராகப் போராடுகிறார்கள். தமிழீழ விடுதலைப் புலிகள் அதன் முன்னணிப் படையாக இருப்பதால் அது ஒரு தேசிய விடுதலை இயக்கமாகக் கருதப்படல் வேண்டும்." என்று கூறியுள்ளார். இவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும், பொஸ்னிய அரசாங்கத்திற்கும் சட்ட ஆலோசகராக உள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

சிறீலங்கா அரசாங்கமோ, எமது போராட்டத்தின் சட்ட வரையறையையோ, தார்மீக நியாயங்களையோ புறக்கணித்துவிட்டு தமிழ் மக்கள் மீது போர்தொடுத்து அவர்களை இராணுவ அடக்குமுறைக்கு உட்படுத்த நினைக்கிறது. தென்மராட்சி, வடமராட்சிப் பகுதிகளில் இடம்பெயர்ந்து அல்லலுறும் மக்களுக்கான உணவு, மருந்து ஆகியவற்றைத் தடுத்து அவர்களை கொடுமைப்படுத்துகிறது. சிங்கள அரசு இவ்வாறு நலிவுற்ற மக்கள் மீது மிகக் கொடூரமாக போரை மேற்கொண்டு அவர்களை அடிபணிய வைக்க முயல்கின்றது. இதன்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் அழிவுண்டு, காயமடைந்து, ஊனமாகிப் போவர். பலகோடி பெறுமதியான சொத்துக்கள் அழிபடும். சர்வதேச மத்தியஸ்தத்தையும் புறக்கணித்துவிட்டு பாரிய அழிவுகளைத் தரவல்ல ஆக்கிரமிப்புப் போரில் இறங்கியுள்ள சிறீலங்கா அரசாங்கத்துக்கு களத்தில் தகுந்த பாடம் கற்பிக்க வேண்டும். அதேவேளை சர்வதேச ரீதியாகவும் இதனை ஓரங்கட்டவேண்டும். இத்தகு முன்னெடுப்புக்களுக்கான ஆதரவையே தமிழீழ மக்களிடம் விடுதலைப் போராட்டத் தலைமை கோரி நிற்கின்றது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாற்றுக் காவியமாகிவிட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையைத் துறந்து, சாதாரண பற்று உறவுகளைத் துறந்து, தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக, தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

அவரது தியாகம் ஒப்பற்றது, உலக வரலாற்றிலேயே புதுமையானது.

இந்திய இராணுவ அடக்குமுறைக்கு எதிராக அவர் தொடுத்த அறப்போர் காந்திய தேசத்தை தலைகுனிய வைத்தது. தனிமனிதப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழத் தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதம் அடைந்தது.

**அன்னை பூபதியின் 2-ம் ஆண்டு நினைவெயொட்டி,**
**தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன்**
**அவர்கள் விடுத்த அறிக்கையிலிருந்து....**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அறத்தின் ஒருவடிவோ?

புயலுக்குத் தென்றலுக்குப்
பூபதியும் பேராமோ?
அன்னைஇவள் தானே
அறத்தின் ஒரு வடிவோ?

"காவலர்நாம் என்றுவந்து
கன்னமிட்ட இந்தியனே!
பாவங்கள் எத்தனையோ
அத்தனையும் பண்ணிவிட்டாய்!

அங்காடி யா? அன்றி,
ஆரும் வரப்போகச்
செங்கண் விலைமாதர்
சேரியா ஈழமிது?

ஏப்பமிட வந்தாய்நீ
எங்களது மண்ணைத்தான்
கூப்பிட்டா வந்தாய்?
கொடியவனே கொள்ளிவைக்க!

என்ன உரிமையிலே
இந்தமண்ணில் கால்வைத்தாய்?"
என்றிங் (கு) அடடா!
எரிமலையாய் ஆகிவிட்டாள்!

நீரோடை ஒன்று
நெருப்பாறாய் ஓடுதல்போல்
பார்மடந்தை தன்பொறையாம்
பான்மைஇழந் தாற்போல் —

ஒருதிங்கள் ஆகவிங் (கு)
உண்ணாமற் செய்த
அருந்தவத்தில் தன்னை
அவியாய்ச் சொரிந்தாளே!



தாயின் உயிர் மூச்சில்
தமிழீழம் சூடாக
பாயிற் கிடந்தோர்
பதறி எழுந்தார்கள்!

குந்தி இருந்தோர்
குமுறிஎழ, இங்குவந்து
மந்திபோல் நின்றோர்
மரமேறிப் பாய்ந்தார்கள்!

உண்மைஅறம் தோற்ற
வரலா (று) உலகில்லை!
"காந்தியம்" பாரதத்தில்
கைதவறிப் போனதுவோ!

புத்தர் பிறந்தமண்
புல்முளைத்துப் போனதப்பா
நேருமர பாரும்
முகவரியைத் தாம்தொலைத்தார்!

பண்டைமனு, வான்மீகு,
பாரதவி யாசரும்
கண்டறிய ஒண்ணாதே
காணாமல் போனார்கள்!

எந்த அறிஞரும்
ஏதிலியர் ஆனார்கள்;
இந்திஅர சாள
இனிப்பெரியார் தோன்றாரே!

வல்லாண்மைப் பேய்க்கு
வயிற்றுவலி கண்டதம்மா!
எல்லாரும் கையெடுக்க
ஈழத்தைக் காத்தவளே!

கண்ணகியாள் மாமதுரை
சுட்டதொரு கட்டுரைபோல்
பெண்ணரசி வல்லரசைப்
பிய்த்தெறிந்தாய்; மெய்யிதுவாம்!

மக்கள் புரட்சியின்
மூலப் பொறியாக
திக்கெல்லாம் போற்றத்
திலீபனும் பூபதியும்
வாழி! அறம்வாழி!
வாழ்க புலிவீரர்!
பீழை விலகிப்
பிரபா கரன்வாழி!
ஈழமிது வாழி இனிது.

- பண்டிதர் பரந்தாமன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# கொழும்பு



www.tamilarangam.net

# கைது - சுற்றிவளைப்பு

ஈழப்போர் 3 ஆரம்பமான பின் சிறிலங்காவின் தலைநகரான கொழும்பிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் தொடர்ச்சியான பரவலான கைதுகள் இடம்பெற்று வருகின்றன தெரிந்ததே. குறிப்பாக தமிழர்கள் மட்டுமே பயங்கரவாதிகள் என வலுக்கட்டாயாமாக முத்திரை குத்தப்பட்டு சிறிலங்கா படைகளினால் மேற்கொள்ளப்படுகின்ற இக்கைதுகள் கொழும்பிலும் அதனை அண்மிய பகுதிகளிலும் மட்டுமே நடைபெறுவதாக கூறமுடியாது. சிறிலங்கா படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள எல்லாப் பிரதேசங்களிலும் இக்கைதுகள் நடைபெறுகின்றன. குறிப்பாக திருகோணமலை - மட்டக்களப்பு- மலையகம் என இப் பிரதேசங்கள் நீட்சியடைகின்றன.

இனப்பிரச்சினையைக் காரணம் காட்டி, பயங்கரவாதிகள் அல்லது பயங்கரவாதச் சந்தேகநபர்கள் எனக் கூறப்பட்டு சுற்றிவளைப்புக்கள்- தேடுதல்கள் என பல விதங்களில் இக் கைதுகள் நடைபெறுகின்றன. ஆனால் கைதுசெய்யப்படுவோர்களில் எத்தனை பேர் குற்றமற்றவர்கள் என விடுவிக்கப்படுகின்றனர் என்பதற்கான புள்ளி விபரங்கள் சரியாகக் கிடையாது. தமிழர்கள் என்ற ஒரே ஒரு காரணத்துக்காக நடைபெறுகின்ற இக் கைது நடவடிக்கைகளின் பின்னணி என்ன என்பதை நாம் பார்க்க வேண்டி உள்ளது.

சிறிலங்கா அரசைப் பொறுத்த வரை தமிழர்கள் எனப்படுவோர் அனைவரும் பயங்கரவாதிகள் என கருதுவதே உண்மைநிலை. ஒடுக்கப்படுகின்ற இனம் ஒடுக்குமுறைக்கெதிராக விடுதலை வேண்டி போராடும் போது ஒடுக்குமுறையை கட்டவிழ்த்து விடுகின்ற அரசுகள் அவ் விடுதலைப் போராட்டத்தை பயங்கரவாதமாகச் சித்தரிப்பதென்பது உலக விடுதலைப்போராட்ட வரலாறுகளில் நிகழ்ந்துள்ள ஒரு சாதாரண நிகழ்வு தான். இதனையே சிறிலங்கா அரசும் பின்பற்றுகின்றது. ஆனால், 'தமிழர்களுக்கு பிரச்சினைகள் உண்டு. அவை நியாயமான முறையில் தீர்க்கப்பட வேண்டும்' என சந்திரிகா குறிப்பிட்டிருந்தாரே என்ற கேள்வியும் இங்கு எழுகின்றது. போராட்டத்தை நசுக்க அல்லது திசை திருப்பிட அல்லது அதன் சர்வதேசக் கூர்மையை மழுங்கடிக்கவே. சந்திரிகா அப்படியானதொரு வேடத்தைப் போட்டிருந்தார் என்பதை தற்போதைய அரச நடைமுறையூடாக நாம் இன்னும் ஆழமாக புரிந்து கொள்ள முடியும். பேச்சுவார்த்தையைப் புலிகளே முறியடித்தார்கள் என அரசுக்கு வக்காலத்து வாங்கிக் கொண்டிருந்த தமிழ்க் குழுக்கள் இன்று மௌனம் சாதிப்பதன் காரணமே சந்திரிகா அரசு தனது போலி வேடத்தைக் கலைத்து விட்டது என்ற கவலையினால் தான் எனலாம்.

பேச்சு வார்த்தை நாடகம் ஒரு புறம் நடந்து கொண்டிருக்க, படைப் பல பெருக்கமும் ஆயுதக் கொள்வனவும் மறுபுறம் மிக வேகமாக நடைபெற்றது. பின்னர் பேச்சுக்கள் முறிவடைந்தவுடன் மீண்டும் போர் ஆரம்பமானது அனைவருக்கும் தெரிந்த பழைய கதை.



'ஒரு அரசை வெல்ல முடியாது' என்ற இறுமாப்புடன் மார் தட்டிக் கொண்டு, முன்னைய சிறிலங்கா ஆட்சியாளர்களை விட ஒரு படி மேலான முனைப்புடன் தமிழின ஒழிப்பு நடவடிக்கைகளை சந்திரிகா அரசு மேற்கொண்டு வருகிறது. முன்னைய ஆட்சியாளர்களின் நடவடிக்கைகள் மூலம் பெற்ற அனுபவத்தினூடாக மிகவும் தந்திரமாகவே இப் படுகொலை நாடகங்களை சந்திரிகா அரங்கேற்றி வருகின்றார் எனலாம். வெளிநாடுகளைப் பொறுத்த வரை தன்னை ஒரு சமாதான தேவதையாக நம்ப வைக்க முயன்று கொண்டு மறுபுறத்தில் தமிழ் மக்கள் மீது அரக்கத்தனமான அடக்குமுறைகளை அவிழ்த்துவிட்டுக் கொண்டிருக்கிறார். வட கிழக்கில் நடைபெறுவது ஒரு விடுதலைப் போராட்டம் என்பதை மறைத்து சிறிய குழு ஒன்றின் பயங்கரவாதக் கிளர்ச்சி என்று வெளியுலகுக்குக் காட்ட முயல்கின்றது. இந்த நிலைமைகள் தொடர்ந்து கொண்டிருக்கும் போது கொலன்னாவை எண்ணெய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

குதங்கள் மீதான தாக்குதல்கள், மத்தியவங்கி மீதான குண்டுவெடிப்பு என்பன அரசை ஆட்டம் காண வைக்கும் நிலையைத் தோற்றுவித்தன. முதலீடுகள் குறையத் தொடங்கி விட்டன. பாதுகாப்புச் செலவு அதிகரித்துள்ளது. வரவு செலவுத்திட்டத்தில் பெரும் பகுதி பாதுகாப்புக்கு ஒதுக்கப்பட்டும் குறை நிலையே தொடர்கிறது.

'சூரியக்கதிர்' என்ற மிகப்பெரிய படையெடுப்பொன்றின் மூலம் அதிகளவு மக்களையும் பெருமளவு நிலங்களையும் தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முயன்ற அரசுக்கு, வரலாறு காணாத மிகப் பெரும் 'இடம்பெயர்வு' மூலம் ஒரு அரசியல் - இராணுவத் தோல்வியை விடுதலைப் புலிகள் பரிசாகக் கொடுத்துள்ளனர். இது அரசு என்றைக்குமே எதிர்பார்த்திராதவொரு எதிர்மறைவு விளைவுதான். ஆகவே இதிலிருந்து மீண்டு விட, ஆசை

# - அச்சுறுத்தல்

வார்த்தைகள், இலவசக் கொடுப்பனவுக்கான அறிவிப்புகள் இப்படி எத்தனையோ நடவடிக்கைகள் எடுத்தாலும், இவை அனைத்தும் அரசு விரிக்கின்ற மோச வலைகள் என்பதனை மக்கள் புரிந்து கொண்டு, மீண்டும் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்ல உறுதியாக மறுத்து விட்டனர். இடம்பெயர்வினால் மோசமான நெருக்கடிகளைச் சந்தித்துக் கொண்டிருக்கின்ற மக்களுக்கு உதவ சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு சிறீலங்கா அரசு அனுமதி மறுப்பது- இந்த இடம்பெயர்விற்கான பழிவாங்கல் நடவடிக்கையே எனலாம்.

பொருளாதார, மருத்துவ இக்கட்டுக்குள் தவிக்கின்ற மக்கள் கொழும்பு போன்ற பிரதேசங்களுக்குச் சென்று பிற உதவிகளைப் பெற்றுக்கொள்ளும் வசதிகளையும் தடுத்து வவுனியா படைமுகாமினூடாக ஒரு தடுப்புச் சுவரை எழுப்பியுள்ளது. அங்குள்ள மக்களின் எந்தத் துயரும் வெளி உலகுக்குத் தெரியவராமல் செய்தியாளர்களும் செல்லத் தடை.

இன்னொரு புறத்தில், வவுனியாவுக்கு அப்பாலுள்ள தமிழர்கள் மீதும் அரசு காழ்ப்புணர்ச்சியுடன் நடந்து கொள்கின்றது. மத்தியவங்கி குண்டு வெடிப்புக்கு பின் கொழும்பு நகரம் 1985-ம் ஆண்டில் யாழ்நகரம் இருந்த நிலைக்கு வந்த விட்டது. எல்லா இடங்களிலும் பதுங்குகுழிகள், சோதனைச் சாவடிகள் எனக் காட்சியளிக்கத் தொடங்கிவிட்டது. தேடுதலும் - கைதும் நடைபெறுகின்ற நிலை மாறி கொழும்பு நகரம் அடிக்கடி சுற்றிவளைப்புக்கும் முற்றுகைக்கும் உட்படுகின்றது.

இவற்றின் போது கைது செய்யப்படுபவர்கள் அனைவரும் தமிழர்களே.

கொழும்பு குண்டு வெடிப்புக்கு பின் கைது செய்ப்பட்ட சுமார் 2000 இற்கும் மேற்பட்ட தமிழர்களை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினர் சென்று பார்வையிடவே அரசு அனுமதி மறுத்துள்ளது. இவர்கள்



பெரும்பாலும் நீண்டகாலம் கொழும்பில் தங்கியிருந்து தொழில் புரிந்து வருபவர்கள் எனலாம். அவர்கள் மீது எந்த விதமான விசாரணைகளையும் நடத்தாமல் ஆடு மாடுகள் போல் அடைத்து வைத்துள்ளனர். இதனை விட மட்டக்களப்பிலிருந்து மத்திய கிழக்குக்குச் செல்ல கொழும்பு வந்த 45 பேர் கைதுசெய்யப்பட்டு அடைக்கப்பட்டுள்ளனர் வேறொரு இடத்தில் இரு தமிழ் இளைஞர்களைக் கைதுசெய்த பொலிசார் அவர்களைக் கொன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

இப்படித் தமிழர்களை கைது செய்யும் அதேவேளை, படையினர் தாமே ஆயுதங்களை மறைத்து வைத்து விட்டுக் கைப்பற்றுவதன் மூலம் தாம் மிகவும் விழிப்பாகச் செயற்படுவதாகச் சிங்கள மக்களை நம்பவைக்க முயல்கின்றனர். அதே வேளை குண்டுக்குக் காரணகர்த்தாக்கள் என பல தமிழர்களையும் சிறையிலடைத்துச் சித்திரவதை செய்துகொண்டிருக்கின்றனர். திட்டமிடப்பட்ட இக் கைது நடவடிக்கைகளால் வடகிழக்கு பிரச்சினையின் பாதிப்புக்கள் கொழும்புக்கு பரவுவதை தாம் தடுப்பதாகக் காட்டி, வெளிநாட்டு முதலீடுகளை மீண்டும் அரசு முயற்சிக்கின்ற அதே வேளை இக் கைதுகள் மூலம் தமிழ் மக்கள் மீது பயங்கரவாதச் சாயம் பூச நினைக்கின்றது. வடகிழக்கு தமிழர்களைப் பட்டினி போட்டுக் குண்டு வீசி கொன்றொழிக்கும் அதே நேரம் வடகிழக்குக்கு வெளியே உள்ளவர்களைக் கைதுகள், சித்திரவதைகள் மூலம் கொடுமைப்படுத்துகின்றது. இதனால் விரக்தியுற்ற மக்கள் விடுதலைப்போரைக் கைவிடுவார்கள் அல்லது போராட்டத்தை ஆதரிக்காமல் எதிர்ப்பார்கள் என அரசு நம்புகிறது. எனினும் எல்லாச் சோதனைகளையும் தாண்டிக் கொண்டு செல்லும் விடுதலை பற்றிய தமிழர்களின் உறுதிப்பாடு சந்திரிகாவை எரிச்சலடைய வைத்திருக்கிறதென்றே கூற வேண்டும். அதன் வெளிப்பாடே, இந்தியாவிலிருந்து வெளிவரும் 'இந்திய பிஸ்னஸ் வீக்' சஞ்சிகைக்கு சந்திரிகா கொடுத்துள்ள பேட்டியில் 'தமிழர்கள் தமது மௌனத்தைக் கலைத்து தெளிவானதொரு நிலைப்பாட்டை வெளியிட வேண்டிய தருணமிது' என்ற சந்திரிகாவின் கூற்றாகும் கைதுகளும் - அச்சுறுத்தல்களும் விடுதலை வேண்டி எழுச்சிகொண்ட எந்த இனத்தையும் கட்டிப்போடாது என்பதை அம்மையார் உணர்ந்து கொள்வாரா?

- ஆதிரையன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கெரில்லாப் போர்முறையின் அனுகூலங்கள்



"எதிரியின் பலம் பொருந்திய பகுதிகள் பின்னுக்கு இருக்கத்தக்க தாக எதிரியின் பகுதியினுள் ஆழ மாக ஊடுருவுதல் ஆபத்தானது. மாகாணங்கள் எதிரியின் கைகளில் இருக்கும்போது, அங்குள்ள நகர் ஒன்றினைக் கைப்பற்றி நிலைகொள் ளுதலும் ஆபத்தானது." இவை இரண் டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர், சுன் சூ என்ற சீன இராணுவ விற் பன்னரால், 'போர்க்கலை' (The Art of war) என்ற நூலில் சொல்லப்பட்ட வாசகங்கள். சுன் சூ இராணுவ ஆய் வாளர் மட்டுமல்ல; மிகச் சிறந்த படைத் தளபதி; மதிநுட்பமும், இராஜ தந்திரமும் நிறைந்த யுத்த அமைச் சர். கெரில்லா யுத்த தந்திரங்களை உலகிற்கு முதன் முதல் அறிமுகப் படுத்தியவர் இவரே எனக் கூறலாம். இவரைப் பின்பற்றியே மா ஓ சேதுங், நவீன உலகிற்கு ஏற்றவாறு கெரில் லாப் போர்முறையை வடிவமைத் தார். இவரின் போர் நுணுக்கங் களை நெப்போலியன் தனது சண் டைகளில் பயன்படுத்தியதாக வர லாற்று நூல்கள் தெரிவிக்கின்றன.

இச் செய்திகளை எமது சூழ் நிலைக்குப் பொருத்திப் பார்த்தும் ஆராயலாம். சமகால அரசியல், இராணுவ பகைப்புலத்தில், பிரபாக ரன் உலகின் தலைசிறந்த கெரில் லாத் தலைவனாக விளங்குவதை இராணுவ ஆய்வாளர்கள் ஒத்துக் கொள்கின்றனர். கெரில்லா உத்திக ளைத் திறம்படக் கையாள்வதில், கைதேர்ந்த நிபுணனாக பிரபாகரன் விளங்குகிறார் என்பதில் ஐயமில்லை. எதிரியின் பலம், தங்கள் பலம், மக் கள் சக்தி, கால, இடச் சூழ்நிலை, உள்ளூர், சர்வதேச அரசியல், பொரு ளாதார நிலைமைகள் ஆகியவற்றை நுணுக்கமாக ஆராய்ந்து, திட்டமிட்ட ரீதியில் பிரபாகரனின் தந்திரோபா யத் தாக்குதல் (Strategic offensive) வகுக்கப்பட்டுள்ளதாகக் கூறலாம். பிரபாகரன் கெரில்லாப் போர் முறைக்குப் புதிய பரிமாணங்களை, பரிணாம வளர்ச்சிகளைச் சேர்க்கி றார் என்று துணிந்து கூறலாம். கெரில் லாப் போர் முறையின் வளர்ச்சிப் போக்கில், அவரது காலம் நவீன மாற்றங்களைக் குறித்து நிற்கும்.

பிரபாகரன் உலகின் தலைசிறந்த கெரில்லாத் தலைவர்களின் வரிசை யில் வருவதோடு மாத்திரமில்லாமல், நெப்போலியன் போன்ற சிறந்த மர புப் போர் தளகர்த்தர்களை நேசிப்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


பவராகவும் இருக்கிறார். பிரபாகரனின் ஆதர்ச புருஷர்களாக விளங்குபவர்களில் நெப்போலியனும் ஒருவராக உள்ளாரென்பது குறிப்பிடத்தக்கது. இவ்வாறு நாம் ஒப்பீட்டு ரீதியில் ஆராயும் போது, தற்போது சிறீலங்காவின் பிரதிப் பாதுகாப்பமைச்சராக விளங்கும் ஜெனரல் அனுருத்த ரத்வத்த உலகில் தோல் விகண்ட இராணுவத் தளபதிகள் வரிசையில் சேர்க்கப்படுவது உறுதி. எமது விடுதலைப் போர்க் காலத்திலேயே, அத்துலத் முதலி, ரஞ்சன் விஜேரட்ணா, கொப்பேக்கடுவ, கிருஷ்ணசுவாமி சுந்தர்ஜி, திபேந்தர் சிங் போன்ற பாதுகாப்பு அமைச்சர்களும், படைத்தளபதிகளும் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் வீசப்பட்டுள்ளதை அவதானிக்கலாம்.

தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கும் போர் நடவடிக்கைகளை நோக்கும் போது, என்ன விளைவுகள் ஏற்படும் என்பதை இப்போதே உணரக்கூடியதாக உள்ளது. பெரும் படையணிகளோ, அதி ஆயுதபலமோ, பாரிய படை எடுப்புகளோ போரின் முடிவைத் தீர்மானிப்பதில்லை. என்பதே கெரில்லாப் போர்முறை தந்த அடிப்படைப் பாடமாகும். ஏனெனில், இத்தகு பலங்களை முறியடிப்பதற்கு ஏதுவான, பதிலான வடிவமாக எழுந்ததுதான் கெரில்லாப் போர்முறையாகும். எனவேதான், கெரில்லாப் போர்முறையில், தந்திரங்கள், உத்திகள், நுணுக்கச் செயல்பாடுகள், உளவறிவு என்பவற்றுடன் உறுதியான தலைமை, போராளிகளின் மனோபலம் என்பன முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

தந்திரோபாய தாக்குதல் திட்டத்தின் அடிப்படையில் அமைந்த சிறு சிறு தாக்குதல்கள் பாரிய தாக்கங்களை ஏற்படுத்துகின்றன. இத்தாக்குதல்களின் முக்கியத்துவத்தை நான்கு வரிசையாகப் பிரிக்கலாம்.

ஒன்று, யாழ் குடாநாட்டினுள், வலிகாமப் பகுதியில் நடைபெறும் தாக்குதல்கள். இத்தாக்குதல்களில், அராலித்துறையில் 2 கிலோமீற்றர் நீளத்தில் இருந்த ஏராளமான காவல் அரண்கள் தாக்கி அழிக்கப்பட்டமையும், மல்லாகத்தில் மார்ச் மாத நடுப்பகுதியில் நடந்த கண்ணிவெடித் தாக்குதலும், அதில் 20-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டமையும் முக்கியமானவை. எத்தனை இராணுவத்தினர் கொல்லப்பட்டனர் எனபதல்ல முக்கியம். அது களநிலைமைகளிலும், படையினரின் மனோவியலிலும் ஏற்படுத்தும் பாதிப்பே அதிகமானது. இது படையினரின் நகர்வு திறனைக் குறைக்கிறது. முகாம்கள் பரவலாக அமைக்கப்படுவதற்குப் பதிலாக குறைக்கப்படுவதில் முடிகின்றது. எதிரியின் ஊடுருவல், எந்த நேரமும் தாக்கப்படலாம் என்ற அச்ச உணர்வு தாக்குதல் நடவடிக்கைகளைக் கைவிட்டு, தற்காப்பு நிலைக்கு இராணுவத்தினரைத் தள்ளிவிடுகின்றது. தற்காப்புக்கு இன்னும் கூடுதலான இராணுவத்தினர், தளபாடங்களைக் கொண்டுவரும் சூழலை ஏற்படுத்துகின்றது. எனவே, மக்கள் இல்லாத வெறும் நிலப் பரப்பை பாதுகாக்க வேண்டி, பல்லாயிரக்கணக்கான இராணுவத்தினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்படும் நிலைமை ஏற்படுகின்றது. இறுதியில் வெளியேறவேண்டிய ஒரு நிலப்பரப்பினுள் இவ்வாறு எதிரியால் சூழப்பட்டுத் தாக்கப்படும் நிலைமையில் அரச இராணுவம் கட்டுண்டு இருப்பது வீணானது என்பதை எவரும் உணர்வர்.

இவ்வாறு 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட இராணுவம் வீணாக யாழ்ப்பாணத்தில் முடக்கப்பட்ட நிலையில், கிழக்குப் பகுதி விடுதலைப் புலிகளால் விடுவிக்கப்படும் நிலை தோன்றுகின்றது. காடுகள், ஆறுகள் நிறைந்த அப்பகுதியில் இராணுவ நகர்வுகள், படை எடுப்புகள் தோல்வியில் முடிந்துள்ளன. அது தவிர அம்பாறை வெல்லாவெளியில், மார்ச் 11-ம் திகதி பொலிஸ் கொமாண்டோக்கள் மீது தாக்குதல் நடாத்தப்பட்டு, 20-க்கு மேற்பட்ட பொலிஸ் கொமாண்டோக்களும், பல அதிகாரிகளும் கொல்லப்பட்டதானது அரச இராணுவ உயர் மட்டங்களில். அதிர்ச்சி அலைகளை ஏற்படுத்தி உள்ளது. மேலும், மார்ச் மாதம் 23-ம் திகதி, மட்டக்களப்பு வந்தாறுமூலையில், ஒரு அதிகாரி உட்பட 41 இராணுவத்தினர் கொல்லப்பட்டதானது, அரச படைகளை நிலைகுலையச் செய்துள்ளது. இத் தாக்குதலின் போது, இராணுவத்தினர், ஒன்று கூடும் புலிகள் மீது தாக்குதல் நடத்தச் செய்வதான ஒரு கெரில்லா உத்தி கையாளப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகிறது. தாக்குதல் நடத்த வந்த படையினரை அவர்கள் எதிர்பாராத ஓரிடத்திற்கு இழுத்துத் தாக்கி அழித்தது, ஏமாற்றித் தாக்குதல்




(deception) என்ற உத்தியாக வரையறுக்கப்படுகின்றது. இதனைத் தொடர்ந்து, திருகோணமலையில் புல்மோட்டையில் மார்ச் மாதம் 25-ம் திகதி நடைபெற்ற தாக்குதலின் போதும் 15-க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டுள்ளனர். இத்தாக்குதல்களின் போது, போராளிகளின் இழப்பு மிகக் குறைவாக இருந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. இரண்டாவது வகையாக நாம் குறிப்பிடும் இத்தாக்குதல்களின் விளைவாக, இராணுவம் தனது தாக்குதல் திட்டங்களை கிழக்கில் தற்காலிகமாக கைவிடும் நிலையும், போராளிகள் விடுவிக்கப்பட்ட பகுதிகளை மேலும் ஸ்திரப்படுத்தும் சூழ்நிலையும் ஏற்படுகின்றது.

மூன்றாவது வகையாக, எதிரியின் பகுதிக்குள் நடைபெறும் தாக்குதல்களைக் குறிப்பிடலாம். கொழும்பில் இராணுவ, பொருளாதார இலக்குகள் மீது நடைபெறும் தாக்குதல்கள் அரச இயந்திரத்தை முடங்கச் செய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கின்றது. மார்ச் மாதம் 16-ம் திகதி நடைபெற்ற அனுராதபுரம், கெப் பட்டிப்பொலவில் நடைபெற்ற தாக் குதலும், அதன்போது அரசபடை யினர் 9 பேர் கொல்லப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. இவ்வகைத் தாக் குதல்கள், போரை, அரசாங்கத்தின் வாசற்படிக்குக் கொண்டு வந்து விடுகின்றது. இதன் காரணமாக அரசியல் ஸ்திரம் பாதிப்படைந்து, பொருளாதாரச் சீர்குலைவு ஏற் பட்டு, சமூகப் பிரச்சினைகள் மோச மடைவதோடு அடக்கும் தேச மக்க ளிடையே போரின் மீதான வெறுப் பையும், சமாதானத்தின் மீதான விருப்பத்தையும் தோற்றுவிக்கிறது.

4-வது வகைத் தாக்குதல்களை விநியோகங்கள் மீது நடைபெறு கின்ற தாக்குதல்களாக வகுக்கலாம். விமானங்கள், கப்பல்கள், விநியோக வாகனங்கள் மீதான தாக்குதல்கள் இதனுள் அடங்கும். இத்தகு தாக் குதல் ஒன்று, மன்னாரில் மார்ச் 15-ம் திகதி அன்று இடம்பெற்றது. கடற் புலிகளால் சிறீலங்கா கடற்படையி னர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக் குதலின் போது ஒரு பீரங்கிப்படகு அழிக்கப்பட்டு, ஒன்று பாரிய சேத மாக்கப்பட்டு, இன்னொன்று கைப் பற்றப்பட்டது. புதிதாக வாங்கிய பீரங்கிப் படகுகளை வைத்துக் கடற்பயிற்சியில் ஈடுபட்டுக்கொண்டி ருக்கும்போது, கொழும்புக்கு அதிக தூரமில்லாத கடற்பரப்பில் இத்தாக் குதல் நடைபெற்றதாகவும், கடற் படையினர் பலர் கொல்லப்பட்ட தாகவும் கூறப்படுகின்றது. இவ்வகைத் தாக்குதல்களால் வடபகுதியில் நிலைகொண்டுள்ள இராணுவத்தி னருக்கான விநியோகங்கள் பாதிக் கப்படுவதோடு, யுத்த செலவீனம் அதிகரித்து பொருளாதார நெருக்கடி ஏற்படுகின்றது.

இத் தாக்குதல்கள் அனைத்தும் ஒரு மாத காலத்துக்குள்ளேயே நடைபெற்றுள்ளன. இதன்போது 100க்கு மேற்பட்ட இராணுவத்தினர் கொல்லப்பட்டு, ஏராளமான ஆயுத தளபாட இழப்புக்களும் ஏற்பட்டுள் ளன. இத்தகு மோசமான நிலையைச் சமாளிக்க ஜெனரல் அனுருத்த ரத்வத்த என்ன செய்யப் போகி றார்? இதற்குத் தீர்வாக மேலும் பாரிய படை எடுப்பு முயற்சிகளில் இறங்கப் போகிறார். இராணுவத்தை ஓரிடத்தில் நிலைகொள்ள விடாது யாழ் குடாநாட்டின் வடமராட்சி, தென்மராட்சி பகுதிகள் மீதோ, பிரதான நிலத்தில் கிளிநொச்சி மீதோ படை எடுப்பை நடத்தப் போகிறார். விமானங்கள், உலங்கு வானூர்திகள், டாங்கிகள், கவச வாகனங்கள் ஆகியவற்றினைப் பயன் படுத்தி, தனது இராணுவத்துக்கு சாதகமான பாதைகள் மூலம் பாரிய படை நகர்வொன்றை நடத் தப் போகிறார். இதன் விளைவுகள் என்ன? இன்னும் பல இலட்சக் கணக்கான தமிழ் மக்கள் அகதிகள் ஆவார்கள். ஆயிரக்கணக்கான பொது மக்கள் இறக்கவும் காயமடையவும் நேரிடும். இதன் உடனடி விளை வாக, பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் போராட்டத்தில் இணையும் சந்தர்ப்பம் ஏற்படும். இராணுவம் கைப்பற்றி வைத்துள்ள மக்கள் அற்ற வெறும் நிலப்பகுதிகள் மேலும் விஸ்தரிக்கப்படலாம். அப்பகுதிக ளைப் பாதுக்காக்க மேலும் இராணு வத்தினர் கொண்டு வந்து இறக்கப் பட்டு, பரவலாக்கப்பட்டு, அப்பகுதி களில் கட்டுண்டு இருக்கும் நிலை ஏற்படும். அரச இராணுவத்துக்குப் பாதகமான பகுதிகளில் மரபு ரீதி யான சண்டைகளை நடத்தி விடுத லைப் புலிகளை, அதன் தலைமையை அழித்தொழிக்கும் திட்டம் நிறை வேறப் போவதில்லை. அதனை விடு தலைப் புலிகளின் கிழக்கு மாகா ணத் தாக்குதல்கள் எடுத்துக்காட்டு கின்றன. எனவே தமிழரின் தாயகப் பகுதிக்குள் நன்றாக ஊடுருவி பர வலாக்கப்பட்ட இராணுவம் படிப் படியாக அழிக்கப்படும் நிலையே அதிகரிக்கும். அதனது இராணுவக் கருவிகளும் அழிக்கப்படும். இதனால் பெரும் அரசியல், பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும். இந்நெருக் கடியைச் சமாளிக்க வெளிநாட்டு உதவிகளும் பயன்படா. எனவே சுன் சூ கூறியது போல் ஆபத்தான நிலையில்தான் சிறீலங்கா இராணு வம் சிக்குண்டுள்ளது.

**- வளவன்**

---

**அன்பார்ந்த எரிமலை வாசகர்களே!**

**தாய்நிலம் பிரிந்து நொய்ந்த மனித வாழ்வு. துயர், விழி மூட ஆவி துடிக்கின்றது. செடில் காவடி ஆட்டக்காரனைப்போல மண்ணை நோக்கி இழுபடும் மனதுக்கு தீராத வலி. காலை என்ன கட்டிப் போட்டிருக்கிறது? ஏன் இந்த அவலம்? எழில் மிக்க தாயகத்தின் இருப்பை இழந்தவன் துயரத்தை சொன்னால் தானே மற்றவர்களுக்குப் புரியும். பனிமூட்டம் நிறைந்த பாதைகள் - தெளிவற்ற நிலையில் நின்று கொண்டு வாழ்க் கையைத் தேடுவது தொடர்கிறது. எங்களை நாங்களே தேடு கின்ற காலம் நெருங்கி விட்டது. யார் யாருக்கோவெல்லாம் அகதி மனிதர் நாங்கள் இடைஞ்சலாக, துன்பமாக இருப்பதான உணர்வுகள் வெளிக்கிளம்பத் தொடங்குகின்றன.**

**உலகமெங்கும் வாழும் கவிஞர்களே!**

**எங்களின் கதையை படைப்பாக்குங்கள். உங்கள் கவிதைகள் அடங்கிய தொகுப்பை 'தாய் மண்' வெளியீடாக நாங்கள் வெளிக்கொணர உங்களாலான அனைத்து உதவிகளையும் ஆற்றுமாறு வேண்டுகின்றோம். உங்கள் ஆக்கங்களை எரிமலை முகவரிக்கே எழுதி அனுப்பிவைக்குமாறும், ஆவணி 10-ம் திக தியை இறுதித் திகதியாக கொண்டு செயற்படுமாறும் பணி வன்புடன் வேண்டுகின்றோம்.**

**இது குறித்த மேலதிக விடயங்களை எரிமலையின் முகவரிக்கு கடித மூலம் எழுதி அறிந்து கொள்ளுங்கள்.**

**- எரிமலை ஆசிரியர் குழு.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாலைவனக் கிராமம்

"முதல் தடவையாக சிறீலங்கா அணி உலக்கிண்ணக் கிரிக்கெட் இறுதியாட்டத்தில் விளையாடுகிறது. இந்தச் செய்தி வானொலிகளையும் தொலைக்காட்சிகளையும் ஆக்கிரமித்துக் கொண்டிருந்த நேரம் தமிழீழத்தின் மன்னார் மாவட்டத்திலுள்ள நாச்சிக்குடா எரியுண்டு போன புகை சாம்பல் மேடுகளிலிருந்து கிளம்பி விண்ணோக்கி அடர்ந்து கொண்டிருந்தது. சிங்கள அணியின் வெற்றிக்காக நாச்சிக்குடாவில் நரபலி எடுத்துவிட்டே துடுப்பெடுத்தாடிக் கொண்டிருக்கும் அவலத்தை அறியாது வானலைகளில் புரண்டு கொண்டிருந்த கிரிக்கெட் செய்திகளை, தடுத்து நிறுத்தி நீதி கேட்டுக் கொண்டிருந்தது அந்தப் புகைக் காண்டம்.




இன்று பாலைவனக் கிராமமாகிப் போயுள்ள நாச்சிக்குடா தமிழீழத்தின் ஓர் அழகான பூமி. விவசாயக் கிராமமான முழங்காவிலில் இருந்து சிறு தொலைவில் அமைந்திருக்கும் இயற்கை கொஞ்சும் எழில் நிலம் அது.

அங்கு வாழும் மக்கள், ஏற்கனவே நடைபெற்ற இனவெறித் தாக்குதல்களால் பலரைப் பறிகொடுத்து, உடமைகளை இழந்து அகதிகளாக்கப்பட்ட நிலையில் வாழ்ந்து வரும் அப்பாவிகள். அம்மக்கள் மீதான கொடூரத் தாக்குதல்களை விமானப் படையினர் நடாத்தியிருக்கிறார்கள். சிறிலங்கா அரசின் MI-24 ரக உலங்கு வானூர்திகள் தாக்குதல்களை நடாத்தி 16 மக்களைக் கொன்றுள்ளன. மக்கள் தப்பி ஓட முடியாதவாறு அரைமைல் தூரத்திற்கு சுற்றி வளைத்து உலங்குவானூர்திகள் தாக்குதலை மேற்கொண்ட போது அறுபதுக்கு மேற்பட்ட மக்கள் படுகாயமடைந்தார்கள்.

இவ் வருடத் தொடக்கத்தில், அனுராதபுரத்திற்கருகில் உள்ள கிராமம் ஒன்றில் இருந்த சிங்கள குடியேற்றவாசிகளுக்கு நம்பிக்கை ஊட்டும் முகமாகவும், தங்களின் படைப்பலத்தை காட்டும் முகமாகவும், எழும்பி, குத்தி, சுற்றிப் பறந்தெல்லாம் சாகசம் காட்டியதும், அருகிலுள்ள காட்டுக்குள் குண்டுகளை வீசி வெடிக்க வைத்துக்காட்டியதுமான அதே உலங்கு வானூர்திகளே 16.3.96 அன்று அதிகாலைப் பொழுதில் மக்கள் கண் விழித்தெழ முன் நாச்சிக்குடா கிராமத்தைச் சுடுகாடாக்கியது. அக்கிராமத்தின் கோரக்காட்சி மனநோய் முற்றிய வெறியரசின் கையறு நிலையை காட்டி நிற்கிறது.

மன்னார் கடற்பரப்பில் கடற்புலிகளின் தாக்குதலுக்குள்ளான நிகழ்வால் ஆத்திரமடைந்த சிங்கள அரசு, விமானப்படையை ஏவி விட்டிருக்கிறது. தனது வெறிப்பற்களை நாச்சிக்குடாவின் அப்பாவிப் பொது மக்களின் மீது ஆழமாகப் பதித்திருக்கிறது.

தன்னுடைய ஒவ்வொரு தோல்வியின் போதும் அப்பாவிப் பொது மக்கள் மீது பழி தீர்க்கும் செயற்பாடானது சிறிலங்கா அரசினதும் அதன் இராணுவத் திட்டங்களும், கொல கொலத்துப் போய்விட்டதால் ஏற்படும் ஆற்றாமையையே காட்டுகின்றன. அண்மையில் இங்கிலாந்திலுள்ள ஸ்கொட்லாண்டில், அமைதியான டன்பிளேன் கிராமத்தில் 16 பள்ளிச் சிறார்களும், ஒரு ஆசிரியையும் மனநோயாளி ஒருவரால் கொல்லப்பட்ட நிகழ்வுகளை இப்போது உலகம் பேசிக்கொண்டிருக்கிறது. ஆனால், அதே தனிமனித மனநோயாளியின் நிலையில் - ஒரு அரசே மனநோயாளி நிலைக்குள்ளாகி வெறியாட்டம் ஆடும் அவலம் தமிழீழத்தில் நடந்து கொண்டிருக்கின்றது. சந்திரிகா அரசு நாகர்கோயில் மகாவித்தியாலயத்தில் குண்டு வீசி பள்ளிச் சிறார்களை கொன்ற நிகழ்வை அறிந்த எவரும் டன்பிளேன் மனநோயாளியை விட சிங்கள இன வெறியர்கள் மிகப்பாதகமானவர்கள் என்பதை கண்டுகொள்வார்கள். நாச்சிக்குடாவில் எரிந்து கொண்டிருக்கும் தீ நிலைகுலைந்து போன இனவெறியரசின் இறுதிக்காலத்திற்கு சாவு மணி அடித்துக்கொண்டிருக்கிறது. ஆம், சிறிலங்கா அரசு, டன்பிளேன் கொலையாளி போல தற்கொலைப் பாதைக்குள் முற்றாகப் பிரவேசித்துவிட்டது தெரிகிறது.

**- கீரன்**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


www.tamilarangam.net

## தாண்டிக்குளம்: வதைமுகாம்

# சுவர் எழும்புகிறது

அண்மைக்காலமாக தாண்டிக்குள முகாமில் என்றுமில்லாதவாறு கொழும்பு செல்லும் பிரயாணிகள் மீது காட்டுமிராண்டித்தனமான முறையில் சிறீலங்கா இராணுவத்தினர் நடந்து கொள்ளுகின்றனர். ஏராளமான மக்கள் வவுனியாவில் உள்ள முகாங்களில் கொழும்பு செல்வதற்கு அனுமதி கேட்டு தவம் கிடக்கிறார்கள். கொழும்பு செல்வதற்கான அனுமதி எல்லோருக்கும் எளிதில் கிடைத்து விடாது. மேல் விசாரணைகளுக்காக பிரயாணிகளது பெயர் விபரம் கொழும்புக்கு அனுப்பப்பட்டு அங்கிருந்து முடிவு வரும் வரை காத்து இருக்குமாறு கூறுகிறது இராணுவம். அப்படிக் காத்திருக்கும் மக்களை கடுமையாகத் தாக்கி அடித்து துன்புறுத்துகின்ற சம்பவங்கள் பலவும் தொடர்கின்றன. மனித நாகரிகம் அங்கு காலில் நசிபடுகிறது. இந்த நூற்றாண்டிலேயே வாழ்ந்த நாசிகளின் வழித் தோன்றல்களாக சிங்களப் பேரினவாதிகள் உருவாகி வருகிறார்கள்.

தாண்டிக்குள இராணுவ முகாமில் பல்கலைக்கழக மாணவன் ஒருவர் கொழும்பு செல்ல அனுமதி கேட்டு நின்றபோது கழுத்துத் நெரித்துக் கொல்லப்பட்டார். இச் செயலானது கல்வியை, மாணவர்களின் நம்பிக்கையைச் சிதைக்க முயன்ற செயலாகவே கருதப்படுகிறது.

இச் செயலை நேரில் பார்த்த ஒருவர், கொழும்பு செல்வதற்காக வந்த அவர்களை சில நாட்கள் தடுத்து வைத்திருந்ததாகக் கூறுகிறார். அவர்களின் பெயர், முகவரி, தொழில், நடவடிக்கைகள் குறித்து உளவுப் பிரிவினர்க்கு அனுப்பியிருப்பதாகவும் அங்கிருந்து முடிவு வந்தவுடன் கொழும்பு செல்ல அனுமதிக்கலாம் என்றும் கூறியிருக்கிறார்கள். சில நாட்களின் பின்னர் இராணுவ அதிகாரி ஒருவர், அந்த மாணவனுடன் சேர்த்து எட்டுப் பேரை விசாரணைக்காக அறையொன்றுக்குள் அழைத்துச் சென்று "நீங்கள் புலிகளின் தற்கொலைப் படையணிகள்தானே" எனக் கேட்டு மிரட்டியுள்ளார். அந்த மாணவன் அவரது கூற்றை மறுத்து தனது சான்றிதழைக் காட்டியிருக்கிறார். அதனை ஏற்காத அதிகாரி அம்மாணவனின் கழுத்தைப் பிடித்து நெரித்தபோது, அம்மாணவன், தன்னை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கெஞ்சியிருக்கிறார். ஆனால் அதிகாரி, "தற்கொலைப் படையாளியின் பலம் எவ்வளவு என்று பார்க்கப்போகிறேன்" என்று கூறி அவரது கழுத்தைப் பிடித்து சுவரோடு சேர்த்து தூக்கியபோது, அம்மாணவன் மூச்சுத்திணறி துடிதுடித்து பரிதாபமாக இறந்துள்ளார். வெறி பிடித்து நின்ற அதிகாரி அங்கு நின்றவர்களை கால்களால் பலமுறை உதைத்து, சடலத்தையும் தூக்கிக் கொண்டு ஓடுங்கள் என்று துரத்தி விட்டதாகத் தெரிவித்தார்.

பெருமளவிலான பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் தங்களையும் இணைத்துக்கொண்டுள்ளார்கள் என்ற செய்தி இராணுவத்திற்கு ஆத்திரமூட்டுவதாக இருந்திருக்கிறது. இராணுவ மனோநிலையை வெளிப்படுத்துவதாக அந்தகொலைச் சம்பவம் விளங்குகிறது.

கொழும்பிலுள்ள தமது உறவினர்களை சந்திப்பதற்காகவும், இன்னோரன்ன பல காரணங்களாலும் கொழும்புக்கு செல்லும் தமிழர்கள் சித்திரவதைக்குள்ளாக்கப்படுவது, அடித்துத் துன்புறுத்தப்படுவது, கொலைசெய்யப்படுவது, காணாமல் போவது தொடர்கின்றது. பிரயாணிகளிடமிருந்து அடையாள அட்டை போன்ற ஆவணங்களை வாங்கித் தீக்கிரையாக்கி விட்டு ஆவணங்கள் ஏதும் இல்லை என்று கூறிக் கைது செய்திருக்கிறார்கள். புழுதிப் படலம் கிளம்புகிறது. மக்கள் கூட்டமாய் ஓடுகிறார்கள். இராணுவம் குண்டாந்தடிகளாலும், பொல்லுகளாலும், கம்பிகளாலும், துப்பாக்கியின் அடிப்பாகங்களாலும் அடித்துத் துரத்துகிறது. அடிமைக

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ளைப் போல மக்கள் ஓடுகிறார்கள். "இந்தப் பக்கம் இளைஞர்கள் யாரும் வரக்கூடாது" என்று எச்சரிக்கை வேறு விடுத்திருக்கிறார்கள்.

அவசர சிகிச்சைக்காக செல்லும் நோயாளிகள் கூட கொழும்பு கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகி றார்களில்லை. வவுனியாவில் உள்ள மருத்துவ அதிகாரியின் பரிசோத னையின் பின்னரே கொழும்பு கொண்டுசெல்ல அனுமதிக்கப்படு வதாக தெரிவிக்கிறார்கள்.

வெளிநாடு சென்று திருமணம் செய்வதற்காக வந்த இளம்பெண் ணொருத்தியின் கதை இது. பல் கலைக்கழக மாணவன் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்ட அதே தினத்தில், அவரது தந்தையார் எதி ரேலேயே அவர் இராணுவ அதி காரி ஒருவரால் பலமாகத் தாக்கப் பட்டார். காதுகளால் இரத்தம் வடிந்த நிலையில் தந்தையின் நெஞ் சில் சாய்ந்தார் அந்தப் பெண். இவை போன்ற மிகப் பயங்கரமான கொடுமைகள் - மனிதனுடைய வாழ்வில் நம்பிக்கைகளைத் தகர்த்து, இந்த உலகில் மனிதம் செத்து விட் டது என்ற ஆபத்தான கருதுநிலைக்கு மக்களைத் தள்ளிவிடுகின்றன.

தனது தாயுடன் கொழும்பு செல்வதற்காக எனச் சென்ற பெண் ணொருத்தியை முகாமில் தடுத்து வைத்து விட்டு தாயைக் கொழும்பு செல்லும்படி கூறியிருக்கிறார்கள். ஆனால் தாயோ வேப்பங்குள முகா மில் இருந்து விட்டு மறுநாள் சென்று தனது மகளைப்பற்றி விசாரித்திருக்கிறார். இன்னும் விசா ரனை முடியவில்லை என்று கூறி அனுப்பி வைத்து விட்டார்கள். தாய் சில தினங்கள் கழித்து மீண் டும் சென்று தனது மகளை விடு விக்கும் படி கேட்டபோது அவளது சடலத்தை விடுதலைப்புலிகளிடம் ஒப்படைத்து விட்டோம் என்று கூறியிருக்கிறார்கள். தாயிடமிருந்து அவள் பிள்ளையைப் பிரிப்பது என்கிற காரியத்தை யாரால் செய்ய முடியும்? தாய் துடித்தழுதாள்.

வவுனியாவில் இருந்து கொழும் புக்குச் செல்லும் லொறிகள் பேலிய கொட பகுதியால் செல்லவேண்டு மெனவும் அப்பகுதியால் லொறி செல்லும் வேளையில் இராணுவத் தினரே ஓட்டிச் செல்ல வேண்டுமெ னவும் இராணுவத்தினர் கட்டுப் பாடு விதித்திருக்கின்றனர். அத் தோடு வவுனியா இராணுவக் கட் டுப்பாட்டுப் பகுதியில் வாழும் சார திகளே லொறிகளைச் செலுத்திச் செல்ல வேண்டும் என்றும் அல்லது அவர் தனது வசிப்பிடத்தை இரா ணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு மாற்றிக் கொள்ள வேண்டும் என வும் நிபந்தனைகள் விதிக்கப்பட்டி ருப்பதாக அறியப்படுகிறது. இது கொழும்பு பாதுகாப்புக் குறித்து மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாகக் கூறப்படுகிறது.

www.tamilarangam.net

கொழும்பில் வாழும் தம் இனிய உறவுகளைச் சந்திக்க முடியாதவாறு பேரினவாதிகள் பெரும் சுவர் எழுப்பி வருகிறார்கள். இந்த சுவர்க ளுக்கு அப்பால் வாழும் எமது மக் கள் ஒருவரை ஒருவர் சந்திக்க முடி யாதவாறும், தாய் அங்கும், தந்தை இங்கும், பிள்ளைகள் திக்குமாய் உறவுகள் சிதைந்து நிற்கிறார்கள். 5 லட்சத்துக்கு அதிகமான மக்கள் வீடு, வாசல்கள், நில புலன்களை, பொருள் பண்டங்களை, கால்நடை களை, உயிர்ப்புமிக்க வாழ்வினை இழந்து நிர்க்கதியாகி நிற்கும் இவ் வேளையில் பணத்துக்காகவும், வெளி நாடுகளில் வாழும் தம் பிள்ளைக ளுடனான தொடர்புகளுக்காகவும், மருந்துகளுக்காகவும், உடுபுடவை களுக்காகவும் பல்வேறு தேவைக ளின் நிமித்தமும் கொழும்புக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் இருக்கிறது. காரணம், பொருளாதார வசதிகளோ, கடித, தொலைதொடர்புகளோ அவர்களுக்குத் தடைசெய்யப்பட்டி ருப்பதுதான். பதுங்குகுழிக்குள்ளும், காடுகளுக்குள்ளும், தற்காலிக கூடா ரங்களுக்குள்ளும் அகதிகளாய் துன் புற்றுக் கொண்டிருக்கும் மக்கள் மீது இன்னும் சொல்லொணாத் துயர வடுக்களை சிறிலங்கா அரசும் அதன் இராணுவமும் ஏற்படுத்தி வருகிறது.


எங்கெங்கு இராணுவம் தமிழர் பிரதேசங்களை ஆக்கிரமித்து வைத் திருக்கிறதோ அங்கெல்லாம் அது சுவர்களை எழுப்பியபடிதான்.

தமிழ் இனத்தைக் கூறுபோட்டுச் சிதைத்து விட நினைக்கும் சிங்கள அரசின் தந்திரோபாயங்களில் சில தமிழ்க்குழுக்களும் சிக்கி நிற்கின்றன என்பதுதான் கவலையளிக்கிறது.

சிங்கள பெரும் தேசிய வாதம் வெறிபிடித்த நிலைக்கு வந்து இருக் கிறது. அது தமிழ்த் தேசியத்தை முடமாக்கி விட, அதன் விடுதலை வேட்கையைக் கொன்று விடத் துடிக்கிறது.

உயிர்ப்புமிக்க கலை, பண்பாடுக ளைச் சிதைத்து முகமற்றவர்களாக்க அது முயல்கிறது. அண்மையில் மேற்கொள்ளப்பட்ட 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையின் பின்ன ரும் இத்தகைய ஒரு பேரினவாதப் பசி தீராத சிங்கள பாசிச அரசும் அதன் கூலிப்படைகளும் இன்னும் இரத்த வெறியோடு எமது மண் ணைத் தொடர்ந்து ஆக்கிரமிக்கவே முயல்கின்றன.

இந்த பெரும் சுவர்களைத் தாண்டி எமது தேச மக்கள் ஒன்றாய் கலந்து வாழும் நாள் உருவாகும். வதை முகாம்களுக்குள்ளும் சுவர்க ளுக்குள்ளும் விடுதலை வேட்கையை ஆக்கிரமிப்பாளர்கள் கொன்று போட லாம் என்று பிழையாகக் கணக்குப் போட்டிருக்கிறார்கள் என்பதை காலம் தாழ்த்தியேனும் உணர்ந்து கொள்ள நேரும்.




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

## மக்கள் இனிய வண்ணம் வாழ

www.tamilarangam.net

# மலையைத் தகர்க்கும் உறுதியுடன் தமிழர் புனர்வாழ்வுக் கழகம்

"நீங்கள் எமது தேசத்து மக்களுக்கு இங்கிருந்து கொண்டு ஏதாவது செய்ய வேண்டும் என்று நினைப்பீர்களேயானால் அதனை இப்போதே செய்யுங்கள். காலம் கடந்து ஏதும் செய்வதால் ஒரு பயனும் ஏற்பட்டுவிடப் போவதில்லை" நாட்டு நிலவரங்களை வெளிநாடொன்றிலுள்ள தனது மகனுக்கு தொலைபேசியில் கூறிய போது இவ்வாறு அந்தத் தந்தையார் அழுத்திக் கூறினாராம்.

வீடு வாசல்களை இழந்து நிர்க்கதியாக நிற்கும் எமது மக்களின் வாழ்வை வளப்படுத்த வேண்டியது இன்று வெளிநாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் சகோதரர்களின் கடமைகளில் ஒன்று. அவர்கள் இதனை உணர்ந்து செயற்படுகிறார்கள் என்ற செய்தியை அறிந்து, அது குறித்து தமிழர் புனர்வாழ்வுக்கழக இணைப்புச் செயலாளர் சி. விபுலேந்திரன் அவர்கள் தமிழீழத்திலிருந்து அனுப்பிய செய்தியில் "அல்லல் படும் எமது மக்களுக்கு நீங்கள் அனைவரும் வழங்கிவரும் பேருதவியானது என்றுமே மறக்கமுடியாதது." என தமது நன்றி உணர்வை தமிழீழ மக்கள் சார்பில் தெரிவித்திருந்தார்.

வலிகாமப் பகுதியில் இருந்து 5 லட்சத்துக்கு மேற்பட்ட மக்கள் இடம்பெயர்ந்து சென்றபோது அந்த மக்களின் வாழ்வு நிலை எந்தளவுக்கு பாதிக்கப்பட்டிருக்கும் என்று சொல்ல வேண்டியதில்லை.

இந்த நெருக்கடி நிலையை சமாளிப்பதென்பது சாதாரணமான விடயமல்ல; ஆக்கிரமிப்பாளர்களோடு போர் நடந்து கொண்டிருக்கிறது. சகலதின் மீதும் சிறிலங்கா அரசு தடை விதித்திருக்கிறது. இந்த மலை போன்ற தடைகளையெல்லாம் உடைத்து மக்களைப் பராமரிக்கும் முதல் நிறுவனமாகவும், மிகப்பெரிய நிறுவனமாகவும் தமிழர் புனர்வாழ்வுக்கழகமே செயற்பட்டு வந்திருக்கிறது; வருகிறது.

உலகம் ஒரு முறை உற்றுப் பார்த்தது. எப்படி இவ்வளவு பெருந்தொகையான மக்களைப் பராமரிக்கப் போகிறார்கள் என்ற கேள்வி மிகப் பெரிதாக எழுந்து நின்றபோது புனர்வாழ்வுக் கழகம் அதனை தன் தோளில் சுமந்து சென்றது.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் சேவையைப் புகழாதவர்கள் ஒருவரும் இல்லை என்றே கூறலாம். உலகச் செய்தித் தாபனங்கள் சிலவும் தமது பிரமிப்பை வெளிக்காட்டிப் பேசின. மண்ணில் இருந்து வெளிவரும் பத்திரிகைகள், செய்தித்துறை சார்ந்த அனைத்து ஊடகங்களும் அதன் சேவையைப் பாராட்டி எழுதின. மண்ணிற்குச் சென்று மக்களின் நிலைமைகளைப் பார்வையிடச் சென்ற சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்களும் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் நிறைவான சேவையை மனமாரப் பாராட்டிச்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சென்றிருக்கின்றன; செல்கின்றன. அத்துடன் தமது வேலைத்திட்டங் களை தமிழர் புனர்வாழ்வுக் கழகத் தினூடாகவே செயற்படுத்தத் தொடங்கியுள்ளன.

இந்த வகையில் சர்வதேச செஞ் சிலுவைச் சங்கம் (I.C.R.C), அகில உலக கெயர் ஸ்த்தாபனம் (C.A.R.E), சிறுவர் பாதுகாப்பு நிதியம் (S.C.F-U.K), ஒக்ஸ்பாம் (OXFAM), அகதிக ளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகர் ஆலயத்தின் விசேட ஆணையாளர் (UNHCR), ரெட்பானா (REDBAR NA), போரூட் (FORUT), பிரான்ஸ் மருத்துவக் குழு (M.S.F) போன்ற சர்வதேச ஸ்தாபனங்கள் கூட தமி ழர் புனர்வாழ்வுக் கழகத்தினூடா கவே தமது வேலைத் திட்டங்களை செயற்படுத்த ஆர்வம் கொண்டு செயற்படுகின்றன. இந்த வகையில் பல வேலைத்திட்டங்களை தமிழர் புனர்வாழ்வுக் கழகம் செயற்படுத்தி வருகிறது.

இந்தச் செயற்பாடுகளை சந்தி ரிகா அரசு முறித்துக் கொட்டிவிட நிற்கிறது. விழுந்தவனை மாடு ஏறி உழக்கும் செயலாய் இது இருந்து மக்கள் மனதில் பயங்கரமான கொதிப்பைக் கொட்ட வைத்திருக் கிறது. கூரைத் தகடுகள், கட்டிட உபகரணப் பொருட்கள், சீலைத் துணியிலான கூடாரங்கள், இடம் பெயர்ந்த மாணவர்களுக்கான பாட சாலை உபகரணங்கள் அனைத்தை யும் தடுத்து வருகிறது. அத்தோடு அரச சார்பற்ற நிறுவனங் களை சுயாதீனமாக இயங்கவிடாது தடுத்து வருவதோடு, இராணுவம் அவர் களை மிரட்டிய சம்பவங்களும் நிகழ்ந்திருக்கின்றன.

மக்களின் வாழ்க்கையில் உள்ள துன்பங்களைத் துடைத்து அவர்க ளுக்கு நல் வாழ்வை அமைப்பதே தங்களின் நோக்கமாக கொண்டு இயங்கும் புனர் வாழ்வுக்கழகம், இடம் பெயர்ந்த மக்களுக்கான முகாங்களைத் திறந்து, அம் மக்க ளுக்கு இடமளித்து, ஆதரவளித்து, அரவணைத்து, உணவளித்து, அடிப் படை உதவிகள் வழங்கி, சுகாதார - குடிநீர் வசதியளித்து, குழந்தைகள் நலன்பேணி, வயோதிபர் - நோயா ளர்களைப் பராமரித்து, கர்ப்பவதி - பலூட்டும் தாய்மார்களுக்கும் குழந் தைகளுக்கும் போஷாக்குணவு ஊட்டி, இடம்பெயர்ந்த மக்களின் நலனில் தமிழர் புனர்வாழ்வுக் கழ கம் முன்னின்று உழைக்கின்றது.

www.tamilarangam.net

மக்களைப் பரா மரிப்பதற்கென்றே இது வரை 200-க்கு மேற் பட்ட நலன்புரி நிலை யங்களையும், வன்னிப் பகுதியில் 50-ற்கு மேற் பட்ட நலன்புரி நிலை யங்களையும் நிறுவி தமிழர் புனர்வாழ்வுக் கழகம் பராமரித்து வருகிறது.



சர்வதேச அரச சார்பற்ற நிறுவனங்க ளும், சகல உள்ளூர் நிறுவனங்களும் தமி ழர் புனர்வாழ்வுக் கழ கத்துடன் இணைந்து செயற்பட்டு வரும் நல்ல சூழல் தோன்றி யிருக்கிறது. சர்வதேசங்களிலும் வாழும் எமது மக்களிடம் பரிபூரண மான, மனமுவந்த, தருணம் அறிந்த பங்களிப்பையும், ஆதரவவையும் தமி ழர் புனர்வாழ்வுக்கழகம் வேண்டி நிற்கிறது.

தம்மை முழுமையாக அர்ப்ப ணித்துச் செயற்படும் தமிழர் புனர் வாழ்வுக் கழகத்தின் தொண்டர்க ளின் சேவை மிக முக்கியத்துவம் வாயந்ததாகும். குறைந்த வளத்து டன் மலை போன்ற தேவையை நிவர்த்தி செய்யும் பொறுப்பும் கட மைப்பாடும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்திடம் இருக்கிறது. இதனை மேலும் வலுப்படுத்தி, வளமாக்கி நிறைவுறச் செய்கின்ற பணிகள் சர்வ தேசமும் வாழும் சகோதரர்க ளின் கையில்தான் தங்கியிருக்கிறது. இந்த அவசரத் தேவையை அவர் கள் உணர்ந்து செயற்படவேண்டும் என்று தமிழர் புனர்வாழ்வுக் கழக இணைப்புச் செயலாளர் சி.விபு லேந்திரன் பணிவன்போடு கேட்டி ருக்கிறார்.

தெருவிலும், வீதியோரங்களிலும், மரநிழல்களிலும், பொது இடங்களி லும், முகாம்களிலும் வாழும் எமது மக்களின் வாழ்வு உங்கள் மனக் கண்களில் என்றும் நிழலாடும். வானமே கூரையாகி, வையமே வீடாகி நிற்கும் எமது மக்கள் மண் ணில் இனிய வண்ணம் வாழ உழைத்தலே இன்று எம்முன் உள்ள மிகப் பெரிய கடமையாகும்.



# வானமே கூரையாகி...

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மிதிபடும் மக்கள் வாழ்வு

மீன்பாடும் தேன் நகரம் என்று புகழப்படும் மட்டக்களப்பில் மனிதர்களின் அவலமான அழுகையொலிகளே திசை எங்கும் கேட்கிறது. சபிக்கப்பட்ட பூமியின் மக்களாக தொடரும் துன்பியல் வாழ்வு இன்னும் தொடர்கிறது. விடுதலைப் புலிகளின் தாக்குதலால் மனம் உடைந்து போகும் இராணுவம் அப்பாவி மக்களை துன்புறுத்துவது தொடர்கதையாக இருக்கிறது. போக்குவரத்து, கல்வி, மருத்துவம், சுகாதாரம், உணவு போன்ற அடிப்படை வசதிகளைக் கூடப் பெறமுடியாதவாறு இராணுவம் அனைத்தையும் தடுத்தும், அழித்தும் வருகிறது.

## கைகள் கட்டப்பட்ட நிலையில் சர்வதேச உதவி நிறுவனங்கள்

எப்பொழுதும் ஆக்கிரமிப்பாளர்கள் தாங்கள் தோல்வியுறும் போது மக்களை அழிப்பது, துன்புறுத்துவது, கொடுமைப்படுத்துவது எனக் கட்டற்றுச் செயற்படுவார்கள். அவ்வாறானதொரு நிலையில்தான் இன்று தென் தமிழீழ மக்களின் வாழ்க்கை இருக்கின்றது.

இராணுவ நடவடிக்கையின் போது காட்டுமிராண்டித்தனமாக, மிக மோசமாக அவர்கள் நடந்து வருகிறார்கள். விடுதலைப்புலிகளிடம் இருந்து தம்மைப் பாதுகாப்பதற்காக மக்களைக் கேடயமாக, கண்ணிவெடி கண்டுபிடிப்பவர்களாகப் பயன்படுத்திய நிகழ்வுகளும் நடந்திருக்கின்றன. இது மனித உரிமை மீறல் கண்காணிப்பாளர்களால் சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. "மக்கள் சிறிலங்கா இராணுவத்தை ஒரு விரோதமான அந்நியப் படையென்றே கருதுகிறார்கள்" என மனித உரிமைக்குழு வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

கொழும்பு - மட்டக்களப்பு வீதியிலும் அம்பாறை மட்டக்களப்பு வீதியிலும் இருமருங்கும் முகாங்கள் அமைத்துக் காவல் கடமைகளில் இராணுவத்தினர் ஈடுபட்டு வருகின்றனர்.

முக்கியமாக மக்கள் செறிந்து வாழும் பிரதான வீதிகளை மையமாக வைத்தே இந்த அந்நியப்படை நிலை கொண்டிருக்கிறது. இதனால் மக்கள் பெரிதும் கஸ்டங்களை எதிர்நோக்குகின்றார்கள். குறிப்பாக வாகரை, கரடியனாறு, படுவான்கரைப் பிரதேசங்களுக்கான போக்குவரத்துக்கள் ஓட்டமாவடி, செங்கலடி, வலையிறவு, களுவாஞ்சிக்குடிப் பாலங்களுக்கூடாக நடைபெறுவதால் பாலங்களில் இராணுவச் சோதனை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இந்நிலையங்களைக் கடந்து போகும் மக்கள் இராணுவத்தின் சித்திரவதைகளுக்கும், துன்புறுத்தலுக்கும் ஆளாகின்றனர். புல்லுமலை, கோம்பாவெளி மக்கள் இடம் பெயர்ந்து அகதிகளாக கித்தூர் பகுதியில் தற்காலிக கொட்டில்களில் வாழ்ந்து வருகின்றனர். மட்டக்களப்பில் அகதிகளாக இருந்தவர்களுக்கு சத்துருகொண்டானில் தற்காலிக குடிசைகள் கட்டிக்கொடுத்துள்ளார்கள். இவர்களுக்கு மாதாந்த உலர் உணவு அரசாங்கத்தால் ஏறுமாறாக வழங்கப்படுகிறது. போக்குவரத்தை இராணுவம் தடை செய்ததால் ஒரு மாதத்திற்கு மேலாக உணவுப் பொருட்கள் எதுவுமே செல்ல அனுமதிக்கப்படவில்லை. சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பாதுகாப்புடனேயே உணவு லொறிகள் கொண்டு செல்லப்படுகின்றன. மக்களின் துன்பமறிந்து செயற்படும் அரச சார்பற்ற நிறுவனங்களின் கைகளும் அங்கு கட்டப்பட்டுவிடுகின்றன. அவர்களும் இராணுவ அழுத்தங்களுக்குப் பயந்து அடிபணிந்து போகிறார்கள். இராணுவத்தினரிடம் மக்களின் கஸ்ட நிலைகளை எடுத்து விளக்கி இராணுவ அனுமதிக்கு அவர்கள் முயற்சிக்காது விட்டு விட்டுப் போய்விடுவார்கள். அரசாங்க அதிபர்கள், இராணுவத்தினரின் கட்டளைகளைக்குப் பணிந்து பேசாமலிருந்து விடுவதால் மக்கள் உணவின்றிப் பெரிதும் கஸ்டப்படுகின்றனர். மட்டக்களப்பில் தொண்டர் நிறுவனங்களாக 30-க்கு மேற்பட்ட அமைப்புக்கள் பணிபுரிகின்றன. வெளிநாட்டுப் பிரதிநிதிகள் பிரதான பாதைகளை அண்டிய அகதி முகாங்களிலேயே தங்கள் பணிகளைத் புரிகின்றனர். அரச உதவி இல்லாத

**தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு. கரிகாலன் அவர்களின் கடிதத்திலிருந்து சில குறிப்புகள்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூரப் பிரதேசங்களுக்கு எவருமே செல்வதும் இல்லை; மக்களின் குறைகளை அறிந்து தீர்ப்பதும் இல்லை. போக்குவரத்துக்கான பாதைகளை இராணுவம் ஆக்கிரமித்து வைத்திருப்பதால் மக்களுக்கிடையிலான தொடர்புகள் அறுந்துள்ளது. தம் இனிய உறவுகளைச் சந்தித்து, பேசி, ஆறும் நிலையிலும் அவர்கள் இல்லாதது அவர்களுக்கு மனக்கொதிப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இவ்வாறு சர்வதேச உதவி நிறுவனங்களாலும் கவனிக்கபடாது உட்பகுதிகள் அநாதரவாக விடப்பட்டுள்ளன.

இன்னும் அதிகமாக மட்டக்களப்பு நகரப்பகுதிக்குள் மக்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர். மாலை 6 மணிக்குப் பிறகு வெளியில் செல்ல முடியாதுள்ளது. புதுக்குடியிருப்பு S.T.F முகாம் கரும்புலித்தாக்குதலுக்கு உள்ளாகிய பிற்பாடு முகாங்களுக்கு முன்னால் வாகனங்கள் கொண்டு



செல்வது முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. புதிய பாதைகளால் வாகனங்கள் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

### கல்விப் பயிரையும் கருக்கிடும் ஆதிக்கக் கரங்கள்

போக்குவரத்துக்கான வீதிகளை இராணுவம் மூடி வைத்திருப்பதால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிப்படைந்து வருகிறது. செங்கலடிப் பாடசாலைக்குச் செல்லும் மாணவர்களும் படிப்பின்றி வீடுகளில் நிற்கின்றனர். கரடியனாறு, மரப்பாலம், கித்தூர், கோப்பாவெளி, புல்லுமலை மக்கள் அன்றாடச் சீவனத்திற்கு விறகு வெட்டி ஏறாவூரில் விற்பனை செய்தே சீவிப்பவர்கள். அனேகமானோர் வாகனப்போக்குவரத்து இல்லாததால் தொழில் இன்றிப் பட்டினி கிடக்கின்றனர். படுவான்கரை பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள், நகர்ப்பகுதிகளில் இருந்தே வரவேண்டுமாதலால் இராணுவ நடவடிக்கைகளுக்குப் பயந்து இடமாற்றம் பெறுகின்றனர். எஞ்சி நிற்பவர்களும் ஒழுங்காகப் பாடசாலைக்கு வராமையால் மாணவர்களின் கல்வி பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது.

### உயிர் காக்கும் வைத்திய சேவைகள் மீதும் தடை

அங்கு வைத்திய வசதிகள் எதுவுமே இல்லை. வாகரை வைத்திய சாலையை இராணுவ முகாமாக மாற்றி வைத்திருந்திருக்கிறார்கள். அதன் பிறகு அந்த வைத்திய சாலையை புனரமைத்து நோயாளிகளை நல்ல முறையில் பராமரிப்பதற்கான ஒழுங்கு வசதிகளை மேற்கொள்ளும் பொருட்டு 'நொராட்' நிறுவனம் நிதி ஒதுக்கீடு செய்திருந்தும் இராணுவம், கட்டிட வேலைக்கான பொருட்களையும், புனரமைப்பதற்கான வைத்திய உபகரணங்களையும் கொண்டு செல்ல அனுமதிக்காததால் வேலைகள் எதுவும் நடைபெறாது இருந்தது. இப்போது அந்த வைத்தியசாலையைச் சிங்கள விமானப்படையினர் குண்டு வீசித் தகர்த்துவிட்டனர். இந்த நிலையில் வாரத்திற்கு ஒருமுறை இலங்கை செஞ்சிலுவைச் சங்கம் நடமாடும் வைத்திய சேவையை நடாத்தி வருகிறது. காயான்கேணி, மாங்கேணி, பனிச்சன்கேணி, வாகரை, கதிரவெளி, கட்டுமுறிவு மக்களுக்கு இவ் வைத்திய சேவையினால் பயன் பெறமுடியவில்லை.

இதே போன்று மகிழடித்தீவு, நாவற்காடு, மகிழவெட்டுவான் வைத்தியசாலைகள் இயங்கவில்லை. மகிழவெட்டுவான் வைத்தியசாலை உடைந்த நிலையில் உள்ளது. மகிழடித்தீவு வைத்தியசாலைக்கென நொராட் நிதியில் புதிய கட்டிடம் கட்டப்பட்டும் தளபாட வசதி இன்மையாலும், வைத்தியர் இன்மையாலும் இயங்கவில்லை. நாவற்காடு வைத்தியசாலையும் வைத்தியர்கள் இன்மையால் இயங்கவில்லை. இப்பகுதிகளிலும் நடமாடும் வைத்திய சேவையே நடைபெறுகின்றது. பழுகாமம் வைத்தியசாலையில் இராணுவம் முகாமமைத்திருந்தனர். தற்போது திருத்தியமைக்கப்பட்டு ஒரு வைத்தியர் நியமிக்கப்பட்டுள்ளார். படுவான்கரைப் பிரதேச மக்கள் அனேகமானோர் பாம்புக்கடியி

## ஒரு துயரப் பகிர்வு

னால் வைத்திய வசதிகள் இன்றி மரணமடைகின்றார்கள். இராணுவ பிரதேசங்களில் போக்குவரத்து தடைசெய்யப்பட்டுள்ளதால் நகர்ப்பகுதிகளுக்கும் கொண்டு செல்ல முடியாமல் உள்ளது. திருப்திகரமான வைத்திய வசதிகள் இன்றி நோயினாலும், பசியினாலும் மக்கள் பெரிதும் கஷ்டங்களை அநுபவித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக அனேகமான வயல் நிலங்கள் செய்கை பண்ணப்படவில்லை. கடந்த வருடக் கடைசிப் பகுதியில் ஏற்பட்ட பெரும்வெள்ளம் காரணமாக அனேகமான வயல்கள் செய்கை பண்ணப்படாது கிடக்கின்றன. பல குளங்கள் உடைப்பெடுத்தமையினால் வயல்கள் எல்லாம் அழிந்து நாசமாகி விட்டது. அறுவடைக்காலத்தில் இராணுவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதால் மக்கள் வயல்களை விட்டு காடுகளுக்கு ஓடிச் செல்கின்றனர். இதனால் பயிர்கள் அழிந்து விட்டிருக்கின்றன. அறுவடை செய்து

தமிழத் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**– தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் துறையினர் தமிழீழ மக்களுக்கு விடுத்த அறிக்கையில் இருந்து..**

சிங்கள அரசு தொடர்ச்சியாக மீண்டும் மக்களை அழிக்கும் முயற்சிகளை முனைப்புடன் முடுக்கிவிட்டுள்ளது. எதிரிப்படை தனது விமானக் குண்டு வீச்சு, எறிகணைத் தாக்குதல் என்பவற்றாலும் உளவியல் ரீதியான அழுத்தங்களாலும் மக்களை கொன்றுவிட எண்ணி செயல்படும் வேளை நாம் இவ்வாறான எதிரியின் திட்டமிட்ட செயற்பாடுகளில் இருந்து மக்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டியமை இன்று அத்தியாவசியமாகின்றது. சிங்கள இராணுவத்தின் இன வெறி அழிப்பு நடவடிக்கைகள் இன்றைய காலங்களில் வேகங்கொண்டு காணப்படுவதை நாம் அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

இராணுவத்தின் ஆக்கிரமிப்பு பகுதிகளில் நேரடியாகவும் மற்றைய பகுதிகளில் குண்டுத்தாக்குதல், எறிகணை வீச்சு என்ற போர்வையிலும் மக்களை கொன்றுவிடுவதுடன் அவ்வாறு கொல்லப்பட்ட மக்கள் புலிகள் என அரசினது தொடர்பு சாதனங்கள் உள்நாட்டிலும் மற்றும் வெளிநாடுகளிலும் பிரச்சாரம் செய்து வருதை நாம் காணக்கூடியதாக உள்ளது.

இந்த வகையில் அண்மையில் இடம் பெற்ற திருமலை குமாரபுரம் படுகொலை, வவுனியா தாளம்பைக்குளச் சம்பவம் மற்றும் நாச்சிக்குடா தாக்குதல் என்பன அரசின் கொடிய இன அழிப்பாக மேற்கொள்ளப்பட்ட தொடர்சம்பவங்களாகும். இராணுவத்தின் அழிவு நடவடிக்கைகளில் இருந்து மக்களைப் பாதுகாக்க புலிகள் இயக்கத்தால் மேற்கொள்ளப்படும் பதில் தாக்குதல்களால் கோபம் கொண்ட இராணுவம் மக்களைக் கொல்வதும் அழிப்பதும் பின்னர் அவர்களை புலிகள் எனவும், புலிகளின் செயற்பாடுகளினால் கொல்லப்பட்டவர் எனவும் விளக்கம் கொடுக்கப்படுவதும் வழமையாகி விட்டமையால் எமது மக்கள் இவ்வாறான செயற்பாடுகளில் இருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கான தற்காப்பு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். மேலும் அவ் அறிக்கையில் எதிர்காலத்திலும் தொடரும் இராணுவ ஆக்கிரமிப்பு யுத்தத்தை எதிர்கொள்ளக் கூடிய வகையில் பதுங்கு குழி அமைக்குமாறும், இன்னோரன்ன பாதுகாப்பு ஏற்பாடுகளை முற்கூட்டியே செய்து வைத்திருக்குமாறும், அவற்றை சரியாக, ஒழுங்காக அசிரத்தையின்றி பேணுமாறும் அநியாயமான உயிரிழப்புக்களை இதன் மூலம் தவிர்க்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறது. போர்க்கால அறிவிப்புக்களுக்கு மக்கள் செவிசாய்த்து உடனடியாக அழிவுகளில் இருந்து எமது இனத்தைப் பாதுகாத்துக் கொள்ள விரைவாக பல வழிகளிலும் செயற்பட வேண்டிய அவசியம் குறித்தும் அவ்வறிக்கையில் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கொண்டு செல்லப்படும் நெல் மூடைகள் அனைத்தும் ரோட்டில் கொட்டப்பட்டு இராணுவத்துக்குக் காண்பித்த பின்னரே கொண்டு செல்ல அனுமதிக்கப்படுகின்றார்கள். இதனிடையே E.P.R.L.F, P.L.O.T, T.E.L.O தேசவிரோதிகளும் கப்பம் கேட்டு மிரட்டுகிறார்கள். இதனால் எந்த விதமான இலாபமும் இன்றி நஸ்டங்கள் அடைந்து பல விவசாயிகள் நெற்செய்கையையே கைவிட்டு விட்டனர்.

முஸ்லீம் மக்கள் ஓரளவு பிரச்சினை இல்லாமல் இருந்தாலும் இடையிடையே ஓட்டமாவடிப் பகுதியில் சில சில சம்பவங்கள் நடைபெறுகின்றன. சில ஓட்டமாவடி முஸ்லீம்கள் பொருட்கள் வாங்கச் சென்ற மாங்கேணிப் பெண்களைப் பாலியல் வல்லுறவில் ஈடுபடுத்திய சம்பவங்களும் ஆங்காங்கே நிகழ்ந்திருக்கின்றன. இதனால் மக்கள் கொதிப்படைந்திருக்கின்றனர்.

இவ்வாறு இராணுவத்தாலும், தமிழ்த் தேசவிரோதிகளாலும், சில முஸ்லீம் கூலிகளாலும், இயற்கையாலும் தென் தமிழீழ மக்கள் எதிர்கொண்டிருக்கின்ற அவல வாழ்வு என்று தீருமோ?

அடிக்கடி தமிழர் கிராமங்கள் சுற்றிவளைக்கப்பட்டு இராணுவ ஆக்கிரமிப்புக்குள்ளாகி வருகின்றன. அம்பாறை மாவட்டத்திலும், மட்டக்களப்பு மாவட்டத்திலும், ஆரையம்பதியிலும் S.T.F. அதிரடிப்படையினர் முகாங்கள் அமைத்துள்ளனர். ஏனைய இடங்களில் இராணுவமும், பொலிசும் நிலை கொண்டுள்ளனர். ஜானக பெரேராவால் பராமரிக்கப்படும் சிங்கள சுயாதீன விசேட படைப்பிரிவு தற்போது மட்டக்களப்புக்கும் கொண்டு வரப்பட்டிருக்கிறது.



தொடர்ச்சியாக ஆட்லறி செல் தாக்குதல் காட்டுப்பகுதிகளுக்குள்ளும், மக்கள் குடியிருப்புக்கள் மீதும் கண்மூடித்தனமாக மேற்கொள்ளப்படுகிறது. மக்கள் இரவு நேரங்களில் அவர்களின் வீடுகளில் தங்கியிருக்கக் கூடாது என்று இராணுவத்தினர் எச்சரித்தும் வருகிறார்கள். குறிப்பாக வாழைச்சேனையில் வாழும் மக்கள் மூட்டை முடிச்சுகளுடன் இரவு நேரங்களில் பொது இடங்களில் போய் தங்கிவருகின்றனர். மிக அண்மையில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையால் 5000-க்கும் அதிகமான மக்கள் தம் வாழ்விடங்களை விட்டு வெளியேறி காடுகளுக்குள் தஞ்சம் அடைந்திருக்கிறார்கள்.


இத்தகைய கொடிய இராணுவ அடக்குமுறைக்குள் சிக்கிய மக்களின் நெஞ்சங்களில் வேதனை கலந்த அடக்கமுடியாத ஆத்திரம் தீயாகக் கனலத் தொடங்கியிருக்கிறது.

அந்த மக்களின் துயர வாழ்வை வெல்ல நாங்கள் என்ன செய்யப் போகிறோம்?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோல்வி தந்த பாடம்


ஜி. எல். பீரிஸ்

இவ்வாறுதான் பிரச்சாரங்களை மேற்கொண்டாலும் யதார்த்தத்திற்கு புறம்பான பிரச்சாரங்களை ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு அப்பால் செய்ய முடியாது என்பது தெளிவானது. இவ்வாறான ஒன்றே விடுதலைப்புலிகள் இயக்கத்தை சிறீலங்கா அரசு தடை செய்தாலும் ஏனைய நாடுகள் அவ்வியக்கத்தை தடை செய்யும் என எதிர்பாக்க முடியாது என்று அமைச்சர் பீரிஸ் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலம் ஆகும். தனது கூற்றுக்கு அமைச்சர் பீரிஸ் உலக ரீதியான உதாரணம் ஒன்றையும் சுட்டிக்காட்டியுள்ளார். ஐரிஸ் குடியரசு இராணுவத்தை பிரிட்டன் இன்னும் தடை செய்யவில்லை எனக் குறிப்பிட்டதோடு, விடுதலைப் புலிகள் இயக்கத்துடன் பேச்சுவார்த்தை நடாத்தமாட்டோம் என்றில்லை. ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்வைத்துள்ள நிபந்தனைகளை புலிகள் ஏற்றுக்கொண்டால் நாம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருக்கின்றோம் எனவும் தெரிவித்தார். இவ்வாறு அமைச்சர் பீரிஸ் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதினால் சிறீலங்கா அரசுக்கு ஏதும் நன்மை ஏற்படப் போவதில்லை எனக் கூறியமையானது, அவர் கூறியது போன்று சரியாக உலக ரீதியாக கிடைத்த அனுபவத்தின் அடிப்படையிலானது என்று கூறிவிடமுடியாது. ஏனெனில் வரலாற்றில் இருந்து எதுவித பாடத்தையும் சிறீலங்கா ஆட்சியாளர்கள் கற்றுக்கொள்வதில்லை. கற்றுக்கொண்டாலும் அவற்றை அமுல்படுத்த முனைவதும் இல்லை. அவ்வாறு கற்றுக்கொள்ளபவர்களாக இருப்பின் ஒரு தேசிய இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு ஒன்றைக் காணும் முயற்சியில் அவர்கள் ஈடுபட்டுக் கொண்டிருக்கமாட்டார்கள். கடந்த கால வரலாற்றிற்கும் இன்றைய உலக அரசியலுக்கும் முரணான பாதையில் செல்வதற்கு அவர்கள் முயன்றிருக்கமாட்டார்கள்.

இந்த நிலையில் உலக வரலாறு ஒன்றை ஆதாரம் காண்பிக்க முயல்கின்றார் என்றால் இவ்விடயத்தில் அவருக்குப் பல தோல்விகள் ஏற்பட்டுள்ளது என்பதே பொருளாகும். விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடைசெய்வது என்பது மூன்றாம் கட்டப் போர் ஆரம்பித்ததிலிருந்து விரிவாகப் பேசப்பட்ட ஒன்றுதான். இதற்காக சிறீலங்கா அரசாங்கம் பெரும் முயற்சிகளிலும் ஈடுபட்டது. கொழும்பிலுள்ள வெளிநாட்டுத் தூதரக மட்டத்தில் இதற்காக பெரும் இராஜதந்திர முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட அதேவேளையில் வெளி விவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமரின் வெளிநாட்டு விஜயம் ஒவ்வொன்றின் போதும் இது தீவிரமாக வலியுறுத்தப்பட்ட விடயமாகவும் இருந்தது. அதிலும் குறிப்பாக இலங்கைத் தமிழ் மக்கள் அதிக அளவில் இடம்பெயர்ந்து வாழ்கின்ற மேற்குலக நாடுகளில் இவற்றிற்கான கவனம் தீவிரமாகச் செலுத்தப்பட்டது. இவ் விவகாரத்திற்காக லக்ஷ்மன் கதிர்காமர் சில மாதங்கள் மேற்குலகில் சுற்றுப்பயணத்தை மேற்கொண்டார். ஆனால் இம்முயற்சியில் வெற்றிகிட்டியதாக இருக்கவில்லை. அமெரிக்காவும் மேற்கு நாடுகள் பலவும் அந்த நாடுகளின் உள்நாட்டு சட்டதிட்டங்களுக்கமைய புலிகள் இயக்கம் செயற்படும் அளவில் தம்மால் தடை ஏதும் விதிக்க முடியாது. அது தமது அரசியல் சட்டதிட்டங்களுக்கு முரணானது என தெளிவாகவே கூறிவிட்டன. அத்தோடு சில நாடுகள் "நீங்களே தடைசெய்யாத அமைப்பை எம்மால் எவ்வாறு தடைசெய்ய முடியும்" எனக் கேள்வியெழுப்பியிருந்தன. ஆனால், சில நாடுகள் அதற்கு மேலாய் போய் சந்திரிகா அரசின் பிரச்சாரங்களை நிராகரிக்கும் அளவிற்கு சென்றுள்ளன. இலங்கையில் இனப்பிரச்சினை விவகாகரத்திற்கு சந்திரிகா அரசின் அணுகுமுறையை அந்நாடுகள் ஏற்கவில்லை என்பதோடு அரசியல் தீர்வு குறித்த அணுகுமுறையில் அவை திருப்தியும் கொள்ளவில்லை. இதன் காரணமாக இனப்பிரச்சினைத் தீர்வுக்கான வழிவகைகள் குறித்து அரசின் கருத்துக்கப்பால் நின்று ஆராய முயற்சித்து ஆதரவும் அளிக்கத் தொடங்கியுள்ளன. இந்த நிலையில் தான் அமைச்சர் பீரிஸ் விடுதலைப் புலிகளை தடைசெய்வதினால் பயனேதும் ஏற்படப் போவதில்லை என்பதனை வெளிப்படையாகவே இன்று ஒப்புக்கொண்டுள்ளார். இதை வேறுவகையில் கூறுவதானால் விடுதலைப் புலிகள் இயக்கத்தை தடை செய்வதற்கும் ஓரம்கட்டுவதற்கும் சர்வதேச ரீதியில் சிறீலங்கா அரசு எடுக்கும் பெரும் எடுப்பிலான ராஜதந்திர முயற்சியொன்று தோல்வி கண்டுள்ளது என கூறமுடியும். ஆனால், இனப்பிரச்சினை விவகாரத்தில் இவ்வொரு விடயத்தில் மட்டும்தான் சிறீலங்கா அரசுக்கு தோல்வி ஏற்பட்டுவிட்டது என்பதல்ல. இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு காண்பது என்பதில் இருந்து இனப்பிரச்சினை தொடர்பாக சந்திரிகா அரசு மேற்கொண்டுள்ள சகல முயற்சிகளிலும் அது தோல்வியடையும் என்பதும் நிச்சயமானதாகும். அதிலும் குறிப்பாக இனப்பிரச்சினைக்கு இராணுவ தீர்வு என்பதும் நிபந்தனையுடன் கூடிய பேச்சுவார்த்தை என்பதும் சாத்தியப்பாடான விடயங்கள் அல்ல. இவ்வாறான அணுகுமுறையில் வல்லரசுகளே தோல்விகண்டன என்பது வரலாறு ஆகும். இதனை இன்று சிறீலங்கா ஆட்சியாளர்கள் நிராகரிக்கலாம். ஆனால், எதிர்காலத்தில் ஒத்துக்கொண்டே ஆகவேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கிழக்கு வெளுக்கிறது



கிழக்கு வெளுக்கத் தொடங்கும். புயலுக்கு பின் அங்கொரு அமைதி நிச்சயம் எழும். அத்தகையதொரு சூழல் தோன்றத் தொடங்கியிருக்கிறது. மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் நிலை கொண்டிருக்கும் இராணுவ முகாங்களையும், காவலரண்களையும் புலிகள் தாக்கி அழித்து வருகிறார்கள். தாக்குதல் தீவிரம் அடைந்து வருகிறது. புதிய உத்வேகத்துடனும், மிக அரிய நுட்பத்திறன்களுடனும் கூடிய போர் யுக்தியுடன் அவர்கள் செயற்படுவது சிங்களப் பேரினவாதத்தை அச்சுறுத்தத் தொடங்கி விட்டது. 'சூரியக் கதிர்' இராணுவ நடவடிக்கையின் மூலம் பெற்ற வெற்றியைத் தக்க வைத்துக்கொள்ள முடியாது பெரும் தாக்கங்களுக்கு இராணுவம் உட்பட்டுவிட்டது.

"இன்று இராணுவம் யாழ்ப்பாணத்தில் சிக்கி விட்டது. யாழ்ப்பாண மக்கள் வெளியேறிவிட்டனர். மட்டக்களப்பில் இராணுவம் ஒரு பக்கம் புலிகளுடன் சண்டை செய்யும் போது மறுபுறம் புலிகள் பகிரங்கமாகப் பத்திரிகையாளர் மாநாடு நடத்துகிறார்கள். இது தான் இன்றைய நிலை. சதா காலமும் இவற்றை மறைக்க இயலாது." இவ்வாறு எதிர்க் கட்சித்தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சந்திரிகா அரசாங்கத்தின் தற்போதைய நிலை பற்றிக் குறிப்பிடுகிறார். பத்திரிகையாளர்கள், இராணுவ ஆய்வாளர்கள், செய்தியாளர்கள், உள்நாட்டு, வெளிநாட்டு செய்தித்தாபனங்கள் அனைத்தும் கிழக்கின் நிலை குறித்து பகிரங்கமாக பேசத் தொடங்கியுள்ளன.

கிழக்கு மாகாணத்தில் புலிகளின் செல்வாக்கு அதிகரித்து வருவதையிட்டு இராணுவம் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் கவலை கொண்டிருக்கின்றார்கள். இதனால் புரிவது என்னவென்றால், அவர்கள் தமிழ் மக்கள் சுதந்திரமான நல்வாழ்வுக்கு திரும்புவதை வெறுக்கிறார்கள் என்பதாகும்.

கிழக்கில் பெரும் பகுதிகளில் விடுதலைப்புலிகளின் ஆதிக்கம் வலுத்து வருகிறது; கிழக்குப் பகுதிகளில் உள்ள காட்டுப்பகுதிகளில் பெரும் பகுதி கிட்டத்தட்ட சிறிலங்காப் படைகள் நுழைய முடியாத நிலையிலேயே இருக்கின்றன.

வடக்கில் பெரும் படையை சிக்க விட்டுத் தவித்துக் கொண்டிருக்கும் சிறிலங்கா அரசு கிழக்கில் பெரும் படை எடுப்பை ஒரே நேரத்தில் மேற்கொள்ள முடியாது உள்ளது என்பதை இராணுவ ஆய்வாளர்களே ஒத்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில் இராணுவத்துக்கு முண்டு கொடுக்கும் வகையில் ரெலோ போன்ற தமிழ்க் குழுக்கள் அடாவடித்தனங்களில் ஈடுபட்டு வருகின்றன. தென் தமிழீழத்தில் தமிழ் மக்கள் மீதான கெடுபிடித் தாக்குதல் நடவடிக்கையின் போதும், தேடுதல் மற்றும் சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதும் இத் தேச விரோதக் குழுக்கள் இராணுவத்தினருடன் இணைந்து தமிழ் மக்களைத் துன்புறுத்தி வருகின்றன. திருகோணமலையில் தமிழ் மக்களைக் கடத்திச் செல்லும் வெள்ளை வான் நடவடிக்கைக்கும் ரெலோ தேச விரோதிகள் ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர்.

இத்தேச விரோதிகளின் காரியாலயங்களுக்குள்ளும், விடுதலைப்புலிகள் குண்டுத்தாக்குதல்களை மேற்கொண்டு தாக்கி அழிக்கும் செயற்பாடுகளில் தீவிரமாக இறங்கியிருப்பதாகத் தளச் செய்திகள் தெரிவிக்கின்றன.

சிங்கள ஆதிக்க வெறி அரசுக்கு இந்திய RAW, SOUTH BLOCK ஆகியவை உதவும் செயற்பாடுகளையும் கணக்கில் எடுத்து விடுதலைப்புலிகள் மிகவும் நுட்பமான யுத்த தந்தி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ரத்துடன் செயற்பட்டு வருகிறார்கள். கடற்பிராந்தியத்திலும், தரையிலும் விடுதலைப்புலிகளின் பலம் அதிகரித்து வருகின்றது என கொழும்பு ஆங்கில வார இதழில் பாதுகாப்புத் துறை செய்தியாளர் ஒருவரே தெரிவித்திருக்கிறார்.

எப்போது, எப்படி தாக்கியழிக்கப்படுவோமோ என்ற பயமும், பீதியும் படையினரை கடுமையாக உலைக்கிறது.

காவலரண்களில் துப்பாக்கியோடு நிற்கும் சிப்பாய் ஒருவனின் மன உணர்வு மிக மோசமாகப் பாதிப்படைந்திருக்கிறது. படுவான்கரைப் பிரதேசம் முழுவதும் விடுதலைப் போராளிகளின் நடமாட்டம் மிகுந்த பகுதிகளாகக் காணப்படுகிறது. கொம்மாந்துறை, சந்திவெளி, வந்தாறுமூலைப் பகுதிகளில் பகல் வேளைகளிலும் போராளிகளைக் காணக் கூடியதாயிருக்கும்.

சந்திவெளியில் நடாத்தப்பட்ட இரண்டு பெரிய நேரடிச் சமரினால் இராணுவ கொமாண்டோ அணிப் படையினரின் மனோநிலை உடைக்கப்பட்டுள்ளது.

கொடுவாமடுவில் தாக்கி அழிக்கப்பட்ட மோட்டார் பைசிக்கிள் கொமாண்டோப்படை இராணுவத்தின் மத்தியில் அச்சவுணர்வை தோற்றுவித்துள்ளது. கொடுவாமடுவை விட்டு நகர முடியாமல் அவர்கள் பொறிக்குள் அகப்பட்ட நிலையில் இருக்கின்றனர்.

கிழக்கைத் தக்கவைத்துக்கொள்ள முடியாத சிறிலங்கா அரசு யாழ்ப்பாணத்தில் என்ன செய்யப் போகிறது? கிழக்கில் விடுதலைப் புலிகள் பலமாவதுதான் மிக ஆபத்தாக இருக்கும் என்று அச்சம் தெரிவிக்கப்படுகிறது. இது கொழும்பின் பாதுகாப்பு குறித்த கேள்விகளை எழுப்பி வைத்திருக்கிறது. இன்னுமொரு தாக்குதல் கொழும்பில் நடைபெறுமானால் அரசு கந்தறு நிலைக்குச் சென்று விடும் என்ற அச்சத்தை அவர்கள் அசட்டை செய்யமுடியாது. அத்தோடு கிழக்கில் இராணுவ நிலைகள் மற்றும் பொருளாதார ஸ்தாபனங்கள் மீதான தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டு வருகிறது. மட்டக்களப்பு அரச நிர்வாகச் செயற்பாடுகள் ஸ்தம்பித்துக் கொண்டு போகின்றன.

கிழக்கின் கரையோரங்களில் பல இடங்களில் கடற்புலிகளின் ஆதிக்கம் வலுவாகி வருகிறது. வடக்கில் வடமராட்சியில் இருந்து கிழக்கு நோக்கிச் சீரான கடல் தொடர்புகள் கடற்புலிகளால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

தற்போது வன்னியை மையமாகக் கொண்டு இயங்கும் விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளே கிழக்கில் தாக்குதல் நடவடிக்கைகள் அதிகரிக்கக் காரணம் என இராணுவ ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

அத்தோடு சிறிலங்கா அரசு, கடற்படையின் அளவை அதிகரிக்க வேண்டிய தேவை அதிகரித்துள்ளது. இதனால் ஏற்படப்போகும் கூடிய இராணுவச் செலவீனம் சிறிலங்காவில் பொருளாதார ரீதியாகவும், அரசியல் ரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்தும் என அவர்கள் அஞ்சுகிறார்கள்.

**- ஆருதி**

# நீள்வழியில் நிழலாகி

**- கருணாகரன் -**


சாம்பலாய் நிழலுருக் காட்டும்
பனைகளும் சிறு பற்றைகளும் தொலைவில் கரைய
படகேறிப் போகிறதென் பயணம்

வள்ளங்களை அலைக்கும் காற்றில்
என்ஜின்கள் இரைய
ஒரு படகின் பின்னால் - இழுவையில்
பிணையுண்டு இழுபடும் படகுகள்....

மெல்லச் சிறுத்து
தொலைவு கொண்டு போகின்றது
கிளாலிக்கரை

கையசைக்கவும்
முகம் திருப்பவும் முடியவில்லை.

என் சிறுகடலே கேளம்மா
உன்னரும் புதல்வரின்
உதிரத்தில் மூழ்கிய தேவி
நீ வேதனையில் விசும்பும்
ஒலியில் திசையடைத்துக் கிடப்பதறிவேன்
எனினும்
என் மனதையும் உன் மடியிருத்திக் கொள்ளம்மா.



பீதியுண்டு அலையும் விழிகளும்
மருளும் மனமுமாக
ஒரு வாழ்வை இழந்து
ஒரு வாழ்வு தேடிப்போகுமென் விதி

பகல் நேரப் பொழுதொன்றில்
வலசையாய்
நொய்த மனிதரில் ஒருவனாய்
விம்மி அழுதபடி
விழிநீரை உன்மடியில் சிந்திச் செல்கிறேன்.

கரையில் மோதி
மோதி மோதிச் சிதறும் உன் விதிபோல
இன்றென் கதையும் ஆயிற்றென்று
காற்றிடம் சொல்வதா
இந்தக் கடற்பறைவைகளிடம் சொல்வதா.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மண்ணில் ஓங்கி ஒலிக்கும் விடுதலைக் குரல்கள்

## சிறக்கை முளைக்கிறது



தமிழீழ விடுதலைப் போர் ஓர் காற்றாடி போன்றது. அதுவே விடுதலைப் புலிகள் அணியாகி, இப்போது இருபதாண்டு காலத்தை கனவேகத்தில் சுற்றிமுடித்துவிட்டது. இந்த இரு தசாப்தங்களில் நிகழ்த்தப்பட்ட சாதனைகளே போராட்டத்தின் அசாதாரண வளர்ச்சிக்கும், உன்னதத்திற்கும் சாட்சியங்களாகும். போர் நடந்த பாதையில் புயல்கள் குறுக்கிட்ட போதெல்லாம் அதை மதியூகத்தோடு கணித்து, இலாவகமாகக் கொடுக்கப்பட்ட திருப்பங்களால் ஒவ்வொரு காலகட்டங்களிலுமே அது முன்னையை விட அசுர வேகம் பெற்றது. சிங்களப் பேரினவாதத்தின் எதிர்ப்புக்காற்று எவ்வளவு மோசமாக வீசுகிறதோ அவ்வளவுக்கவ்வளவு விடுதலைக் காற்றாடியும் வேகமாகச் சுழற்சி பெற்றது; இனியும் பெறவல்லது என் பதற்கும் கடந்துவந்த பாதையின் சான்றுகளே போதுமானவை.

இவ்வாறு போராட்டம் பெற்ற பெருவளர்ச்சியால் இதுவரை சமுதாய எழுச்சியை இடுக்கிப் பிடித்திருந்த தடைகளெல்லாம் பாளம் பாளமாக உடைந்து நீரில் ஆழ்ந்தன. இப்போதோ வீரம் எழுதிய வரிகளாக புடைத்தெழும் தமிழீழக் குரல்கள் தங்கள் மகத்துவத்தால் உலகத்தின் செவிப்புலன்களை வருடிச் செல்லக் காண்கிறோம். சூரியக் கதிர் நடவடிக்கைக்குப் பிறகு மேலும் பத்தாயிரம் பேர் புதிதாகப் படையணியில் இணைய வேண்டிய தேவை ஏற்பட்டது. தேசியத் தலைவரின் இந்த அழைப்பை ஏற்று இளைஞர் முதல் பெரியோர் வரை பால் வேறுபாடின்றி தமிழீழ மக்கள் போர்க்கோலம் பூண்டனர். அந்த நேரம் புதிதாகப் போர்க்கருவி ஏந்திய போராளிகள் கூறிய வாசகங்கள் எந்தவொரு தமிழனையும் நிறுத்தும்; மெய்சிலிர்க்க வைக்கும்; அவன் தன்மானத்தின் ஒவ்வொரு மூலையிலும் புதுவிளக்குப் பூட்டும்.

"சாவு எந்த நிமிடத்திலும், எப்படியும் வரலாம்; ஆனால், என்சாவு போரில்தானென நான் தீர்மானித்து விட்டேன்." வாழ்ந்தான் சாவடைந்தான் என இருப்பதைவிட வாழ்ந்தான், மண்ணுக்காய் வரலாறு படைத்தான் என்றே தன் வாழ்வு அமையவேண்டுமென புதிய போராளிகளில் ஒருவனான கிளிநொச்சியைச் சேர்ந்த இளங்கீரன் குறிப்பிட்டிருந்தார். "எமது எதிர்காலச் சந்ததி துப்பாக்கி ஏந்தும் துர்ப்பாக்கிய நிலையை என்னால் பார்க்க முடியாது. எமது பழைய சந்ததியினர் செய்த தவறுகளை நாமும் செய்ய முடியாது" என இவர் எழுதிவைத்த கடிதத்தை சாதாரண மதிப்பீடாக எண்ணிவிட முடியாது. "என் பாட்டனாரைப் பற்றி எனக்கு எதுவுமே தெரியாது! ஆனால், நான் கவலைப் படுவதெல்லாம் என் பேரக் குழந்தைக்காகவே!" என்ற ஆபிரகாம் லிங்கனின் புகழ்பெற்ற பழமொழியைத் தாண்டிநிற்கிறது இப்போராளியின் உணர்வு.

காரியம் நடந்த பின்பு யோசனை செய்வதென்பது அறுவடைக்குப் பின் பெய்த மழையைப் போன்றதாகும். இந்நிலை வராது, தமது நாடும், இனமும் அழித்தொழிக்கப் படும் அவலத்திற்கு முன் விழித்துக்கொண்ட இவர்கள் குரல்களில் ஒளிக்கீற்று தெறிப்படையக் காண்கிறோம். அழுக்கைத் துடைத்துக் கொண்டு, பிரகாசமாகத் துலங்கும் இப் போர்க்கோலப் பாத்திரங்கள் யாவுமே, "நான் முன்னேறினால் தொடர்ந்து வா! நான் சரணடைந்தால் என்னைச் சுட்டுவிடு! நான் இறந்தால் என்னை விட்டுச் சென்று

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

விடு!" என்ற போர்த் தொனியை மேவிப்பறக்கின்றன. "பாசம், அன்பு என்பவற்றிற்கு அப்பால் எம் தேசம் பறிக்கப்படுவதனைத் தடுக்கப் போராடுவது அவசியம்" எனக் கூறிய திருச்செல்வம் என்ற இளைஞரும் "நீ போருக்குப் போ! போகும் போது தனியாகப் போகாதே! இன்னும் சிலரைச் சேர்த்துச் செல்!" என்று தன் மகளையே போருக்கனுப்பிய இராசரத்தினமும் இன்றைய தமிழீழ எழுச்சியின் புதிய சிகரங்களாகத் தெரிகிறார்கள்.

'ஒரு நாட்டின் நிலையையோ ஒரு சமுதாயத்தின் தரத்தையோ ஒருவர் அறியவேண்டுமானால், அங்குள்ள பெண்களின் நிலை கண்டால் போதும்' என்றார் வால்டேர். இன்று போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொண்ட பெண் புலிகளோ ஈழத்தமிழினத்தின் நம்பிக்கை நட்சத்திரங்களாகிவிட்டனர். "எமக்கொரு நாடு வேண்டும். அதன் பின்புதான் ஏனையவை பற்றிச் சிந்திக்க வேண்டும். இனியும் தாமதிப்போமேயானால் எஞ்சப்போவது அவலம் மட்டுமே. இப்போது நாம் விடுதலைப் போராட்டத்தில் இணையாதுவிட்டால் தமிழராய்ப் பிறந்ததில் அர்த்தமேயில்லை" என குமுதினி, சுதர்சனா, சுகிர்தா ஆகியோர் போராளிளாகி நின்று கூறிய கருத்துக்கள் எமது சமூகத்தின் ஆரோக்கிய நிலைக்கு புதிய அளவுகோல்களாகிவிட்டன. 'அண்ணனின் ஆயுதத்தை ஏந்திப் போரில் குதிக்கிறேன்' என்ற துஷ்யந்தியும், 'அண்ணனையும் குடும்பத்தையும் அழித்தவரைப் பழிவாங்கப் புறப்படுகிறேன்!' எனக் கூறிச்சென்ற சுகந்தியின் குரலும் தமிழீழத்தின் புதுப் போர்ப் பரணியாகக் கேட்கிறது. வேரை வெட்ட வந்த எதிரிக்கு இந்த விழுதுகளின் போர்க் குரலே இப்போது பெரும் கிலியை உண்டுபண்ணிவிட்டிருப்பதாகத் தெரிகிறது.

இறுக்கமான குடும்பக் கட்டுப்பாடுகளைக் கொண்ட தமிழீழ மக்களின் வாழ்வின் அச்சாணிகளாக இருந்த கல்வியும், உழைப்பும் போராட்டத்தின்பால் ஒருங்கிணைக்கப்படவேண்டிய காத்திரமான தேவையை இவர்கள் உணர்ந்து நிற்கின்றனர். குடும்பம் பொறுப்பு என்பதனை ரூபா, சதத்தில் மதிப்பீடு செய்யமுடியாது. இன்று தற்பாதுகாப்பு நமக்கும் இல்லை; மண்ணுக்கும் இல்லை. நாடு வாழ்ந்தாலே வீடு வாழும் என்ற முடிவை வெறும் கருத்தாக முன்வைக்காது தானே முன்னின்று நடைமுறைப்படுத்தி போர்க்கோலம் பூண்டிருக்கிறார் பொறியியலாளர் யோசப். "நாட்டுக்காக மரிப்பது உன்னதமானது; அதேவேளை மரிப்பதற்காக ஒரு நாடு இருப்பதும் உன்னதமானது!" என்று இவர் கூறிய அலாதியான வாசகம் இன்றைய நிகழ்வுகள் ஒவ்வொரு மனிதனையும் வைரத்தின் வாளாகப் பட்டை தீட்டி எடுத்திருப்பதையே காட்டுகிறது. இல்லாவிட்டால் தாய் கொல்லப்பட்ட பின்பும் தாமதித்தவர்கள் கூட போராட்டத்தில் இணைந்து செயற்படத் தொடங்கிவிட்டார்கள். வாடிய மலர்களை நிராகரிக்கும் மல்லிகை மரம் போல, போர்க்களம் போக மறுத்து முகம் வாடிய பிள்ளைகளை நிராகரித்து தானே போர்க்களம் ஏகியிருக்கிறார் ஒரு நாற்பத்தைந்து வயதுத் தந்தை.

'சூரியக்கதிர்' நடவடிக்கைக்குப் பிறகு தமிழ் மக்களிடையே ஏற்பட்டுள்ள இப்பேரெழுச்சியையும், போராட்டத்தில் தம்மை இணைத்துக்கொள்ளும் நேர்த்தியையும் சாதாரண நிகழ்வுகளாக எடைபோட முடியாது. "அடிமையாய் இருப்பது குற்றம்! அதைவிடக் குற்றம் சுதந்திரத்தை அடிமை வழியில் பெறுவதாகும்" என்ற தெளிவு ஒவ்வொரு மக்களிடையேயும் அழகிய கருத்தாக உருப்பெற்று விட்டமை தெரிகிறது. எப்போதும் வெற்றியைத் தூரத்தில் வைத்துப் பார்க்கும்போதுதான் அது ஏறமுடியாத மலை போலக் குத்தாகத் தெரியும். அந்தத் தளர்வே ஒருவனை பேச்சுவார்த்தை, தீர்வுத்திட்டப்பொதி போன்ற செப்படி வித்தைகளுக்குப் பலியாக்கிவிடுகிறது. ஆனால், மலைக்கு அருகில் செல்பவனே, அது ஏறிச்செல்லக்கூடியவாறு தாழ்ந்திருக்கும் உண்மையைக் கண்டுகொள்கிறான். தமிழீழ மக்களும் இப்படியே. அவர்கள் எதிரிக்கு அருகில் நிற்பவர்கள். எனவேதான் சூரியக்கதிரை வெறுந்திடலாக மதித்து, தாண்டிச்செல்லும் துணிவுடன் கருவியேந்திச் செல்கிறார்கள். இந்நிலையில் பேச்சுவார்த்தையென்பது அவர்களிடையே பேசப்படாத வார்த்தையாகவே தொலைந்து போய்விடுகிறது.

ஒரு தேசத்தின் எழில் புகழப்படும் போதுதான் அதை உருவாக்கிய சிற்பிகளின் கழுத்தில் மாலைகள் விழ ஆரம்பிக்கிறது. தேசச் சிற்பிகளாகக் கிடைத்த அரிய வாய்ப்பை சரியாகப் பயன்படுத்திக்கொண்ட விடுதலைப் பறவைகளே தமிழீழத்தின் வரலாற்றை வரிவரியாக எழுதிச் செல்கிறார்கள். மின்மினிப் பூச்சி பறக்கும் போதுதான் சுடர் விடும். அவ்வாறே போராடும் சமூகமே வெற்றியின் ஒளியைக் காண்கிறது என்ற உண்மையை இனி வரும் நாட்களில் தமிழீழம் தரிசிக்கும். 'சூரியக்கதிர்' பட்டால் கீழ் நோக்கி ஓடும் நீரே கொதிப்படைந்து மேலெழும் என்றால், அதர்மமான 'சூரியக் கதிர்' நடவடிக்கையைக் கண்டு தமிழர்கள் பயந்து அடங்கிக் கிடப்பார்களா? ஆகவேதான் அவர்கள் புதுப்புது வேங்கைகளாகப் பாயத் தொடங்கியிருக்கிறார்கள். சுதந்திரத்திற்காக எந்தத் தியாகத்தையும் செய்ய முன் வரும்போதே சுதந்திரமாக வாழும் உரிமையை அம்மக்கள் பெற்றுவிடுகிறார்கள்.

**- கி. செ. துரை**

**தமிழீழத் தனியரசு என்ற இலட்சியத்தை அடைவதிலுள்ள இமாலய இடையூறுகளை நாம் அறியாமல் இல்லை; அன்றியும் இந்த இலட்சியத்திற்கு எதிராக, எந்தெந்தச் சக்திகள் எப்படியெல்லாம் செயற்படும் என்பதும் எமக்குத் தெரியாதது அல்ல. பிராந்திய வல்லரசின் ஆதிக்க அபிலாசைகளும், உலக வல்லரசுகளின் கேந்திர இலக்குகளும் எத்தகைய தலையீடுகளை ஏற்படுத்தும் என்பதையும், நாம் அதைத் துணிந்து எதிர்கொள்ளத் தவறவில்லை. அழிவின் விளிம்பிற்குத் தள்ளப்பட்ட பொழுதும், நாம் கொண்ட கொள்கையைக் கைவிடவில்லை; ஆதிக்க சக்திகளின் ஆவேசப் புயல்களும் எம்மை ஆட்டங்காணச் செய்யவில்லை.**

**– தமிழீழத் தேசியத் தலைவர்**
**திரு. வே. பிரபாகரன் அவர்கள்.**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# மீண்டுமொரு உதயத்துக்காக

www.tamilarangam.net



**30.10.1996** திங்கள்.

காலாதிகாலமாக வாழ்ந்து களித்துச் சுகித்திருந்த மண்ணை விட்டு ஐந்து லட்சத்திற்கு மேற்பட்ட தமிழ் மக்கள் வலிகாமத்திலிருந்து ஒரே நாளில் புலம்பெயர்ந்து போகுமிடம் எதுவென்ற இலக்கு எதுவுமின்றி நகர்ந்த சம்பவம்.

தமிழீழ மண்ணின் வரலாற்றில் மட்டுமன்றி உலக சரித்திரத்திலேயே வித்தியாசமான ஒரு பாகத்தை இணைத்துவிட்ட முக்கியத்துவம் கொண்ட நிகழ்ச்சி.

கிராமங்களை, நகரங்களை ஏன் தேசங்களைவிட்டே இடம் பெயர்வது இன்று, நேற்றல்ல பைபிளின் பழைய ஏற்பாடு நடந்ததாக கருதப்படும் காலத்தில் கூட இடம் பெற்று வந்தது.

ஆனால் இன்று -

மக்கள் மட்டும் இடம் பெயரவில்லை!

நகரங்கள், கல்விக்கூடங்கள், அரச காரியாலயங்கள், கூட்டுறவு அமைப்புகள், பல்கலைக் கழகம் என மக்களுடன் இணைந்து மக்களின் வாழ்வோடு இணைந்த அம்சங்களும் வெளியேறின.

இடம்பெயர்வு நடைமுறையில் இது ஒரு புதிய அடிவைப்பு.

வெறும் மண்ணும், இடிந்த கட்டிடங்களும், முறிந்த மரங்களும், வெறிச்சோடிப் போய் பூவரசஞ் சருகுகளால் நிறைந்து போய் விட்ட எங்கள் கிராமங்களின் தெருக்களும், சிதைந்து போன எதிரியின் கனவுகளை யிட்டு எள்ளி நகையாடியவாறு எஞ்சி நின்றன.

பாரிய ஒரு இன அழிப்பின் மூலம் ஒரு நிரந்தர அடிமை வாழ்வை வலிகாம மக்களின் தலையில் சுமத்த நினைத்த எதிரி ஏமாந்து போய், வெற்றுத் தரையில் தடி நாட்டிச் சிங்கக்கொடியை ஏற்றி விட்டு தலை குனிந்து, நிலை குலைந்து போய் நின்றான்.

பெரும் எடுப்பிலான எதிரியின் படையெடுப்புக்கு எமது மக்கள் கொடுத்த பெரும் தலையடி எமதிந்த இடம் பெயர்வு.

நாம் ஏற்கனவே சுதந்திரக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

காற்றை சுவாசித்தவர்கள். விடுதலை பிரதேசங்களில் எமது சொந்த நிர்வாக கட்டமைப்பில் வாழ்ந்தவர்கள். இன்னுமொரு முறை அடிமை வாழ்வின் அலங்கோலங்களை அனுபவிக்கத் தயாரற்றவர்கள் என்ற இறுமாப்பை மட்டும் நெஞ்சில் சுமந்தவர்களாக, பரம்பரை பரம்பரையாகத் தேடிய செல்வங்களையும், சுகங்களையும் உதறி எறிந்துவிட்டு, இன்னுமொரு வாழ்வுக்கு முகம் கொடுக்கவென நெடும் பயணம் மேற்கொண்டவர்கள் வலிகாம மக்கள்.

எனினும் -

எமது மக்களின் கால்களின் பித்த வெடிப்புகளில் படிந்த செம்மண் இன்னமும் தன் நிறத்தை இழக்கவில்லை. பாக்குநீரிணை ஓங்கியடித்த உப்புக் காற்றின் உவர்ப்பு இன்னும் தேகங்களில் படிந்து தான் இருக்கிறது. சுண்ணாம்புக் கல்லில் ஊறிய குடிநீர் இன்னும் எமது மக்களின் குருதியில் குடிகொண்டு தான் இருக்கிறது.

ஓங்கி உயர்ந்த கல்விச்சாலைகள் எமக்கு ஓதிய கல்வி இன்னும் அதே நயத்துடன் எம் நாவில் தவழத்தான் செய்கிறது.

ஐந்து லட்சம் உடல்கள் -

பாரம்பரிய மண்ணைப் பிரிந்து விட்டன. இது வரை அவ்வுடல்கள் தாங்கி நின்ற மூச்சுக் காற்றுக்கள் இன்னும் அம்மண்ணில்தான் உலவுகின்றன.

ஆம்!

அங்கு மண், மனை, மா, பலா, தென்னை, தெரு ஆகியவை மட்டும் விடப்படவில்லை.

இம்மண்ணின் குழந்தைகள், இம் மக்களின் இரத்தத்தின் இரத்தங்கள் இன்னமும் அங்கு தான் நிற்கின்றன. அதனால் தான் எதிரி இறுமாப்புடன் எழுந்து நடமாட முடியாது தவிக்கிறான்.

வீதிகள் வெடிக்கின்றன! காவலரண்கள் எரிகின்றன! ஏன் யாழ்ப்பாணத்துக் கறுத்தக் கொழும்பான் மாம்பழமும் சீறியெழுந்து எதிரியின் கையைத் தின்கிறது. கட்டிடங்களோ எதிரியின் சிலுவை நடப்படாத சமாதிகளாகின்றன. ஏன் - வான் பரப்புக்கூட எதிரியின் பலிபீடமாகி

**நா. யோகேந்திரநாதன்**

> எமது மக்கள் போற்றப்பட வேண்டியவர்கள்; கௌரவிக்கப்பட வேண்டியவர்கள். தேசியப்போராட்டத்தில் எமது மக்களின் பங்களிப்பு சாதாரணமானதல்ல; அவர்களின் பங்களிப்பு அளப்பெரியது என்றுதான் சொல்லுவேன். இலைமறை காயாக இருந்து விடுதலை போராட்டத்துக்கு தோள்கொடுத்துவரும் எமது எண்ணற்ற ஆதரவாளர்களையும் - அனுதாபிகளையும் மனவுறுதி படைத்த மாமனிதர்கள் என்று தான் அழைக்கவேண்டும்.
>
> **- தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

விட்டது. வலிகாமத்தின் கிழக்கிலிருந்து புறப்பட்ட 'சூரிய ஒளிக் கதிர்' எங்கும் பரவி ஆதிக்கம் செலுத்தும் என எதிரி கண்ட கனவு இங்கே சந்தனக் கட்டைகளின் அக்கினிச் சுடரில் சாம்பலாக்கிக் கொண்டிருக்கிறது.

எமது வலிகாமம் மண்ணின் பரம்பரைக் குடிகளின் மூச்சுக் காற்றுக்கள் அங்கு இன்னும் உலாவி வருவதால், மீண்டும் எமது மண்ணுக்கு, நாம் வெற்றி வீரராக எதிரிகளின் சாம்பல் மேட்டில் ஏறி நடந்து செல்வோம் என்ற நம்பிக்கை மேலும் உறுதி பெறுகின்றது.

எனினும் -

இந்த இடப்பெயர்வின் மூலம் சில பாதகமான நிலமைகள் தோன்றுவதற்கான சாத்தியக் கூறுகள் உண்டு என்ற உண்மையை நாம் உணர்ந்து செயற்பட வேண்டிய கட்டம் உண்டு.

நாம் ஒரு தேசிய இனம். எமக்கென்று ஒரு மொழி, ஒரு பிரதேசம், ஒரு பொருளாதாரம், ஒரு கலாச்சாரம் எல்லாமே உண்டு.

ஆளும் இனங்களோ, அல்லது ஆட்சி அதிகாரத்தை தக்கவைத்து அடக்குமுறைகளை கட்டவிழ்த்துவிடும் எந்த ஒரு குழுவோ தேசிய இனங்களின் தனித்துவத்தை குலைப்பதில் என்றுமே நேரடியாகவோ, மறைமுகமாகவோ தனிக் கவனம் செலுத்தி வந்துள்ளன. இனியும் செலுத்தத் தவற மாட்டா.

எமது மொழி என்றுமே எமது மக்களால் செழிப்புடனும், வளத்துடனும் பாதுகாக்கப்படும், வளர்க்கப்படும். அதில் எவ்வித மான பிரச்சனைகளும் எழ வாய்ப்பில்லை. அப்படி எழுந்தாலும் அதை வென்று முன் செல்லும் அறிவும் ஆற்றலும் எம்மிடம் உண்டு.

எமது பிரதேசத்தின் சில பகுதிகள் எதிரியின் ஆக்கிரமிப்புக் கரங்களால் கவியப்பட்டிருந்த போதும், தமிழீழ மக்களும் தமிழீழ மக்களின் முன்னனிப்படையான விடுதலைப் புலிகளும் வார்த்தைகளில் வடிக்க முடியாத தியாகங்களாலும், வீரத்தாலும் எதிரியை விரட்டியடித்து, எமது மண்மீது சுதந்திரக் காற்றை உலவ விடுவார்கள்.

ஆனால் -

எமது மக்களின் பொருளாதாரம், எமது மக்களின் கலாச்சாரம் என்பவற்றில் இப்புலப்பெயர்வு ஒரு தாக்கத்தை ஏற்படுத்த முடியும்.

தமிழீழ மண்ணிலே சிங்களக் குடியேற்றங்களை உருவாக்கியதன் மூலம் எமது மண்ணை ஆக்கிரமித்தது சகலரும் அறிந்த ஒரு வரலாறு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேவேளையில் சிங்களவர், சோனகர், தமிழர் எனப் பல்வேறு கலாச்சாரங்களையும், பழக்கவழக்கங்களையும் கொண்ட மக்களை ஒரே இடத்தில் குடியேற்றுவதன் மூலம் பெரிய இனத்தின் பழக்க வழக்கங்கள் சிறிய இன மக்கள் மீது ஊடுருவி ஆதிக்கம் பெற்று ஒரு உதிரி பண்பாடு தோன்றியதை தமிழீழ எல்லைப் புறங்களில் நாம் அவதானிக்க முடியும்.

இது ஆளுங்கூட்டத்தினால் சிறிய இனங்களின் தனித்துவத்தை மழுங்கடிப்பதற்காகச் செய்யப்பட்ட திட்டமிடப்பட்ட சதியாகும்.

ஆனால் தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் எழுச்சியும், வலுவும் இத்தகைய ஆபத்து மேலும் வளரவிடாமல் தடுத்து விட்டது. இதனால் சிங்கள பேரினவாதிகளின் மறைமுகமான ஆக்கிரமிப்பு முறியடிக்கப்பட்டு ஆக்கிரமிப்பு நடவடிக்கைகள் வெளிப்படையாகவே முன்னெடுக்கப்பட வேண்டிய நிலை தோன்றியது.

ஆனால் இன்று இப்புலப்பெயர்வு வலிகாம மண்ணில் தனித்துவமான ஒரு வாழ்வை மேற்கொண்டிருந்த மக்களை வித்தியாசமான ஒரு சூழ்நிலையை நோக்கித்தள்ளி விட்டிருக்கின்றது.

கிணற்றடி வேலியில் இரண்டு கிடுகு கழன்று விழுந்து விட்டால் குளிக்க மறுத்த இளம் பெண், நீராட இன்று தெருக்கரை வாய்க்காலுக்குத் தள்ளப்பட்டு விட்டாள். ஒரு தனிமனிதனின் பழக்க வழக்கத்தில் இருந்து வாழ் நிலைவரை அத்தனைக்கும் ஊரே கண்காணிப்பாளனாக, நீதிபதியாக, வழிகாட்டியாகத் திகழும் ஒரு அற்புதமான உறவு வலிகாம மண்ணில் நிலவியது. ஒவ்வொரு மனிதனும் தனது குடும்பம், தனது உறவுகள், தனது ஊர், தனது தேசம் என தனது என்ற வட்டத்துக்குள்ளேயே ஒரு பொது உறவு அந்த மண்ணில் நிலை கொண்டிருந்தது.

ஆனால் இன்று -

தனித்தனி மரங்களாய்,

அகதி முகாம்களில், உறவினர் வீடுகளில், ஓலைக் கொட்டில்களில் உறவுகளைப் பேணமுடியாத, தனித்துவத்தைப் பாதுகாக்க முடியாத நாளைய வாழ்வைப் பற்றி ஒரு திட்டவட்டமான இலக்கை வகுக்காத ஒரு வாழ்வுக்கு எமது மக்களை இவ்விடப்பெயர்வு தள்ளி விட்டது.

இங்குதான் எமது கலாச்சார வாழ்வு ஆட்டம் காணக்கூடிய ஆபத்து தோன்றுவதற்கான வாய்ப்புக்கள் உருவாகின்றன.



ஒரு குறுகிய பரப்பளவில் கூடிய பலன் தரும் வலிகாம மண் விவசாயம் செய்யச் செய்ய வளமேறி பொன்னாக மாறும் செம்மண் பூமி. இடப்படும் பசளையைக் கீழிறங்க விடாத சுண்ணாம்புக்கல் படிவம் அந்த மண்ணுக்குக் கீழே. இம்மண்ணில் மிளகாயும், வெண்டியும், கத்தரியும், புகையிலையும், வாழையும் பொன்னையும், பொருளையும் அள்ளி அள்ளித் தந்தன. யாழ்ப்பாண விவசாயியின் கடும் உழைப்புடன் கைகோர்த்து நின்று என்றும் இளமையுடன் இம்மண் திகழ்கின்றது.

ஆனால் வன்னியிலோ -

பரந்த வயல் வெளிகள், ஏக்கர் கணக்கான புன்செய் நிலங்கள், பசளையின் பலனை பயிர் முழுமையாகப் பெற்றுக் கொடுக்க முடியாத மண். நிறைவோடு அருவிகளாய் என்றும் நீரோடும் வாய்க்கால்கள், காடும் காடு சார்ந்த சூழலும் என வித்தியாசமான ஒரு சூழ்நிலை.

கைத்தீனூட்டிக் கூடு கட்டி கால் நடை வளர்த்த வலிகாமம் மக்களுக்குத் தெருத் தெருவாய் திரிந்தலையும் ஆவினங்கள் ஒரு ஆச்சரியம்!

நகரும், நகர் சூழ்ந்த தொழில்களும் பல்கிப் பெருகிய வலிகாமம் மண்ணை விட்டு வந்த மக்களுக்கு கிராமங்களும் கிராமங்களின் தேவைகளை ஒட்டி உருவான சிறு நகரங்களும் வித்தியாசமான தோற்றத்தை மட்டுமின்றி, புதிய சூழ்நிலையையும் தோற்றுவிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மயிலிட்டிக் குடாக்கடலும், காரைநகர் பரவைக் கடலும் தலை வணங்கி தொழில்கொடுத்த எமது மீனவர்களுக்கு சுண்டிக்குளமும், பொக்கணையும், விடத்தல்தீவும், வலைப்பாடும் போதுமானதல்ல.

எனவே -

ஸ்திரப்பட்டிருந்த, செழிப்பாயிருந்த எமது பொருளாதார வாழ்வு குழப்பமடைய, ஊசலாட்டம் காண நிறையவே காரணங்கள் உண்டு. இதனால் நிரந்தரத் தொழில்களால் நமக்கென ஒரு அந்தஸ்தை உருவாக்

விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்பு உண்டு. ஒரு தேசிய நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த தேசியச் சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது, நாம் எமது தேசத்திற்கு புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.

– தமிழீழத் தேசியத் தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

> ஒரு விடுதலை இயக்கம் தனித்து நின்று போராடி விடுதலையை வென்றெடுத்ததாக வரலாறு இல்லை. ஒரு விடுதலை இயக்கத்தின் பின்னால் மக்கள் சக்தி அணிதிரண்டு எழுச்சி கொள்ளும் பொழுதுதான், அது மக்கள் போராட்டமாக, தேசியப் போராட்டமாக, முழுமையும் - முதிர்ச்சியும் பெறுகின்றது; அப்பொழுது தான் விடுதலையும் சாத்தியமாகின்றது.
>
> **– தமிழீழத் தேசியத்தலைவர் திரு. வே. பிரபாகரன் அவர்கள்**

கியிருந்த வலிகாமச் சமூகம், உதிரித் தொழில்களை நாடவும், அன்றாடங்காய்ச்சிகளாக மாறவும் நிறையவே சந்தர்ப்பங்களும், சூழ்நிலைகளும் உண்டு.

இதன் விளைவு -

எமது பொருளாதார வாழ்வு ஆட்டம் காணும் அபாயம் தோன்றுவதுடன் நிரந்தர பொருளாதார வளர்ச்சி தடைப்படும் நிலையும் தோன்றலாம்.

எனவே -

இந்தப் புலப்பெயர்வு எமது கலாச்சார வாழ்வு, எமது பொருளாதார வாழ்வு என்பனவற்றை ஆட்டம்காண வைக்கவும், சீரழிய வைக்கவும் முனைப்புடன் காத்திருக்கிறது.

ஒரு தேசிய இனத்தின் கலாச்சார பிறழ்ச்சியும், பொருளாதாரப் பின்னடைவும் என்றும் எதிரிக்கும் அடக்குமுறையாளனுக்கும் சாதகமாகவே அமையும். எதிரியின் உள்ளார்ந்த இலக்குகளில் அதுவும் ஒன்றே.

இங்குதான் தமிழீழ மக்களின் கடமை எதுவென்ற கேள்வி எழுகின்றது.

காலம் காலமாக நாம் கட்டி வளர்த்த பண்பாட்டை பேணி வளர்த்து. ஈடாடிப்போன எமது பொருளாதார வாழ்வை மீண்டும் ஸ்திரப்படுத்தி வாழப்போகிறோமா, அல்லது வெறும் உதிரிகளாக, இலக்கற்ற, ஒரு இலச்சியப் பிடிப்பற்ற மக்களாக மாறப்போகிறோமா?

இது வரை இருந்த வாழ்வு சிதைந்து விட்டது என்பது உண்மைதான்! இச்சிதைவை வாழ்வாக ஏற்கப்போகின்றோமா? அல்லது இச்சிதைவின் இடிபாடுகளிலிருந்து ஒரு புதிய வாழ்வை உருவாக்கப் போகிறோமா?

யாழ்ப்பாண மண் -

சிறீலங்கா படையினரால், இந்தியப்படையினரால் பல முறை ஆக்கிரமிக்கப்பட்டது, அழிக்கப்பட்டது, சிதைக்கப்பட்டது. ஆனால் மீண்டும் நாம் புதுப்பொலிவுடன் எழுந்தோம்.

இது வரலாறு!

எமக்கு மீண்டும் எழுவதற்கான, புதிய வாழ்வை நோக்கி நகர்வதற்கான ஆன்மபலம் உண்டு, அனுபவமும் உண்டு.

வளம் கொழிக்கும் வலிகாம மண் எதிரியின் கையிலிருந்து நாளை மீட்கப்படலாம் அல்லது நான்கு வருடங்கள் கழித்து மீட்கப்படலாம். அது இன்னமும் நீளலாம். மண் மீட்கப்படுவது அடிப்படையில் எமது சக்தியைப் பொறுத்தது. என்றாலும் கூட, தேசிய, சர்வதேசிய நிலைமைகளும் துணைக் காரணங்களாய் அமையும். எனவே மண் மீட்பு என்பது பூரணமாக எமது பிரதேசத்தை விட்டு எதிரி விரட்டப்படும் போதே சாத்தியம். ஒரு சுதந்திர பூமியில் மட்டுமே மீண்டும் வலிகாம மக்கள் காலடி எடுத்து வைப்பர் என்ற உறுதி நிச்சயமானது.

ஆனால் -

இடம்பெயர்ந்து இங்கு குடியேறிய வலிகாம மண்ணின் மக்கள் இங்கு வாழும் காலம் ஒரு நாளாக இருந்தாலென்ன அல்லது ஓராயிரம் வருடங்களாக இருந்தாலென்ன எத்தகைய ஒரு வாழ்வை வாழப் போகின்றார்கள் என்பதே கேள்வி.

இம் மண்ணை ஒரு தற்காலிக தங்குமிடமாக எண்ணி எமது தனித்துவமான கலாச்சார, பொருளாதார வாழ்வை மறந்து ஒரு அகதி வாழ்க்கையை மேற்கொள்ள வேண்டுமா?

இல்லை இல்லவேயில்லை!

நாம் நீண்ட பாரம்பரியம் கொண்ட மக்கள். நிற்கும் மண்ணில் நீள வேரோடி நிலைக்கும் பக்குவம் கொண்ட உறுதிமிக்கவர்கள்.

எனவே நாம் எமக்கென்று ஒரு புதிய வாழ்வை அமைத்துக்கொள்ளல் வேண்டும். புதிய சமூக, கலாச்சார, பொருளாதார உறவுகளை உருவாக்கி அபிவிருத்தி செய்ய வேண்டும். ஓங்கி வளர்ந்த அடர் வனங்கள் காலாதி காலமாக உதிர்த்து விட்ட கழிவுகளால் உரமேறிப்போன வளமான மண்ணும், வற்றாத நீர் வளமும் எமக்கென



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ஒரு வாழ்வை ஆரம்பிக்க இருகை நீட்டி வரவேற்கின்றன. உலகப் புகழ் பெற்ற யாழ்ப்பாண மக்களின் உழைப்பை உண்டு செழிக்க காத்திருக்கிறது வன்னிமண்.

வெங்காயமும், மிளகாயும், வாழையும், புகையிலையும் இங்கு செழித்து வளரத்தயங்கியதில்லை. குரக்கனும், பயறும், உழுந்தும் இங்கு நிறையவே விழைந்ததுண்டு. பரந்து கிடக்கும் நெல் வயல்கள் பெரும் விளைச்சல்கள் தரக் காத்திருக்கின்றன. எனவே இங்கு ஒரு விவசாயப் பொருளாதாரக் கட்டமைப்பு ஏற்கனவே உண்டு. இக்கட்டமைப்பில் இடம் பெயர்ந்த எமது மக்களும் ஒன்றிணைந்து அதை மேலும் செழுமைப் படுத்தவும், அகதி வாழ்விலிருந்து மீண்டும் புதிய நிரந்தர வாழ்வமைப்பை உருவாக்கவும் வேண்டும்.

அனைத்து மக்களும் விவசாயிகளாக மாற வேண்டும் என்பது வெறும் யந்திரீகமானதும், கற்பனையானதுமான கூற்றாகும்.

ஆனால் விவசாய பூமியில் விவசாயம் சார்ந்த பல தொழில்கள் எமக்காக காத்திருக்கின்றன. பொருளாதாரத்தடை, குறிப்பாக பசளை, எரிபொருள்தடை, புதிய கட்டுமானப் பணிகள் இவையனைத்தும் புதிய தொழில்முயற்சிகள் உருவாவதைக் கோரி நிற்கின்றன.

இங்கு தான் எமது புத்திஜீவிகளின் பணி அத்தியாவசியமாகின்றது. புத்தகங்களில் கற்றதை திருப்பிச் சொல்லும் பழைய பணியிலிருந்து விடுபடவும், தாம் கற்றவற்றை இன்றைய எமது மண்ணின் தேவைகளை நிறைவு செய்யும் வகையில் பிரயோகிக்கவும், இன்றைய வளங்கள், தேவைகளை ஆழமான சிந்தனையுடனும் திறந்த மனதுடனும் புரிந்து கொள்ளவும், எமது பாரம்பரிய வழிமுறைகளை இன்றைய கால வளர்ச்சிக்கேற்ப நவீனமயப் படுத்தவுமான புதிய முயற்சிகளில் இறங்க வேண்டும். இவர்களுக்கு இங்கொரு பெரும்பணி காத்துக்கிடக்கிறது.

www.tamilarangam.net

எம்மால் இழக்கப்பட்ட எமது வலிகாம மண் வெறுமனே எதிரியின் ஆக்கிரமிப்பில் இல்லை. எமது குழந்தைகளின் வேட்டுச் சத்தங்களும், வெடி குண்டுச் சிதறல்களும் அங்கே எதிரியை திணறடித்துக் கொண்டிருக்கிறன. விடுதலைப்புலிகளின் வீரமும், தியாகமும், எமது மக்களின் உயர்ந்த பங்களிப்பும் வலிகாம மண்ணை விரைவில் மீட்டெடுக்கும்.

மீட்டெடுக்கப்பட்ட எமது மண்ணில் நாம் மீண்டும் காலடி வைக்கும் போது எத்தகைய ஒரு கலாச்சார, பொருளாதார வாழ்வுகொண்ட ஒரு மக்கள் கூட்டமாக அங்கிருந்து வெளியேறினோமோ, அதேபோன்ற கலாச்சார, பொருளாதார வாழ்வு கொண்ட ஒரு சமூகமாகவே செல்வோம். அகதி வாழ்வின் சீரழிவுகளோ, உதிரி வாழ்வின் நம்பிக்கையீனங்களோ எம்மில் தொற்றிக் கொள்ள அனுமதிக்கக் கூடாது.

நாம் எங்கு சென்றாலும், எப்படி வாழ்ந்தாலும் தமிழ்த் தேசிய இனமாகவே வாழ்வோம். எமது மகத்துவத்தை என்றும் காப்போம். ★





"புவியியல் ரீதியாகத் தமிழீழத்தின் பாதுகாப்பு கடலோடு ஒன்றிப் போயுள்ளது. எனவே கடற்பரப்பிலும் நாம் பலம் பொருந்தியவர்களாகி, எமது கடலில் எதிரி வைத்திருக்கும் கடல் ஆதிக்கத்தை தகர்த்து, எமது கடலில் நாம் பலம் பெறும் போது தான், விடுவிக்கப்படும் நிலப்பகுதியை நிரந்தரமாக நிலை நிறுத்திக் கொள்வதுடன், தமிழீழத்தின் நிலப்பகுதிகளில் இருக்கும் எதிரிப்படையையும் விரட்டியடிக்க முடியும்" என தேசியத்தலைவர் கூறிக் கொள்ளும் அந்த இலக்குகளை நோக்கி கடற்புலிகள் பாய்ந்து கொண்டிருக்கிறார்கள்.

15-3-96 அன்று, சூரியன் உச்சி முகட்டில் வந்தெறிக்கிறது. எங்களின் இரத்தம் சிந்திச் சிவந்த கடல் கரை வந்து மோதி அழுது கொண்டிருக்கின்றது.

கடற்புலி வீரர்கள் புலிக்கொடி பறக்கும் படகுகளில் புயலென மன்னார் கடற்பரப்பில் கடல் அலைகளைக் கிழித்தபடி பாய்ந்து கொண்டிருந்தார்கள்.

சிறிலங்கா கடற்படையினரின் படகுகள் சற்றும் எதிர்பாராத நேரத்தில், கடற்புலிகளின் திட்டமிட்ட முற்றுகைக்குள் அகப்பட்டுக்கொள்ள நேரிடுகிறது. இம் மாதக் காலப்பகுதிகளில் கடற்புலிகளுக்கும் சிறிலங்கா கடற்படையினருக்கும் இடையே முனைப்பான யுத்தங்கள் நிகழலாம் என சிங்களப் பத்திரிகையாளர் ஒருவர் கட்டுரை ஒன்றில் குறிப்பிட்டிருந்தார். மேலும் 'புலிகளின் பலம் வாய்ந்த ஆயுதம் கடற்புலிகள்' என்று அக் கட்டுரையாளர் சுட்டிக் காட்டியிருந்தமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இதனை சிறிலங்கா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அரசை அச்சுறுத்தும் புலிகளின் கடற்சமர்

அரசோ அல்லது அதன் கடற்படையோ புரியாமலில்லை. இதன் விளைவாக இந்தியக் கடற்படையுடன் கூட்டு நடவடிக்கையில் இறங்கியிருந்தமையும் இங்கு நினைவு கொள்ளத்தக்கது. பலம் வாய்ந்த புலிகளின் ஆயுதத்தை பலமிழக்கச் செய்ய எந்த நாசகார சக்தியுடனும் கூட்டு வைக்க சந்திரிகா தயாராய் இருக்கிறார். மன்னார் கடற்பரப்புக்குள் கடற்புலிகளின் முற்றுகைக்குள்ளான சிறிலங்கா அதிவேக பீரங்கி கடற்படையினர் நிலை குலைந்து போகின்றனர். மன்னாரில் தளமிட்டிருக்கும் அவர்களது கரையோரத் தளம் குறித்த பாதுகாப்பின் நிச்சயமற்ற தன்மையை உணர்த்திக் கொண்டே கடற்புலிகள் அவர்கள் மீது தாக்கிய நிகழ்வானது, சிறிலங்கா அரசை கட்டற்றுச் செயற்பட வைத்தது. மன்னாரில் அதிசயிக்கத் தக்க வகையில் நடந்த இத் தாக்குதல் பல பின்னடைவுகளை எதிர்காலத்தில் தோற்றுவிக்கும் ஒரு பலமான அடியே. கூட்டு கடற்படை ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த அதிவேக பீரங்கிப்படையினருக்கு மீளவே முடியாத அதிர்ச்சி வைத்தியமாகவும் இது அமைந்து விட்டிருந்தது.

கடற்புலிகளின் மயிர்க்கூச்செறியும் தாக்குதலுக்குள்ளான முதலாவது பீரங்கிப்படகு நீரில் மூழ்கிறது, அடுத்த படகும் கடும் தாக்குலுக்குள்ளாகி முற்றாக சிதைவடைந்து போகிறது. படையினரின் கூச்சலும் அழுகையும் காற்றுள் அமுங்கி ஒலிக்கிறது. மூன்றாவது படகை விடுதலைப்புலிகள் கைப்பற்றுகின்றனர். கடற்புலிகள் தாக்குதலின் போது கடற்படையினரின் கப்பல்களையும், படகுகளையும் மட்டும் தகர்க்கவில்லை; தமிழீழக் கடற்பரப்பில் அவர்களது மேலாதிக்க கனவையும் தான் தகர்த்து வருகிறார்கள். பத்துக்கு மேற்பட்ட கடற்படையினர் கொல்லப்பட்டும், நவீன ஆயுதங்கள் உட்பட, போர்த்தளபாடங்கள் சிலவற்றையும் விடுதலைப்புலிகள் கைப்பற்றியிருந்தார்கள். இச் சமரில் மேஜர் கார்மேகன் உட்பட பதினொரு கடற்புலி வீரர்கள் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்கள் எனபது குறிப்பிடத்தக்கது.

"கடல் மூலமான போக்குவரத்து கடற்புலிகளுக்கு கடினமானதாக இருக்கவில்லை" நெடுந்தீவில் உள்ள ஈ.பி.டி.பி தளத் தகர்ப்பின் போது ஒரு செய்தியாளர் குறிப்பிட்டமை தான் உண்மை. கடற்புலிகள் மிகச் சாதாரணமாக கடலில் திரிகிறார்கள் என்றும் அவர்களின் தாக்கும் திறனும், இலக்குகளை அழிக்கும் முறையும் சிறப்பானவை என்றும் அச்செயதியாளர் தெரிவித்துள்ளார். எதிர்காலத்தில் அவர்கள் பாய்ந்து தகர்க்க உள்ள நிலைகள் குறித்துப் பாதுகாப்பு அதிகாரிகள் ஊகித்துக் கொண்டு எச்சரிக்கை விடுத்து வந்த போதும் அழிவில் இருந்து அவர்களை யாரும் மீட்க முடியாது போயுள்ளது. ஏனெனில் சந்திரிகா குறுகிய ஆதாயங்களிலும், பொய்யான வெற்றிகளிலும் மிதக்கும் திறம்பட்ட ஆற்றல்களற்ற ஒரு ஆட்சியாளர் என்பதே உண்மை. கொழும்புத் துறைமுகத்துக்கு 100 மைல் தொலைவுகளில் நின்று கொண்டு கடற்புலிகள் நடத்திய தாக்குதல் தலைநகரின் எதிர்காலப் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாகவே இருக்கும். அத்தோடு கடற்கரையோர தளங்களுக்கும், சூரியக்கதிர் இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டு யாழ்ப்பாணத்தில் தற்காலிகமாக தங்கி நிற்கும் படையினருக்கும் ஆன ஆயுத விநியோக வழிகள் இலகுவானதாகவும் ஒரு போதும் இருக்காது.

சிறிலங்கா கடற்படையினர் தமது படைப் பலத்தை அதிகரிக்க வேண்டிய நிலையில் இருக்கிறார்கள். அத்தகையதொரு நிலையில் சிக்கியிருந்த கடற்படை மேலும் மிக மோசமான இழப்பை மன்னாரில் சந்தித்துள்ளது. ஏற்கனவே நடந்த கடற்சமர்களில் அனுபவம் வாய்ந்த பல கடற்படை அதிகாரிகளை கடற்படை இழந்திருக்கிறது. இதனால் புதிதாக கொள்வனவு செய்த பல யுத்தக் கப்பல்களை கடற்போர் முனைக்கு செலுத்திச் செல்ல வல்ல மாலுமிகள் இல்லை. அனுபவமும், தகுதியும் வாய்ந்த உயரதிகாரிகளும் அருந்தலாக இருக்கிறார்கள். இதனால் ஓய்வு பெற்றுச் செல்லும் அதிகாரிகளைக் கூட மீள வலுக்கட்டாயமாக போர் முனைகளுக்கு அழைக்கிறார்கள். ஓய்வு பெறுவதற்கான கோரிக்கைகள் கடற்படைத் தலைமையகத்தால் நிராகரிக்கப்பட்டு வருகிறது. பாதுகாப்பற்ற, நிச்சயத் தன்மையற்ற, ஆட்டம் கண்டு கொண்டு இருக்கும் சிங்கள கடற்படையை வலுவாக்குவதற்குரிய மனோபலத்தை மட்டும் அவர்கள் இனி எங்கிருந்தும் பெறமுடியாதுள்ளனர்.

**- நிதர்சன்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்



### ஈழத்தமிழர்களுக்காக உயிர்நீத்த அப்துல் ரவூப்பின் தந்தை அசேன் முகம்மது அவர்களுடன்

www.tamilarangam.net

# நேர்காணல்

நேர்முகம்: சுதாகர்

**வணக்கம் ஐயா!**

**உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் சார்பாக தங்களுக்கும் குடும்பத்தினருக்கும் எங்களின் நெஞ்சார்ந்த இரங்கலை தெரிவிக்கின்றோம். எரிமலை இதழுக்காக தங்களை நேர்காண வந்துள்ளோம். ஈழ இரத்தம் எங்கள் இரத்தம் என்பதை வாழ்ந்து காட்டி வரலாறாகி விட்ட ஒரு வீரத் தமிழ் மகனின் தந்தையாக விளங்கும் தங்களைப்பற்றி கொஞ்சம் சொல்லுங்கள்.**

வணக்கம்.

எனது ஊர் இலப்பைக் குடிக்காடு. பெரம்பலூர்ப் பகுதியில் ஊராட்சி ஒன்றிய விரிவாக்க அலுவலராகப் பணி புரிகின்றேன். திருவள்ளுவர் மாவட்ட அரச ஊழியர் சங்கத்தின் தலைவராக உள்ளேன். தமிழின உணர்வுடைய குடும்பப் பாரம்பரியத்திலிருந்து நாங்கள் வருவதால் இயல்பாகவே அப்துல் ரவூப்பிடம் இனமான உணர்வு சிறுவயதிலிருந்தே வெளிப்பட்டு வந்துள்ளது.

**தங்களின் குடும்பத்தைப் பற்றி?**

எங்கள் குடும்பத்தில் மொத்தம் ஐந்து நபர்கள். எனது துணைவியார் பெயர் சௌதா. ரவூப்பிற்கு ஒரு அண்ணையும் ஒரு தங்கையும் உண்டு. எங்கள் அனைவர் மீதும் அவன் மிகுந்த பாசம் வைத்திருந்தான். மொழியைப் பற்றியும், தேசத்தைப் பற்றியும் பேச்சு வருகின்ற போதெல்லாம் உணர்ச்சிப் பிழம்பாகி விடுவான்.

**தங்கள் மகனின் உயிர்த்தியாகம் பற்றிச் சொல்லுங்கள்?**

தமிழ் ஈழத்திற்காக எனது மகன் உயிர் தந்திருக்கிறான். எனது மகனின் தியாகம் தமிழகமெங்கும் ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்தியுள்ளது. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் பலர் என்னுடன் தொடர்புகொண்டு எனது மகனைப் பற்றிய தகவல் அனுப்பும்படி கேட்கின்றனர்.




பெரியார் சிலை: ரவூப் எரிந்தபடி விழுந்த இடம்

**அப்துல் ரவூப் இம் முடிவிற்கு வர உடனடிக் காரணம் ஏதேனும் உண்டா?**

மணலாற்றுப் பகுதியில் சிங்கள இராணுவ முகாங்களைத் தாக்கி அழிக்கும் சண்டையில் கொலையுண்ட நூற்றுக்கணக்கான புலிகளை இந்திய தொலைக்காட்சி காண்பித்தது. அந்தநேரம் முதல் அவன் பித்துப் பிடித்தவன் போலிருந்தான். யாருடனும் சரியாக பேசுவதில்லை. இந்நிலையில், இலங்கை அணி சென்னையில் விளையாட இருப்பதைக் கேள்வியுற்ற பிறகு, 'தமிழரை திட்டமிட்டு அழிக்கும் இலங்கையரைத் தமிழர்கள் தம் தாய் மண்ணில் ஒருக்காலும் அனுமதிக்கக் கூடாது. இதைத் தடுத்து நிறுத்த நான் ஏதாவது செய்தாக வேண்டும்' என்று கூறி வந்தான். தன் நண்பர்களிடமும் இதையே திரும்பத் திரும்பக் கூறியுள்ளான்.

**தீக்குளிப்பு நடந்தது எப்படி?**

மேல் நிலைப் பள்ளிப் படிப்பை முடித்து விட்டு பெரம்பலூரில் லண்டன் கணணி பயிற்சி நிலையத்தில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தான்.



*15-02-96* வெள்ளி காலை 8 மணிக்கு, இப் பயிற்சி நிலையத்திலிருந்து வெளியில் வந்து, தயாராக வைத்திருந்த மண்ணெண்ணையைத் தன் உடம்பில் ஊற்றி, தனக்குத் தானே தீ வைத்துக் கொண்டு, பெரம்பலூரின் மையச் சாலைகள் வழியாக ஓடினான். பலரும் இதைக் கண்டு திகைத்தவாறே, அவனைக் காப்பாற்ற ஓடினார்கள். அவனோ எங்கும் நிற்காமல், "ஈழத்தமிழரைக் காப்பாற்றுங்கள், தெற்காசிய விளையாட்டுப் போட்டியைப் புறக்கணியுங்கள்" என்று கத்திக்கொண்டே பெரியார் சிலை அருகில் வந்து மண்ணில் விழுந்தான். தகவல் அறிந்து நாங்களும் அங்கு ஓடினோம். கருகிய நிலையிலிருந்த எனது மகனைக் கைகளில் ஏந்தி மருத்துவ மனையில் சேர்த்தோம். மருத்துவ மனையில் அவனிடம் 'ஏன் இப்படிச் செய்தாய்?' என்றேன். அதற்கு அவன், "எட்டுக் கோடித் தமிழரும் ஈழப்படுகொலையை எதிர்த்து ஆர்த்தெழ வேண்டும். எந்த

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


ரவூப்பின் புதைகுழி

ஆதிக்க சக்தியும் தமிழினத்தை அழித் தொழித்திட விடக் கூடாது. நாம் விழிப்புற்றுப் போராட வேண்டும்." என்றான்.

குடும்பத்தினருக்கு என்று கடை சியாகக் கடிதம் எதுவும் எழுதியுள் ளாரா?

எங்களுக்கு ஒரு கடிதம் எழுதி அஞ்சல் செய்த பிறகு தான், அவன் தன்னுடலை மாய்த்துக் கொண்டான். அந்தக் கடிதத்தில் ஒரு வரி கூட எங்களைப் பற்றி இல்லை. அவன் அளவுகடந்த பாசம் வைத்திருந்த தனது தங்கையைப் பற்றிய விசாரிப்பு கூட இல்லை.

அக் கடிதத்தில் "நான் இறப்பது எந்தக் கட்சிக்காவும் அல்ல. நான் தமிழன். ஈழத்தமிழனுக்காக உயிரைத் தருகிறேன். தமிழகம் முழுவதும் ஒன்று திரண்டு, நம் தமிழினத்தின் ஒரு பகுதி அழிக்கப்படுவதை எதிர்த்துப் போராட வேண்டும். அனைவருக்கும் விழிப்பு உண்டாக்க, எனது உடலைத் தீப்பந்த மாக்கி தியாகம் செய்கிறேன். தமிழினத் தைக் காப்பாற்ற போராடுங்கள். இல் லையேல் போராட வைப்போம். இன்று நான்.... நாளை தமிழகம்" என்று எழுதியிருந்தான்.

www.tamilarangam.net

தங்கள் மகனின் கடைசி நிமி டங்கள் குறித்து...

உயிர் விடுவதற்குப் பத்து நிமி டம் முன்புவரை 'ஈழத் தமிழரை வாழ விடுங்கள் தெற்காசியப் போட்டியில் இலங்கை அணி பங்கேற்கக் கூடாது. அரசு கதை கட்டுகிறது' என்று கூறினான். தனது தாய் அழுது புரள்வதைக் கண்டு, அவரை வெளியேறும் படி கூறிவிட்டான். மருத்துவமனை யில் சேர்த்த இரண்டு மணி நேரத்தில் அவன் உயிர் பிரிந்தது.

தமிழகத் தலைவர்கள் தங்களைச் சந்தித்தார்களா?

'எக்கட்சிக்காவும் நான் உயிர் துறக்க வில்லை' என்று தெளிவுபட அவன் எழுதி வைத்து இறந்த பிறகும், பல் வேறுகட்சித் தலைவர்களும் அவனைச் சொந்தம் கொண்டாட முனைகின்ற னர். அவன் மரணத்திலும் ஆதாயம் தேட நினைக்கும் அரசியில் கட்சிக ளைக் கண்டால் கோபமும், வேதனை யும்தான் மிஞ்சுகிறது. பொது நோக் கோடு, ஐயா. பழ. நெடுமாறன், திரு. ராமதாசு, திரு. வை. கோ. போன்ற வர்கள் எங்கள் குடும்பத்தை நேரில் சந்தித்தது இரங்கல் தெரிவித்தார்கள். எவ்வித ஆதாயமும் தேடாமல், தொடர்ந்து என் மகனின் இலட்சியங்க ளுக்காக ஒரு சில இயக்கங்களே பாடு படுகின்றன.

தமிழினம், தமிழீழ விடுதலை குறித்து?

மனித உயிர் தோன்றிய மூத்த தமிழ்க்குடி இன்று கேட்பாரற்று, கேடு கள் சூழ உள்ளது. எப்பக்கமும் அதற்கு நெருக்கடிகள். தமிழாய்ந்த தமிழ் மகன் தமிழகத்தில் இல்லை. வாழ்ந்தாலும், மடிந்தாலும், தமிழன் தமிழனாக விளங்க வேண்டும். எனது மகன் அப் படிப்பட்ட ஒருவனாய் விளங்கினான் என்பதில் பெருமையடைகிறேன்.

தமிழ் உணர்வை எவராலும் அழித்துவிட முடியாது. இந்தியா யாசிர் அரபாத்தோடு கைகுலுக்குகி றது, தென்னாபிரிக்காவிற்கு நேசக் கரம் நீட்டுகிறது. நமக்கருகில் ஈழம். நம் சொந்தங்களுக்கு நாம் நேசக்கரம் நீட் டுவதில் என்ன தவறு? தமிழினத்தைத் தொடர்ந்து புறக்கணிக்கும் நடுவரசை, தமிழக அரசை நமது உணர்வுபூர்வ மான போராட்டங்களால் எச்சரிக்க வும், ஈழத் தமிழரை ஆதரிக்கவும் நாம் விரைந்து நடவடிக்கைகள் மேற் கொள்ளாவிட்டால், வரலாறு நம்மை மன்னிக்காது.

மீண்டும் எமது இரங்கலைத் தெரிவிக்கின்றோம். மிக்க நன்றி.

வணக்கம்.


ரவூப்பின் பெற்றோர்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காணிக்கை

தாமரைச்செல்வி

மேற்குப் பக்க அடிவானத்துக்கு சூரியன் போய்விட்டது. புளிய மரத்தின் அடியில் மரக்குற்றியில் அமர்ந்து சுற்றுபுறத்தைப் பார்த்துக் கொண்டிருந்தான் சிவலிங்கம்.

தோட்ட வேலை இன்னமும் முடியவில்லை. கோபாலன் கத்தரிக்குப் பாத்தி கட்டிக்கொண்டிருக்க, மனோன்மணி செழித்து வளர்ந்திருந்த கீரைப் பாத்திக்குள் தப்பி நின்ற புற்களைப் பிடுங்கிக் கொண்டிருந்தாள்.

அவர்களின் ஐந்து வயது மகன் தேவன் வரம்பு மீது சிறிய தடிகளை வைத்து தன்பாட்டில் விளையாடிக் கொண்டிருந்தான்.

மங்கி வந்த வெயிலில் தோட்டம் பச்சைப் பசேல் என்றிருந்தது. ஒரு பக்கம் கத்தரி, வெண்டி, பாகற்கொடிகள்.... மறுபக்கம் கீரை, வெங்காயம், மிளகாய்க் கன்றுகள்...... எல்லாம் இவர்கள் உழைப்பால் செழித்து வளர்ந்தவை.

தங்கள் தோட்ட வேலைகளை தாங்களே செய்வார்கள். வெயில் மழை பாராமல் அவர்கள் வேலை செய்வதும் தாய் தகப்பனுக்கு எந்த இடைஞ்சலும் இல்லாமல் பிள்ளை இருந்து விளையாடுவதும் சிவலிங்கத்துக்கு ஆச்சரியமான விஷயங்கள்.

முந்தநாள் கோபாலனிடம் மண்வெட்டி வாங்கி சிறிது மண்ணைக் கொத்துவதற்குள் நாரி பிடித்து விட்டது.

இவர்கள் அலுக்காமல் சலிக்காமல் எப்படித்தான் வேலை செய்கிறார்களோ.......

‘சூரிய கதிர்’ நடவடிக்கையில் யாழ்ப்பாணத்திலிருந்து இடம் பெயர்ந்து வன்னிக்கு வந்ததில் இந்த ஒரு மாதமாய் சிவலிங்கமும் மனைவி ரேவதியும் மகன் சுதனும் இவர்கள் வீட்டில்தான் இருக்கிறார்கள். மண் வீடு என்றாலும் ஒரு அறையும் கொடுத்து பக்கத்தில் சமைப்பதற்கு ஒரு கொட்டிலும் போட்டுக் கொடுத்திருந்தான் கோபாலன்.

முற்றத்தில் வேலியோரம் வரிசையாக நாலைந்து இளம் செவ்விளனி மரங்கள், நல்ல குளிர்மையான முற்றம், தெருவில் அந்தப் பக்கமாய் சலசலத்து ஓடும் சிறிய வாய்க்கால், முற்றத்தில் முதலாய் நிற்கும் செவ்விளனி மரத்தில் குலைகுலையாய் காய்கள். பெரிய குலையில் சிவப்புத் துண்டு கட்டப்பட்டிருந்தது. எத்தனையோ பேர் செவ்விளனி கேட்டு வந்தும் கோபாலன் கொடுப்பதில்லை.

“இப்ப இளனி நல்ல விலை தானே, இளனியும் தட்டுப்பாடு, குடுக்கலாமே....” என்று சிவலிங்கம் கேட்டத்துக்கு, “இல்லையண்ணை, அது முதன் முதல் போட்ட குலை. கோயிலுக்கு நேர்ந்து இருக்கு, அதால ஒருத்தருக்கும் குடுக்கேலாது” என்று கோபாலன் சொல்லியிருந்தான்.

கோபாலனும் மனோன்மணியும் இருள் விலகமுதல் எழுந்து தோட்டத்துக்குப் போவார்கள். காலையில் மரக்கறிகளை சைக்கிளில் கட்டிக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கொண்டு போய் கிளிநொச்சிச் சந்தையில் கொடுத்துவிட்டு வருவான்.

தேவன் தாய் தகப்பனின் எந்த வேலைக்கும் இடைஞ்சல் செய்வதில்லை. அழுகை இல்லை.... பிடிவாதம் இல்லை..... சிணுங்கல் இல்லை. எந்நேரமும் மண் மீது தான் விளையாட்டு.

ரேவதி சுதனை தேவனுடன் விளையாட விடுவதில்லை. "நீ அங்க தோட்டப் பக்கம் போகக்கூடாது. இங்க அம்மாவோடயே இருக்க வேணும்" என்று தன்னுடனேயே வைத்திருப்பாள்.

எப்போதும் சுதன் பளிச்சென்று இருப்பான். அங்கு மண் மீது விளையாடி சட்டைகளில் அழுக்குப் பிடிக்க விட்டுவிடுவான் என்ற பயம். இந்த இடம்கூட அவளுக்கு அவ்வளவாகப் பிடிக்கவில்லை.

"என்னப்பா இந்த மண் வீட்டுக்க என்னெண்டு இருக்கிறது" என்ற முணுமுணுப்பு.

"வலிகாமத்திலிருந்து சனம் வன்னிக்கு வந்து குவியுதுகள். இங்க ஒரு வீடு எடுக்க எவ்வளவு கஷ்டம். இருக்க இடம் இல்லாமல் எத்தினை சனங்கள் அலையுதுகள். எங்களுக்கு தண்ணி, பாத்ரூம் வசதியோட இந்த மண்வீடு கிடைச்சது எவ்வளவு பெரிசு. இதுகளும் நல்ல சனம்."

"என்னத்த நல்ல சனம்." அலுத்துக்கொண்டாள்.

"ஏனப்பா...."

"இல்லை. இதுகளுக்கு கத்தரி, மிளகாய், வெங்காயம் தவிர ஒரு நாசமும் தெரியாது. இதுகளோட என்ன விஷயத்தைப் பற்றிக் கதைக்கலாம் சொல்லுங்கோ."

"நீ யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தனி. உத்தியோகக்காரன்ர பெண்சாதி. நடப்பு நாகரிகமாய் இருந்தனி. எல்லாம் சரி. அதுக்காக இதுகளை இளக்காரமாய்க் கதைக்கிறதே.... ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு சூழல்."

"எண்டாலும் எனக்கு இங்க இருக்க விருப்பமில்லை.

இடமில்லாமல் இந்த கனகாம்பிகைக் குளத்தில கொண்டுவந்து இருக்க விட்டிட்டீங்கள். கிளிநொச்சி ரவுண் பக்கமாய் எங்கையாவது ஒரு வீடு எடுத்திருக்கலாம். இது ரவுணுக்குப் போறதெண்டால் கூட நாலு கட்டை போகவேணும்."

"பொம்பிளையளுக்கு ஒரு கால மும் போதும் எண்ட மனம் வாறேலை. எல்லாத்திலையும் ஒவ்வொரு குறைதான். கிளிநொச்சி ரவுணுக்க இருக்கிறதும் பயம்தானே. ஆனையிறவிலிருந்து மெயின்றோட் நீளத்துக்குத்தானே ஷெல் அடிக்கிறாங்கள். அண்டைக்கும் அடிச்ச ஷெல்லில் கனிஷ்ரா ஸ்கூலுக்கு பக்கத்திலை நாலுபேர் செத்தவையாம். பிறகு ரவுணுக்க இருக்க ஆசைப்படுகிறாய்..."

"மனிசருக்கு எங்க போனாலும் நிம்மதி இல்லை...."

"இது எல்லோருக்கும் ஒத்தது தானே. ஐந்து லட்சம் சனத்துக்கு மேல இப்படி இடம்பெயர்ந்து வந்ததுகள் தானே. நாங்கள் மட்டும்...."

"நீங்கள் என்னவும் சொல்லுங்கோ, இது எங்கட வீடு மாதிரி வருமே...."

"வராதுதான். அதுக்கு என்ன செய்யிறது. இருக்கிற இடத்தை எங்கட வீடாய் ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான். அந்த மனநிலையை நாங்கள் வளர்த்துக்கொள்ளவேணும்."

"கடவுளே... வீட்டயும் வீட்டில எத்தினை பொருள்களையும் விட்டிட்டு வந்து இப்பிடி மண் வீட்டுக்க கிடக்க வேண்டியிருக்கு. எத்தினை சில்வர் சாமான்.... எத்தினை கிளாஸ் பெட்டிகள்.... எத்தினை உடுப்புகள்..."

அவளுக்கு வீட்டை நினைத்த உடனும் கண்கலங்கி விடும். அவனுக்கும் ஒன்றும் சொல்ல முடியாமல் போய்விடும்.

பொழுது நன்றாகச் சாய்ந்துவிட்டது. கோபாலனும் மனோன்மணியும் வேலைகளை முடித்துக்கொண்டு வந்தார்கள்.

சிவலிங்கம் எழுந்து வீட்டுக்குள் வந்தபோது ரேவதி சுதனை மடியில் படுக்கவைத்துக்கொண்டிருந்தாள்.

"சுதன் சோர்ந்துபோய் இருக்கிறான். காய்ச்சல் குணம் போல கிடக்கு" என்றாள் ரேவதி.

"பத்து வயதுப் பொடியனை விளையாடவும் விடாமல் அமத்தி வைச்சுக்கொண்டிருந்தால் அது சோர்ந்துபோய் இருக்கும்தானே. சுதன் எழும்பி இங்கே வாங்கோ பாப்பம்"

"கட்டிலில் படுத்துப் பழகின பிள்ளை. இங்க மண் திண்ணையில படுக்கிறதுதானே... குளிர் பிடிச்சுதோ தெரியேல்லை. பக்கத்திலை இரணைமடுக் குளமல்லே. அதுதான் எந்த நேரமும் குளிர் காத்து அடிச்சபடி, பிள்ளைக்கு ஒத்து வரேலை."

சிவலிங்கம் சுதனைத் தொட்டுப் பார்க்க கொஞ்சம் கணகணவென்று தான் இருந்தது.

"பொழுதுபட்ட நேரம். இப்ப என்ன செய்யிறது. ஒரு பனடோல்

சிறிலங்கா இராணுவத்தினர், கைப்பற்றி நிலைகொண்டுள்ள வலிகாமப் பகுதியில் விடுதலைப்புலிகளின் தாக்குதல் அதிகரித்திருப்பது குறித்து, சிறிலங்கா அரசாங்கம் பெரும் கலக்கமடைந்துள்ளதாகவும், ஏது செய்வதென்ற குழப்பத்திற்கு ஆளாகியிருப்பதாகவும் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். வலிகாமத்தில் நிலைகொண்டுள்ள, போர் அனுபவம் பெற்ற, நீண்டகாலம் சேவை புரிந்த இராணுவத்தினரைத் திரட்டி, புதிய இராணுவ நடவடிக்கை ஒன்றை மேற்கொள்வதெனவும், மீளப் பெறும் இராணுவத்தினருக்குப் பதிலாக புதிய இராணுவத்தினரை அங்கு அனுப்புவதெனவும் சிறிலங்கா அரசு எடுத்திருக்கும் முடிவிற்கு, பலத்த அடி கொடுக்கும் விதத்தில் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். போர் அனுபவமே இல்லாத புதியவர்கள் விடுதலைப்புலிகளின் தாக்குதல்களைச் சமாளிப்பது இயலாத காரியம் என, அரசாங்கம் சந்தேகத்துக்கிடமின்றி உணருவதால், அடுத்து என்ன செய்வது என்ற குழப்பத்தில் அரசாங்கம் இருப்பதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

பிரதிப் பாதுகாப்பமைச்சர் ரத்வத்தைக்கும், சந்திரிகாவிற்கும் இடையிலான மோதல் மேலும் வலுவடைந்துள்ளதாக தெரிய வருகின்றது. சித்திரை மாதத்திற்குள் விடுதலைப்புலிகளை ஒழித்துக் காட்டுகிறேன் என, போகும் இடங்களில் சூளுரைக்கும் அமைச்சர் ரத்வத்தை, அடுத்த பாரிய யுத்தத்தை வலியுறுத்தி வருகின்ற போதும், சில இராணுவ அதிகாரிகள், அடுத்த யுத்தத்தின் பிரதிபலிப்புக்கள் பயங்கரமான பின்விளைவுகளை ஏற்படுத்தும் என எச்சரித்து, சந்திரிகாவைச் சற்று தயக்கமடைய வைத்திருக்கிறார்களாம்.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

குடுத்துப் பாப்பம்"

"எங்களிட்ட இருந்தது முடிஞ் சிட்டுது. இவையிட்ட இருக்கோ தெரியேல்லை. கேட்டுப் பாப்பம்"

அப்போது சேலைத் தலைப்பால் முகம் துடைத்துக்கொண்டு அங்கு வந்த மனோன்மணியிடம் ரேவதி கேட்டாள்.

"பனடோல் இருக்குதா..."

"அதைக்கூட தடைசெய்து போட் டாங்களே.... சரியான தட்டுப்பாடு. எங்களிட்ட இல்லை ஏன் தம்பிக்கு காய்ச்சலே"

"ஓம் மெலிசாய் சுடுகுது"

"தூதுவளமிலை போட்டு மல்லித் தண்ணி அவிச்சுத்தாறன் குடுங்கோ. காய்ச்சல் போயிடும்."

"அய்யோ..... நான் அப்பிடி ஒரு நாளும் குடுக்கிறேல்லை. பனடோல் குடுத்துத்தான் பழக்கம். இப்ப என்ன செய்வம்" மனோன்மணி லாம்பைக் கொழுத்திக்கொண்டு வந்து வைத் தாள்.

"இப்ப டொக்ரிட்ட கொண்டு போகலாமே..." ரேவதி கவலையுடன் கேட்டாள்.

"இங்க பக்கத்தில டொக்டர் இல்லை. அதுக்கும் ரவுணுக்குத் தான் போகவேணும். இப்ப போக ஏலாது"

சுதனைத் தொட்டுப் பார்த்தான் கோபாலன்.

"அவ்வளவு சுடேலை. நாளைக் குக் காலமை டாக்டரிட்ட காட் டலாம்" என்றான்.

"சின்னப்பிள்ளையளுக்கு பார்க் கிற ஸ்பெஷலிஸ்ட் ஆரும் இங்க இருக்கினமே" என்று கேட்டாள் ரேவதி.

"இங்க அப்பிடி ஒருவரும் இல்லை. எல்லோரும் ஆர் எம்பிமார்தான். கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்குப் போனாலும் சரியான சனம். நாள் முழுக்க கியூவில நிற்க வேணும். பிறவேற்றாய்த்தான் காட்டவேணும்" சொல்லிவிட்டு கோபாலன் பின்பக் கம் மாடுகள் பிடித்துக்கட்ட போக மனோன்மணி தங்கள் குசினிக்குள் நுழைந்தாள்.

"பக்கத்தில் ஒரு டொக்டர் இல்லை. என்ன ஊரப்பா இது"

"எல்லா இடத்திலயும் எல்லா வசதியும் கிடைக்குமே? நீ இன்னும் யாழ்ப்பாணக் கனவில இருக்கிறாய். இருக்கிற இடத்துக்குத் தக்கபடி சமாளிக்கத்தானே வேணும். இங்க யும் சனங்கள் சீவிக்குதுகள்தானே"

www.tamilarangam.net

"ஓ.... இதுகள் மருந்தே குடுக்கா மல் பிள்ளை வளர்க்குதுகள். மண் ணுக்கயும் தூசிக்கயும் பிள்ளை விளையாடுது. தோட்ட வேலைக ளைச் செய்துபோட்டு வாய்க்காலில் குளிச்சுப் போட்டு வருகுதுகள். முதல்ல போடுற குலையும் முதல்ல கறக்கிற பாலும் கோயிலுக்கு எண்ட



நம்பிக்கை வேற. ஒருவிதமான சனங்கள் இதுகள். உழைப்பையும் சாப்பாட்டையும் தவிர இதுகளுக்கு வேறென்ன தெரியும்...."

ரேவதி இப்படிச் சொன்னது சிவலிங்கத்துக்குப் பிடிக்கவில்லை. ஏதாவது சொல்லவேண்டும் போல் இருந்தாலும் வார்த்தைகளை வளர்க்க விரும்பாததால் பேசாமல் இருந் தான்.

இரவு சுதனுக்கு காய்ச்சல் இருந் தது மனதுக்குள் கவலையாய் இருந் தது.

"இது மலேரியாவாய்த்தான் இருக்கும். கிளிநொச்சிப் பக்கம் மலேரியா வாறதெண்டு கதைக்கிற வைதானே"

"என்ன விசர்க்கதை கதைக்கிறாய், யாழ்ப்பாணத்தில சனத்துக்கு மலே ரியா வாறேலையே?"

"எண்டாலும் இங்க பெரிய நுளம்பு. இங்க உள்ள சனம் எப்பி டித்தான் சீவிக்குதுகளோ...?"

இரவு முழுவதும் ரேவதி முணு முணுத்துக்கொண்டே இருந்தாள்.

மறுநாள் காலையில் மோட்டார் சைக்கிளில் ரேவதியையும் சுதனை யும் ஏற்றிக்கொண்டு கிளிநொச்சிக் குப் போனான்.

அவர்கள் போன பின்னர் கோபாலன் தோட்டவேலை செய்ய மனோன்மணி நனையப்போட்டி ருந்த ஓலைகளைப் புளியமரத்தின் கீழ் இருந்து பின்னினாள். அவசர மாய் சமைத்தாள். வாய்க்கால் தண் ணீரில் ஒரு மணி நேரமாய் குளித் துக்கொண்டிருந்த தேவனை கூப் பிட்டு சாப்பாடு கொடுத்தாள்.

வெயில் சுள்ளென்று கொளுத் திக் கொண்டிருந்தது.

ஒரு மோட்டார் சைக்கிள் சத் தம் கேட்டது. சோர்ந்துபோயிருந்த சுதனை கைத்தாங்கலில் இறக்கி ரேவதி உள்ளே கூட்டிவர சிவலிங் கம் மறுபடி புறப்பட ஆயத்தமா னான்.

"சாப்பிடவும் இல்லை. திரும்ப எங்க அண்ணை போறீங்கள்" கோபாலன் கேட்டான்.

"டொக்டர் சுதனுக்கு நிறைய செவ்விளனி குடுக்கச் சொன்னவர். வரேக்க ரவுணுக்க செவ்விளனி கிடைக்கேலை, அதுதான் திருவை யாற்றுப் பக்கம் பாப்பம் எண்டு போறன்."

கோபாலன் ஒரு வினாடி பொறுத்து,

"நீங்கள் ஓரிடமும் அலைய வேண்டாம் அண்ணை, இந்த முத் தத்து இளனிக் குலையை வெட் டித்தாறன்" என்றான்.

"அது நேர்த்திக்கு...." என்று இழுத் தான் சிவலிங்கம்.


"பரவாயில்லை அண்ணை, மனோன்மணி, அந்தக் கத்தியைத் தா" அவள் கொடுத்த கத்தியை வாங்கிக்கொண்டு அந்தக் குலையை எட்டி சரக்கென்று வெட்டினான் கோபாலன்.

ரேவதி சட்டென்று கோபால னைத் திரும்பிப் பார்த்தாள். வெட் டப்பட்ட அந்த செவ்விளனிக் குலை யின் மேற்பிடியில் சிவப்புத் துண்டு தொங்கிக்கொண்டிருந்தது. ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலம்பெயர் நாடுகளில் தமிழர்கள்;
# சொந்த அடையாளம் பறிபோகும் அபாயம்



அண்மையில் ஐரோப்பிய நாடுகள் எங்கும் சுற்றுப்பயணத்தை மேற்கொண்ட உழைக்கும் மக்கள் விடுதலை இயக்க நிறுவனர் அருட்திரு சேவியர் அருள்ராஜ் அவர்களின் மடல்.

**என் இனிய உடன்பிறப்புக்களுக்கு, வணக்கம்!**

கடந்த சில மாதங்களாய் ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் பயணித்துப் புலம்பெயர்ந்து வாழும் நம்மவர்களைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. நான் தற்போது தாயகம் திரும்பிவிட்டேன். மூன்று மாதங்களிலேயே தாயகம் திரும்பும் நாட்களை எண்ணத் தொடங்கிவிட்டேன். பல்லாண்டுகளாய்ப் புலம்பெயர்ந்து வாழும் நீங்கள் தாயகம் திரும்ப எவ்வளவு தாகமாயிருப்பீர்கள் என்பதை இப்போது என்னால் புரிந்துகொள்ள முடிகிறது.

நாடு திரும்பியதும், தமிழீழ விடுதலைக்காய் தீக்குளித்த அப்துல் ரவூப்பின் கல்லறைக்குச் சென்று அஞ்சலி செலுத்தினேன். பெரம்பலூரில் ரவூப்பின் பெற்றோர்களைச் சந்தித்தபின் லெப்பைகுடி காட்டில் அம்மாவீரனின் கல்லறையில், எமதியக்கத் தோழர்கள் சிலருடன் வீரவணக்கம் செய்தபோது, “மாவீரர் யாரோ என்றால் மரணத்தை வென்றுள்ளோரே...” என்ற நம் பாடலை என்னையறியாமல் என் உதடுகள் முணுமுணுத்தன.

அம்மாவீரனின் புதைகுழியில் நான் நின்ற அந்த நிமிடங்களில், பூமிப்பந்தின் முகமெல்லாம் சிதறிக் கிடக்கும் நம் தமிழீழ மக்கள் படும் துன்பங்கள் என் நெஞ்சை அழுத்தின. இரத்தம் சொட்டும் அந்நினைவுகளுடன், புலம்பெயர்ந்த தமிழீழ மக்கள் பற்றிய சில எண்ணங்களை மட்டும் இம்மடல் வழியே தங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மகிழ்ச்சி.

தமிழீழத் தாயகம் அமையுமா என்பது கேள்வி அல்ல. அது அமைந்துவிட்டது என்பதே யதார்த்தம். ஆனால், அதற்கான உலக அங்கீகாரம் மட்டுமே தள்ளிப் போகிறது. ஏனெனில் ஓர் நாடு அமைவது, அடிப்படையில் அத்தேசிய மக்களின் நெஞ்சங்களில்தான். அப்படிப் பார்த்தால் இருபது ஆண்டுகளுக்கு முன் தமிழீழ நெஞ்சங்களில் வீழ்ந்த சுயநிர்ணய வித்துக்கள், இன்று புலிகளின் வீரஞ்செறிந்த தியாகத்தாலும், தம்பி பிரபாகரனின் ஒப்பற்ற தலைமையாலும், விருட்சமாய் வேர்விட்டு கிளைபரப்பி நிற்கிறது என்பது பட்டப்பகலில் வெட்ட வெளிச்சம். அப்படி விழுதுவிட்ட விருட்சத்தை, எல்லாத் தார்மீக நெறிகளுக்கும் எதிராக, உலக சமூகத்தின் கண்களில் மண்ணைத் தூவிவிட்டு அமைதிப் போர்வையில் வெட்டி வீழ்த்த முயன்று, முகத்திரை கிழிபட்டு நிற்கிறார் சந்திரிகா. புலம்பெயர்ந்து வாழும் நம் மக்கள் யாரும் இலங்கையை தம் நாடாகக் கருதியதில்லை. தமிழீழமே தம் தாயகம் என்று சிந்திப்பதையும், பேசுவதையும், உணர்வதையும் உங்களில் நான் கண்கூடாகக் கண்டேன். இந்திய வல்லாதிக்கத்தால் ஒடுக்குண்ட நிலையில் வாழும் என் போன்ற தமிழகத் தமிழனுக்கு, புலம்பெயர்ந்த நிலையிலும் உணர்வு மங்காமல் வாழும் உங்களின் விடுதலை உணர்வும், உறுதியான செயற்பாடும் புத்துணர்ச்சி ஊட்டுவதாயும், புதிய தரிசனமாகவும் அமைந்தது.

ஐரோப்பிய நாடுகளில் வாழும் நம் தமிழீழ மக்கள் ஒரு படித்தாகச் சிந்திப்பதையும், செயல்படுவதையும், விடுதலைப் புலிகள் அமைப்பையே தங்கள் தேசிய இயக்கமாகப் பார்ப்பதையும் என்னால் காணமுடிந்தது. புலம்பெயர்ந்து வாழும் தமிழீழ மக்களான உங்களிடமிருந்து, தேசப்பற்றையும், தாயக உணர்வையும், ஒருங்கிணைந்த செயற்பாட்டையும், சொல்லொணாத் தியாகத்தையும் நான் கற்றுக்கொண்டேன். உங்களுக்குக் கற்றுக்கொடுக்க இவ்வுலகில் எந்த அறிவாளிக்கும் தகுதியில்லை என்றே கருதுகிறேன். காரணம் நீங்கள் சுதந்திரத்தை யாசிப்பவர்களல்ல; நேசிப்பவர்கள். அதற்கு விலையாக உயிரையும் கொடுப்பவர்கள். அடிமைகளும் குடிமைகளுமாய்ப் பெருகிப் போன உலகில் நீங்கள் பெரிதும் வித்தியாசமானவர்கள். புலம்பெயர்ந்து வாழும் நிலையிலும், பல்வேறு தியாகங்களுக்கூடாக தமிழீழ தேசிய விடுதலைக்கு ஏதாவது ஒருவகையில் பங்களிப்புச் செய்கிறீர்கள். தமிழீழத்திற்கான போராட்டம் தமிழீழப் பகுதிகளில் மட்டுமல்ல, உலகம் முழுவதும் நடந்து வருகிறது என்பதையும், ஒவ்வொரு தமிழரின் நெஞ்சிலும் நிலைகொண்டுள்ளது என்பதையும், உங்களைப் பார்த்த பின்னே நான் புரிந்துகொண்டேன். எனினும் நம் போராட்டம் விரைவில் இலக்கை அடையவும், நெடுநோக்கில் மதிப்பீட்டு நிலை பெறவும் சில கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்திட விரும்புகிறேன்.

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தனித்தன்மை என்பது அதை வழிநடத்தும் சமரசமற்ற, இலட்சிய உணர்வுகொண்ட, தியாகமும், தேசப்பற்றுமுடைய தலைமையின்பாற்பட்டது. அத்தலைமையின் உயர்பண்புகள் அவ்வியக்கத்தின் வேர்க்கால் மட்டம் வரை விரவி, தோழர்கள் ஒவ்வொருவரின் குருதியிலும் பாய்வதைப் பார்க்க முடிகிறது. ஒவ்வொரு ஐரோப்பிய நாட்டிலுமுள்ள நம் இயக்கப் பொறுப்பாளர்கள், தலைவர்கள், கிளை அமைப்பின்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பொறுப்பாளர்கள் செய்கின்ற தியாகம் என்னை அதிகம் பாதித்தது. தங்களுக்கென்று எதுவும் வைத்துக் கொள்ளாமல், தங்கள் சொந்த நலனுக்கு மேலாக இயக்க நலனை அவர்கள் நிறுத்துவதை அனைத்திலும் காணமுடிந்தது. அவர்கள் வாழும் நாடுகள் பணக்கார மேலை நாடுகள் என்றாலும், அப் பணமோ, வசதி வாய்ப்புகளோ, மேலைநாட்டு நுகர்வெறியோ இயக்க முன்னணித் தோழர்களின் ஆன்மாவைக் கறைப்படுத்த முடியவில்லை. நெருப்பைக் கரையான் அரிக்க முடியாதுதானே! 'ஹவாலா சனநாயக' நாட்டிலிருந்து நான் சிந்திக்கிறபோது, நம் இயக்கத் தலைவர்களின் தியாகம் நம்பமுடியாத தன்மையாய் உள்ளது. அடிப்படை வசதிகளைக் கூடத் தியாகம் செய்துவிட்டுத் தரையில் படுப்பதும், உண்ணாமல் உறங்காமல் அலைவதும் இரவு பகலாக உழைப்பதும் என் நெஞ்சைத் தொட்டது. ஈழத்தில் சாதனை புரியும் நம் மாவீரர்களின் தியாகம் மிகவும் மலைக்க வைப்பது. அதேவேளையில், புலம்பெயர்ந்த நிலையில் ஓயாது உழைக்கும் நம் இயக்கத் தோழர்களின் இத் தியாகங்கள் அதற்குச் சற்றும் குறைந்தவையல்ல. அப்பழுக்கற்ற இத் தோழர்களின் மேல் மக்கள் வைத்துள்ள அபரிதமான மதிப்பும், அன்பும், நம்பிக்கையும் அளவிடமுடியாதது. மக்களுக்காக இவர்களின் வழிகாட்டுதல் என்பது, வார்த்தைகளாக இல்லாது ஒரு வாழ்க்கையாக அமைந்துள்ளது. தியாகத்தின் தன்மை அடுத்தவரைத் தொற்றுவது. தியாகிகளே தியாகிகளைப் பெற்றெடுக்க முடியும். அவ்வகையில் தம்பி பிரபாகரன் என்ற தியாகத் தலைவனே இவர்களை ஈன்றெடுத்திருக்க முடியும் என நான் ஆழமாக நம்புகிறேன்.

இது ஒருபுறமிருக்க, இவை யாதொன்றோடும் தொடர்பில்லாதவர்கள் போல், கண்டும் காணாமல் தங்கள் போக்கில் வாழமுனையும் தமிழீழ மக்கள் சிலரையும் என்னால் காணமுடிந்தது. அவர்களில் சிலர், புலம்பெயர்ந்து வாழ்கிறோம் என்ற உணர்வின்றி, மேலைநாடுகளைத் தம் தாய் பூமியாய் நினைக்க முயல்வது போலித்தனம் மட்டுமல்ல பரிதாபத்துக்குரியதும் கூட. சிலர் தாங்கள் வைத்துள்ள கைத்தொலைபேசிகள், விலை உயர்ந்த வாகனங்கள், பெரிய வீடுகள், பிற நுகர்பொருட்கள் இவற்றில் பெருமை கொள்வதையும் காணமுடிந்தது. இப்படிப்பட்டோர் மிகச் சிறுபான்மையோர் எனினும், அவர்களும் நெறிப்படுவது சிறப்பு. மேலே சொன்ன நுகர்பொருட்கள் நம் தேச விடுதலைப் பணிக்கு உதவும் வரை அவற்றைக் கையாளுதல் சரியே. ஆனால் எங்கோ தொலைந்துவிட்ட நம் ஆழுமையின் ஆழத்தை இப் போலித்தனங்களால் பூசி மெழுக முடியாது என்பதே உண்மை. நம் தாயக விடுதலைக்கும், இதனை முன்னெடுக்கும் இயக்கத்திற்கும் எவ்வளவு தியாகம் செய்கிறோம் என்பது மட்டுமே பெருமைக்குரியதே ஒழிய, நாம் அடைக்கலம் புகுந்த நாடுகளில் எவ்வளவு பொருள் சேர்க்கிறோம் என்பது ஒரு பொருட்டல்ல. அது வடிகட்டிய மடைமையும், பேடித்தனமுமாகும். நம் தேச விடுதலைக்கு உதவுவது ஒன்றே, நாம் இந்நாடுகளில் தங்குவதற்கான ஒரே தார்மீக அடிப்படை. அது இயலாதெனில், நாமும் நாடு திரும்பிப் போராளிகளாய் மாறுவதே சரியாக அமையும். நாம் எடுக்கும் வேறெந்த நிலைப்பாடும், நம்மை மட்டுமல்ல, நம் தேசத்தையும், இனத்தையும், மானுடத்தையும், மரணத்தை வென்றெழும் மாவீரர்களையும் இழிவுபடுத்துவதாகவே அமையும். அக்கறையை யாராலும் கழுவ முடியாது.

அடுத்து, புலம்பெயர்ந்த நம் தமிழரின் புதிய தலைமுறையான சில குழந்தைகள், அந்தந்த நாட்டு மொழிகளில் தமக்குள் உரையாடுவது கண்டு நான் திடுக்கிட்டேன். சில பல ஆண்டுகளில் அம்மொழி அவர்களின் தாய்மொழியாய் மாறிவிடும் அபாயமுள்ளது. தமிழ்ப் பள்ளிகள் மட்டும் இதனைச் சரிசெய்ய முடியாது. அந்நிய நாட்டினரோடு பேசுவதற்கு மட்டுமே குழந்தைகள் அம்மொழியைப் பயன்படுத்த வேண்டும். பிற குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை அனைவரோடும் தமிழிலேயே பேசவேண்டும். இல்லாவிடில் தாயகத்திலிருந்து புலம்பெயர்ந்து வாழ்வது நம் தலைமுறைக்கு எவ்வளவு சிரமமாய் உள்ளதோ, அதைவிடப் பன்மடங்கு இக் குழந்தைகளுக்குத் தாயகம் திரும்புவதே சிரமமாக அமையக்கூடும். மேலும் ஒரே குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் பல நாடுகளில் வாழ்வதால், உறவுக் குழந்தைகள் கூடத் தமக்குள் மனம்விட்டுக் குலாவுதல் இயலாமற் போகும். தமிழ்ப் பற்றும், தாயகப் பற்றுமின்றி, வேரற்ற மனிதராய் வேறு நாடுகளில் சீரழிந்து, சொந்த அடையாளமின்றிப் போகும் அவலம் அண்மையிலுள்ளது.

மேலும் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளில் வாழும் நம்மவர்கள், அந்நாட்டுக் கடவுச்சீட்டுப் பெறுவதைப் பெரும்பேறாகக் கருதும் போக்கும் பலரிடையே நிலவுகிறது. அது தற்காலிக நடவடிக்கை என்று புரிந்து கொண்டால் சரி. ஆனால் எந்தப் பொழுதிலும், அந்நியர்களை ஒரேயொரு சட்டத்தின் சுழி மூலம் அந்நாட்டிலிருந்து வெளியேற்றுவது அந்நாட்டிற்குச் சாத்தியமே. எனவே கடவுச்சீட்டுக் கனவுகள் எந்நேரமும் கலைந்துபோகும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

நிலையுள்ளது. மேலும், அந்நாடுகளில் வளர்ந்துவரும் வேலையின்மை, பொருளாதார நெருக்கடி இவற்றைக் கருத்தில் கொண்டால் இந்நெருக்கடி வளரும் வாய்ப்பே அதிகம், குறையும் வாய்ப்பில்லை. அண்மையில் ஜெர்மனி நூபெக் நகரில் 7 அந்நியர்களை அந்நாட்டினர் உயிரோடு எரித்துக் கொன்றதும், பிரான்சு நாட்டின் பொது வேலைநிறுத்தமும் வளர்ந்து வரும், இப்போக்கின் சிறிய அடையாளங்கள் மட்டுமே என்பதை நம் போன்றவர்கள் மறக்கக்கூடாது.

எனவே, தன்மானத்துடனும், சுதந்திரத்துடனும் நாம் வாழவேண்டுமாயினும் சரி, நம் வருங்காலத் தலைமுறை நிரந்தர நிம்மதியுடனும், மகிழ்ச்சியுடனும் நெஞ்சு நிமிர்த்தி வாழ வேண்டுமாயினும் சரி, நாம் தாயகம் அமைத்தே தீரவேண்டும். அதற்காக உழைப்பதும், உதவுவதும் மட்டுமே நாம் புலம்பெயர்ந்து வாழும் ஒரே காரணமாய்க் கொள்ளுதல் வேண்டும். மற்றப்படி, அந்த நாடுகளில் நாம் வாழ வேறு காரணங்கள் இருக்கக் கூடுமாயின், அது சுயநலம் அல்லது கோழைத்தனமாகவே இருக்கமுடியும். ஏனெனில் உயிரைப் பணயம் வைத்து குருதி கொட்டக் கொட்ட நம் தோழர்கள் களத்தில் போராடுகின்றனர். அகதிகளாயும், அடிமைகளாயும் வாழ்வதைவிட, சுதந்திர மனிதராய்ப் போராடிச் சாவது சிறப்பு என்பதை நாம் அறிந்திருக்கிறோம். எனவே ஓடி ஒளிவதென்பதும், எப்படியும் உயிர் பிழைப்பதென்பதும் நமக்கு மட்டும் எப்படி நியதியாக அமைய முடியும்? தேசம் அமைவதற்குச் செய்யப்படும் தியாகத்தில் அனைவரும் பங்கெடுக்க வேண்டும். இது சரி என்றால் தியாகம் செய்வதில் நமக்குள் நலமான போட்டி நிலவவேண்டும். இதுவே தமிழீழ விடுதலைக் கலாச்சாரமாயும், நம் தேசிய அடையாளமாயும் அமைதல் வேண்டும்.

இந்த முறையில் இயக்கத் தோழர்களும் தமிழீழ மக்களும் செய்துள்ள தியாகங்கள் உயர்ந்தவை; ஒப்பற்றவை. இவை முழுமை பெற்று, நாம் குருதி சிந்தி வளர்த்துள்ள விடுதலை விருட்சம் நிலைபெற வேண்டுமெனில், நாம் அனைவரும் ஒரே புள்ளியிலும், வீச்சிலும் இணையவேண்டும். சிங்கள இனவெறி நாக்கைத் தொங்கப் போட்டுக்கொண்டு, நரமாமிசப் பட்சியாய், சந்திரிகாவின் உருவில் அலைந்தாலும், தேச விடுதலைக்கான மக்கள் போராட்டம் தோற்றதாய் உலகில் எங்குமே வரலாறு இல்லை.

www.tamilarangam.net

யூதர்கள் கட்டியெழுப்பிய எருசலேம் பல்வேறு ஆக்கிரமிப்பாளர்களால் பிடிக்கப்பட்டது; தகர்க்கப்பட்டது. ஆயிரம் ஆண்டுகளாயினும் யூதர்கள் அந்நகரை மீட்டனர். மீண்டும் நிர்மானம் செய்தனர். காரணம் அது அவர்கள் தாய்ப்பூமி. அது போன்றே, யாழ்ப்பாணத்தில் சிங்களப் படை குடிகொண்டிருந்தாலும் எப்படையும் யாழ்ப்பாணத்தில் இறுதி வெற்றிகொள்ள முடியாது. காரணம் அது தமிழ் மண், நம் தாய் பூமி. நம் கலாச்சாரத்தின் கர்ப்பக் கிரகம். எனவே சிங்களப் படைகள் அங்கிருப்பது தற்காலிகமானது என அவர்களுக்கும் தெரியும்; உலகுக்கும் தெரியும். அதனையே தம்பி பிரபாகரனும் தெளிவுபடக் கூறியுள்ளார். நம் கடன் தொடர்ந்து விடுதலைக்குப் போராடுவதே. பிறவற்றை இயக்கம் செய்யும் என்ற நம்பிக்கை அசைக்கமுடியாதபடி நமக்குள் வேரூன்றட்டும்.

ஏனெனில் ஓர் ஒப்பற்ற தலைமையை தம்பி பிரபாகரன் வடிவிலும், விடுதலைப் புலிகள் அமைப்பின் வழியாகவும் நாம் பெற்றுள்ளோம். தமிழகத்தில் இப்படிப்பட்டதொரு வரலாற்றுச் சிறப்புமிக்க தலைமை வாய்க்கவில்லை என்பது எனக்கு வருத்தம். எனவே, தமிழீழ மக்கள் பெருமை கொள்வதற்கு, உங்கள் தலைமையின் தகுதியே போதுமானது. கிடைத்துள்ள தகுதி படைத்துள்ள தலைமையையும், வரலாறு தந்துள்ள விடுதலை வாய்ப்பையும் பயன்படுத்த நாம் சிறிது தவறினாலும், அடிமைத்தனத்தின் அதலபாதாளத்தில் நம்மினம் சறுக்கி வீழ்ந்து, என்றும் எழ முடியாமல் சிங்கள நுகத்தடியின் கீழ் சிக்கிச் சீரழியும் அபாயமுள்ளது. எனவே ஐயங்களைக் களைவோம். தெளிவான சிந்தனையுடன் ஒளிபொருந்திய தமிழீழம் படைக்க அணிவகுப்போம். தமிழீழ தாயகம் புலிகளின் தாகம் மட்டுமல்ல அது தமிழினத்தின் தாகம்.

**— சேவியர் அருள்ராஜ்**

"ஈழத்திலக்கியம்" என்ற கோஷத்துடன் இலக்கியத்துறையில் ஈழத்துத் தமிழர்களின் சுதேசியப் பாரம்பரியம் வற்புறுத்தப்பட்ட அந்த நிலையில், ஈழத்தமிழர்களுக்குப் பொதுவான, சனநாயக நிலைப்பட்ட மக்கள் கலை வடிவம் ஒன்றை மீள் கண்டு பிடிக்கும் ஒருப வரலாற்றுத் தேவையொன்றிருந்தது. அதற்கு மட்டக்களப்பே உதவக் கூடிய ஒரு நிலையில் இருந்தது. பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற் கூறுமுதல் யாழ்ப்பாணத்திலே கடைப்பிடிக்கப்பட்டு வந்த கலையொதுக்குப் போக்கு இசை, கூத்து ஆகியனவற்றைச் சாதிக் கலைகளாக்கி விட்டிருந்தது. ஆனால் மட்டக்களப்பிலே நாடகம், கூத்து அங்குள்ள சமூக வன்மையுள்ள விவசாயிகளிடையே காணப்பட்ட கலையாகும். அந்தக் கலைவடிவமே ஈழத்துத் தமிழரின் பொதுவான நாடகக் கலைவடிவமாக மேற்கிளம்பியது. இந்தப் பணியினைச் செய்தவர் பேராசிரியர் வித்தியானந்தன் ஆவார். தமிழுணர்வுத் தொழிற்பாடுகளில் முக்கிய இடம் பெற்றிருந்த அவர், இலங்கைப் பல்கலைக் கழக அமைப்பு மூலமும், தனது மாணவர்களுடைய ஒத்துழைப்புடனும் இச்சாதனையை நிறைவேற்றினார்.

மட்டக்களப்பின் நாட்டுக்கூத்து வடிவம் ஈழத்துத் தமிழ் மக்களின் தேசிய நாடகவடிவம் என்று போற்றப்படும் அளவுக்குக் கொண்டாடப்பட்டது. நாடகம் பற்றித் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சிகள் மூலம் இவ் வடிவமானது ஈழத்துத் தமிழ்ப் பண்பாட்டுக்குப் பொதுவானது என்பதும், ஒவ்வொரு பிரதேசங்களிலும் அது சிறுச் சிறு வேறுபாடுகளுடன் பயிலப்பட்டு வந்தது என்பதும் தெரிய வந்தது. ஆனால் மட்டக்களப்பிலிருந்தே அக்கலை வடிவம் எடுக்கப் பெற்று நவீனமயப்படுத்தப்பட்டது.

ஈழத்தின் கலை முழுமைக்கு மட்டக்களப்பின் நாட்டுக் கூத்து முக்கிய பங்களிப்பாகிற்று.

**'தமிழ் உயிர்ப்பில் மட்டக்களப்பு'**
**சில குறிப்புக்கள்**
**பேராசிரியர்**
**கார்த்திகேசு சிவத்தம்பி**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஈழத்தமிழரின் நடனத்தனித்துவங்களை நோக்கிய ஒரு தேடல்



(சென்ற இதழ் தொடர்ச்சி)

உடலே நடனத்தின் அடிப்படைப் பொருளாகின்றது. அதுவே நடனத்தின் மொழி. உறுப்புக்கள் அந்த மொழியின் நெடுங்கணக்கு என்று குறிப்பிடப்படும். தமிழர்களது நடன மரபில் இவ்வாறான உடல்சார் ஆற்றுகை நான்கு பிரிவுகளாக வளர்ச்சியடைந்தது.

1. உறுப்பாடல்: அதாவது உறுப்புக்களின் அசைவுகளினால் மேற்கொள்ளப்படும் ஆற்றுகையை இது குறித்தது. இம்மரபு பின்னர் பரதநாட்டியத்தில் "ஆங்கீகம்" என்று சுட்டப்பட்டது.
2. சொல்லாடல்: இலக்கிய மொழி நிலை உபயோகத்தைக் கொண்ட உடல் ஆற்றுகையைச் சொல்லாடல் குறித்து நின்றது பரதநாட்டியத்தில் இது "வாசிகம்" எனப்பட்டது.
3. அணியாடல்: கருத்துப் புலப்பாட்டுக்குப் பொருத்தமான ஆடை அணிகலன்கள் முதலியவற்றைச் சூடிய உடல் சார் ஆற்றுகையாக இது அமைந்தது. பரதநாட்டியத்தில் இது "ஆஹார்யம்" எனப்பட்டது.
4. மெய்ப்பாடு: மனவெழுச்சிகளையும், மனவெழுச்சிக்குரிய உடலியக்கப் பண்புகளையும் காட்டும் இவ்வகை நடனம் ஆற்றுகை பரதநாட்டியத்தில் "ஸாத்விகம்" எனப்பட்டது.

உறுப்புகளிலே தலைக்கு முதன்மையிடம் வழங்கப் பெற்றது. நிமிர்நிலை, சரிநிலை, கவிழ்நிலை, சுற்றுநிலை, அசைநிலை என்றவாறு தலையின் அசைவுகள் வாயிலான கருத்தாடல் நிகழ்த்தப்பட்டது. தலையை முதன்மைப்படுத்தும் ஆட்டவகையானது "சூடாமணி" எனப்பட்டது. பொருத்தமான தலை அசைவுகளைத் தருதல் "தலைச்செப்பம்" எனப்பட்டது. தலையத்தாம், தலையைத்தீம், தலையைத்தோம் என்றவாறு தலையோடிணைந்த ஆட்டச் சொற்களும் நாட்டார் மரபில் காணப்பட்டன.

பரதநாட்டியத்தில் தலையசைவுகள் ஸமம், உத்வாஹிதம், அதோமுகம், ஆலோலிதம், துதம், கம்பிதம், பராவிருத்தம், உத்ஷிப்தம், பரிவாஹிதம் என்றவாறு சிரபேதங்கள் ஒன்பது வகையாகக் குறிப்பிடப்படுகின்றன.

**ஸமம்** - அசைவற்ற நிலை

**உத்வாஹிதம்** - உயரே நிமிர்த்திய நிலை

**அதோமுகம்** - குனிந்த நிலை

**துதம்** - வலமும் இடமும் திருப்புதல்

**கம்பிதம்** - மேலும் கீழும் அசைத்தல்

**பராவிருத்தம்** - அலட்சிய நிலை

**உத்ஷிப்தம்** - ஒருபக்கமாக உயர்த்தும் நிலை

**பரிவாஹிதம்** - மென்மையாக அசைதல்

உறுப்புக்கள் நிலைப்பட்ட ஆற்றுகையில் அடுத்து கையசைவுகள் சிறப்பிடம் பெறும். "கைமானம்", "கைக்கொத்து" "விரல் அட்டி" "விரல் மடை" "மடக்கை" "முட்டுக்கை" போன்ற பல்வேறு தொடர்கள் குறிப்பிட்டுக் கூறக்கூடியனவாகவுள்ளன. தனித்து ஒரு கையினால் மட்டும் ஆற்றுகை செய்தல் தனிக்கை, தவக்கை, ஒற்றைமடி என்று குறிப்பிடப்பட்டது. இரு கைகளையும் இணைத்த தொடர்பு முறை கோர்வை, சேர்மடி, கப்பிக்கை, பிடிகை என்றவாறு அழைக்கப்பட்டது. பரதநாட்டிய மரபில் இணையாது நிற்கும் கை "அஸம்யுத ஹஸ்தம்" எனவும் சேர்க்கப்பட்ட கை "ஸம்யுத ஹஸ்தம்" எனவும் குறிப்பிடப்படும்.

உழைப்பிலும் உற்பத்திச் செயல் முறையிலும் கைகள் உயர்ந்த இடத்தைப் பெற்றன. "கையே தலை" என்ற தொடரும் நிலவியது. கைகளின் அசைவுகள் உழைப்பிற் சிறப்பாக விளங்கியமையால் ஆட்டங்களிலும் அதன் சிறப்பு உணர்த்தப்பட்டது. தூக்குக்கை, எடுத்தற்கை, தள்ளற்கை, தவிர்த்தற்கை, இழுத்தற்கை, மடித்தற்கை, இடித்தற்கை, பிடித்தற்கை, தொடுத்தற்கை, சுட்டற்கை, பின்னற்கை, கொடுத்தற்கை, அணைத்தற்கை, வேண்டற்கை, வெறுத்தற்கை, அரிதற்கை, குழைத்தற்கை, வனைதற்கை, பூசற்கை, வீசற்கை, இடுங்கற்கை என்றவாறு கைகளின் பரந்த உபயோகங்கள் மரபு நிலைப்பட்ட நடனங்களிலே காணப்பட்டன.

கைகளின் செயற்பாடுகள் தொழிற்பிரிவுகளுடனும், அவற்றோடிணைந்த சாதி முறைமைகளுடனும் தொடர்புபட்டிருந்தமையால் கைப்பிரயோகங்களில் இழிவு, உயர்வுப் பண்புகள் பிரித்துக் காட்டப்பட்டன. பரதநாட்டிய மரபில் சாதிகளைப் பிரித்துக் காட்டும் "ஜாதி ஹஸ்தங்கள்" உருவாக்கப்பட்டன. இரண்டு கைகளாலும் சிகா ஹஸ்தம் பிடித்தலும் வலது கட்டைக் கைவிரலால் பூணூலைக் குறித்துக்காட்டுதலும் பிராமணர்களைச் சுட்டிக்காட்டுவதற்குரிய சில குறியீடுகளாகும். அவ்வாறே வைசியர், ஸத்திரியர், சூத்திரர் முதலியோரைக் குறித்துக் காட்டக்கூடிய குறியீடுகளும் அறிமுகப்படுத்தப்பட்டன.

பரதநாட்டியத்தில் பிரஸாரிதம், குஞ்சிதம், ரேசிதம், பொங்கிதம், யாவிருத்தம், பரிவர்த்தம், சங்கேதம், சீசனம், அபிவேஷ்டிதம், பிரேரிதம், பதார்த்மா, துவேஸ்டிதம் என்றவாறு கையசைவுகள் விளக்கப்பட்டுள்ளன.

கலாநிதி சபா. ஜெயராஜா

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

மரபுவழி ஆடலிற் கண்கள் கருத்துப் புலப்பாடுகளிற் சிறப்பார்ந்த இடத்தைப்பெற்றன. கண்ணாட்டம், கண்ணாளம், கண்வழி, கண்ணகை, கண்மலர், கடைக்கண், திருகுகண், செருகுகண், முழிக்கண், கண்வாக்கு, கண்வீச்சு, தள்ளாட்டக்கண், தடுமாற்றக்கண், திகைப்புக்கண், வரிக்கண், புரிக்கண் போன்ற பல்வேறு சொற்றொடர்கள் கிராமிய வழக்கில் காணப்படுகின்றன.

பரத நாட்டியத்திற் கண்களின் இயக்க வேறுபாடுகள் எட்டாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவை யாவன:

**ஸமம்** - மகிழ்ச்சியோடு கூடிய உயர்நிலை நோக்கல்

**ஆலோகிதம்** - திறந்த கண்களோடு பளிச்சென்று பார்த்தல்

**ஸாசி** - குறுக்கே பார்த்துக் கடைக்கண்ணால் நோக்கல்

**பிரலோகிதம்** - ஒரு பக்கத்திலிருந்து மறுபக்கத்தைப் பார்த்தல்

**நிமீலிதம்** - பாதி மூடிய கண்கள்

**உல்லோகிதம்** - உயர நிமிர்த்திய பார்வை

**அனுவிருத்தம்** - வேகமாக மேலும் கீழும் பார்த்தல்

**அவலோகிதம்** - கீழே செலுத்தப்பட்ட பார்வை

மரபு வழி ஆடல்கள் கழுத்தின் அசைவுகள் செய்யும் தொழில்களோடு இணைந்தும், விலங்குகள், பறவைகள் என்பனவற்றைப் பாவனை செய்வதோடு இணைந்தும் காணப்பட்டன. வீங்கல், தூங்கல், துடைத்தல், சுற்றல், சரித்தல், சுரித்தல் என்றவாறு கழுத்தின் ஆடல் இயற்றல்கள் நிகழ்ந்தன. பரதநாட்டிய மரபிற் கழுத்தின் வேறுபாடுகள் ஸுந்தரிக்ரீவா, திரச்சீனாக்ரீவா, பரிவார்த்திதாக்ரீவா, பிரகம்பிதாக்ரீவா என்றவாறு நான்கு வகைப் படுத்தப்பட்டன.

**ஸுந்தரிக்ரீவா** - வலம் இடமான அசைவு

**திரச்சீனாக்ரீவா** - ஊர்தலும் இருபக்க வாட்டுகளிலும் அசைதல்

**பரிவர்த்திதாக்ரீவா** - பிறைச்சந்திர வளைவு அசைவு

**பிரகம்பிதாக்ரீவா** - புறாவின் கழுத்து அசைவு போல் முன்னும் பின்னும்அசைதல்

தொழில் புரியும் நிலைகளிற் கால் அடிகளின் இயக்கச் சமநிலைகள் சிறப்பார்ந்த இடத்தைப் பெறுகின்றன. சேரடி, சீரடி, தொடரடி, குதியடி, விரலடி, சரிவடி, மறுத்தலடி, மாற்றலடி, வன்னநடை, வரிசை நடை, துள்ளுநடை, தண்டைநடை, அன்னநடை, அரசநடை, குஞ்சநடை, குறுநடை, தட்டுநடை, சருகுநடை, சொரிநடை, விரிநடை, பவளநடை என்றவாறு அடிகளின் வேறுபாடுகள் கிராமிய ஆட்ட மரபுகளில் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. பரதநாட்டியத்தில் "பாதலட்ஷணங்கள்" பத்தாக வகுக்கப்பட்டுள்ளன. அவை வருமாறு:

**ஸமபாதம்** - அடிகளை ஒன்று சேர்த்து நிற்றல்

**மண்டலிபாதம்** - இரண்டு குதிகளையும் எதிர்முகமாகச் சேர்த்து நிற்றல்

**குஞ்சிதபாதம்** - இரு பெருவிரல்களை ஊன்றுதலும் குதிகளை உயர்த்தி நிற்றலும்

**அஞ்சிதபாதம்** - இரு குதிகளை ஊன்றுதலும் காற்படங்களை மேல் நோக்கி உயர்த்துதலும்

**வடிவுப்பாதம்** - இரு புறவடிகளையும் ஊன்றுதல்

**தாடிதபாதம்** - வலது காற்படத்து நுனியை இடது காற் படத்துக்கு அருகே வைத்தல் (புல்லாங்குழல் நிலை)

**நாகபந்தம்** - இரு அடிகளையும் இடம்மாற்றி வைத்தல்

**சாட்கதிபாதம்** - வலது காலைக் குஞ்சித பாதமாக நிறுத்தி இடது காலைத் தரையில் ஊன்றுதல்

**நிருத்தமூர்த்திப்பாதம்** - வலது அடியை நிலத்தில் ஊன்றி இடது அடியைக் குஞ்சிதபாதமாக வைத்து நடத்தல்

**கருட நிலைப்பாதம்** - இடது காற் படத்து நுனியையும் முழங்காலையும் தரையில் ஊன்றி, வலது முழங்காலை வளைத்து முன்வைத்தல்

இவ்வாறாகப் பலவகைப்பட்ட அசைவுகளுடனும் முத்திரைகளுடனும் முகிழ்த்த பரத நாட்டியம் சிற்றின்ப நிலை, பேரின்ப நிலை என்ற நித்திய அநுபவங்களை நோக்கிய உயர் தனிச் செம்மை வடிவமானது.[10]

தமிழர் மரபில் வரலாற்றுக் காரணங்களால் மல்லுக்கூத்து படிப்படியாக நழுவ விடப்பட்ட கலையாயிற்று. ஆயினும் இதன் சில பண்புகளை, தெருக்கூத்து, குதிரையாட்டம், குரங்காட்டம், கரகம், காவடியாட்டம், கோலாட்டம், சிலம்படி, தசைமுறுக்கி முதலிய ஆட்டங்களிலே காணமுடியும்.

மல்லுக்கூத்து வீரிய வெளிப்பாட்டு அசைவுகளைக் (Expressive movement) கொண்டது. சூழலுக்கேற்றவாறு துலங்குவதுடன் கருத்துக்களையும் மனவெழுச்சிகளையும் தசைநார் இயக்கங்களுடன் தொடர்புபடுத்திக் கூறவல்லது. அதன் வாயிலாகக் கண்டுபிடிப்புக்களும் உளக்கிளர்ச்சிகளும் வெளிவருவதற்குரிய வாய்ப்புகள் கிடைத்தன. அந்த வெளிப்பாடானது முழு வாழ்க்கை அனுபவங்களையும் தெறித்துக் காட்டுவதாக அமைந்தது. அதனால் அந்த நடனம் சமூகப் பொருண்மை கொண்டதாயிற்று. இதன் காரணமாக தொழில்சார் உடலியக்கச் செயற்பாடுகளின் வினைத்திறனை வலிமைப் படுத்துவதற்கும் மல்லுக்கூத்து உதவி செய்தது. "கூத்துப்பலம் கைப்பலம்" என்ற தொடரும் கிராமங்களில் நிலவியது.[11]

மல்லுக் கூத்து உளப் பிரச்சினைகளுக்கு விடையாக அமைந்தது; உள விசைகளுக்கு வடிகாலாக அமைந்தது. இதற்குரிய இசைக்கருவிகளும் மனவெழுச்சிச் சுகத்தினை வழங்கின. உடுக்கு, செம்பறை (இது மலையா

**"இலக்கியம் என்பதே, வாழ்வோடு ஒன்றுபட்டதுதான். உயர்ந்த இலக்கியம் என்று கூறினால், அது வாழ்க்கையை உயர்த்துவதாக இருக்க வேண்டும். வாழ்க்கையை உயர்த்துவது என்பது, மனிதனுடைய சிருஸ்டிச் சக்தியை அதிகப்படுத்துவது ஆகும். மனிதனுடைய இந்தச் சிருஷ்டி அதிகமாக, அதிகமாக அவன் இதனைச் சமுதாய நலனுக்காக உபயோகிக்கின்றான். சமுதாயம் செழிப்படைகின்றது. இச்சமுதாயச் செழுமைக்கு அடிகோலாத எந்த இலக்கியமும் இலக்கியமே அல்ல."**

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

ளத்தில் செண்டை எனப்படும்) மத்தளம் முதலிய தோற்கருவிகளும், குழல், புல்லாங்குழல், ஒத்து போன்ற காத்துக் கருவிகளும் தாளம், சக்கை, சேமக்கலம் முதலிய உலோகக் கருவிகளும் மல்லுக்கூத்துக்குப் பயன் பட்டன.

மல்லுக்கூத்தானது நான்கு வகையான ஆடல் உள்ளடக்கத்தைக் கொண்டிருந்தது.

1. செயற்பாடுகள்:

துள்ளல், தாவல், திரும்புதல், சுற்றுதல், ஓடல், கெந்துதல், ஏறுதல், வளைதல் குறியீடுகளை உடல் அசைவுகளினாற் சுட்டுதல், சிலையாகி நிற்றல் - இவை பொருண்மையுடன் இணைக்கப்படும்.

2. இயக்கம்:

இது அசைவுகள் என்றும் குறிப்பிடப்படும். மல்லுக்கூத்துக்குரிய அசைவுகள் நான்கு வகையாகப் பாகுபடுத்தப்பட்டன. அவை

(அ) முதல் நடை
(ஆ) வாரம்
(இ) கூடை
(ஈ) திரள்

முதல் நடையை இரண்டு மடங்காகப் பெருக்கினால் "வாரம்" ஏற்படும். வாரத்தை இரண்டாகப் பெருக்கினால் "கூடை" தோன்றும், கூடையை இரண்டாகப் பெருக்கினால் "திரள்" வரும். முதல் நடை மெது ஆட்டமாகவும் திரை அதி விரைவு கொண்ட ஆட்டமாகவும் அமையும். "வாரம்பாடுதல்" என்ற மரபு இசையில் இருந்ததாகவும் அறியப்படுகின்றது.[12]

3. ஆக்கவெளி:

www.tamilarangam.net

உடலசைவுகளை மேற்கொள்ளும் பரப்பு ஆக்கவெளி என்று குறிப்பிடப்படும். இது புவி ஈர்ப்போடு இணைந்த ஒரு செயற்பாடாகும். மனவுறுதிமிக்கோர் தரையிற் கால்களைப் பதிக்காது கூடிய வினாடிகளுக்கு அந்தரத்தில் நிற்பர். (பலே நடனங்களில் ஆக்க வெளியின் செயற்பாடுகளிலே கூடிய முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது) அந்தரத்தில் நிற்காது கால்களை ஊன்றிய வண்ணமும் சுற்றுப்புற ஆக்க வெளியில் அசைவுகளை ஏற்படுத்துதலும் மல்லுக்கூத்தில் இடம்பெற்றது.

4. தொடர்புடைமை:

இது "இணைபலம்" என்று குறிப்பிடப்படும். பிறருடன் சேர்ந்து ஆடுதலும், அவர்களது மனவெழுச்சிகளை விளங்கிக் கொள்வதும், அவற்றுக்கேற்றவாறு துலங்குதலும் இணை பலத்தில் அடங்கும்.

ஈழத்து மரபிலே தோன்றி வளர்ந்த வடமோடி, தென்மோடி ஆகிய கூத்து வகைகளுக்கு பண்டக் கூத்தும், மல்லுக் கூத்தும் பின்புலமாக அமைந்திருக்கலாம் - இவை பற்றி மேலும் ஆய்வுத் தேடல்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது.

தமிழர் மத்தியிலே "கூத்து" என்று சொல்லப்படுபவை செந்நெறிக் கலையாக மதிக்கப்படுவதில்லை.[13] இது ஒரு வகையிலே சமூக ஏறு நிரலமைப்புடன் தொடர்புடையதாக விளங்கிய எண்ணக்கருவாகும். சமூக அடுக்கமைப்பின் அடிமட்டங்களில் இருந்தோராற் கூத்துப் பயிலப்பட்டு வந்தமையால் அதற்கு செந்நெறி (Classical Art Form) என்ற அங்கீகாரம் கிடைத்திலது.

இவை தொடர்பான பல்வேறு கருத்துப் பரிமாணங்கள் பேராசிரியர் சு. வித்தியானந்தன், பேராசிரியர் க. சிவத்தம்பி, பேராசிரியர் அ. சண்முகதாஸ், பேராசிரியர் வி. சிவசாமி, கலாநிதி சி. மௌனகுரு, திரு ந. முத்துசாமி, திரு எ. அறிவுடை நம்பி, கலாநிதி பத்மா சுப்பிரமணியம், தா. பாலசரஸ்வதி, கலாநிதி வே. ராகன், கார்த்திகா கணேசர் முதலியோரால் வழங்கப்பட்டுள்ளன.

பண்டக்கூத்து, மல்லுக்கூத்து, வடமோடிக்கூத்து, தென்மோடிக் கூத்து முதலியவை "மனிதம்" என்ற பண்புகளை மிகையாகக் கொண்டிருந்தன. "உலகியல் சார்ந்த மனிதம்" அங்கு மீள வலியுறுத்தப்பட்டது. பரத நாட்டியத்தில் ஒரு முழுக் காட்சியையும் ஒருவரே தனித்து நின்று ஆடும் பண்பானது "தனி மனிதம்" என்ற முனைப்பை முன்னெடுத்துள்ளது. அதன்படி மலர்ச்சியில் "தெய்வீகம் சார்ந்த தனிமனிதம்" என்ற பண்பை அது மீளவலியுறுத்துகின்றது.

அடிக்குறிப்பு:

1. கள ஆய்வு, இணுவில்.

2. Lillian B. Lawer, The Dance in Anciant Greece, Adam and Charles Black, London 1964 P. 16.

3. கள ஆய்வு, இணுவில்.

4. Lillian B. Lawer, OP. Cit, P. 16.

5. கள ஆய்வு, இணுவில்.

6. கள ஆய்வு, அளவெட்டி.

7. மேலது.

8. கள ஆய்வு, இணுவில்.

9. Jacubs and stern, Outline of Anthropology, W. heffer and sons Ltd, Cambridge. 1948, PP 242-3

10. Projesh Banerji, Erotica in Indian Dance, Cosmo Publications, New Delhi, 1983, PP. 22-80

11. கள ஆய்வு, அளவெட்டி.

12. ப. தண்டபாணி. திராவிடர் இசை, ஆப்பிரகாம் பண்டிதர் மன்றம், சென்னை, 1993, ப.40.

13. சி. மௌனகுரு, பாரம்பரியக் கூத்தும் பரதநாட்டியமும் நாதவாஹினி கவின் கலை மன்றம், யாழ். பல்லைக்கழகம், 1989, ப.9. ★

**ஒவ்வொரு நாள் மாலையிலும் சூரியன் மறைவது போல, திரு. பிரபாகரன் அவர்களின் போராளிகள் இருளில் இருந்து வெளியே வந்து, பொது மக்கள் போல் பகல் வேளைகளிற் சுற்றி நடமாடுகின்ற நேரங்களில் தாங்கள் இனம் கண்டு கொண்ட இலக்குகளைத் தாக்குவர். இவர்கள் பாதுகாப்பான நிலைகளில் இருந்து கொண்டு இந்த இலக்குகளைக் குறிவைத்துத் தாக்குவர். அத்தோடு, சிறிய படையணிகளையும் பெரும் படையணியைக் கொண்ட முகாங்களையும் ஒன்றன் பின் ஒன்றாகத் தாக்கி வெற்றி கொள்வர். இவர்கள், நீளமான விநியோகப் பாதைகளைத் தடை செய்வர். இப்பாதைகளில் கண்ணிவெடிகளைப் புதைப்பர். மேலும், மற்றைய இடங்களில் பலமுறை செய்தமை போன்று, தாக்குதலுக்குள்ளாகியுள்ள படைகளைப் பலப்படுத்துவதற்காக அனுப்பப்படுகின்ற படை அணியை இவர்கள் ஒழித்துக்கட்டுவர்.**

நெவில் ஜெஜவீரா எழுதிய 'போருக்கா அல்லது போருக்கில்லையா?' எனும் கட்டுரையில்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலக்குநோக்கி

வன்னிக்கு வந்ததிலிருந்து, பச்சை வயல்வெளிகளும், பனிமூடிய மரங்களும், எப்போதுமே கேட்டிராத புதுப்புதுப் பறவைகளின் ஒலிகளும், செல்சத்தம் கேட்காத அமைதியும் மனசுக்கு மனோகரமாய் இருந்தன.

புது நிலத்தில் புல்லுச் செதுக்கிக் கொட்டில் போடுவதற்கு அப்பா ஆயத்தப்படுத்திக்கொண்டிருந்தார்.

யாழ்ப்பாணத்தை விட்டுக் கடல் நீரேரி கடந்து வன்னிக்கு வந்து ஒரு வாரமாகியும் அம்மாவுக்கு, மனோ நிலை இன்னும் வழமைக்கு வரவில்லை.

அப்பா மட்டும் மந்தாய்க் கிடந்த காணியைக் கொத்தி, வெளியாக்கிக் கட்டை புரட்டி புல்லைச் செதுக்கி எல்லாமே தனியாகச் செய்துகொண்டிருந்தார்.

முன்னர் எப்போதுமே செய்திராத வேலைகளெல்லாம் ஏதோ பழக்கப்பட்டவரைப் போல வேகமாய் அவர் செய்துகொண்டிருந்ததைப் பார்க்கும்போது எனக்கு ஆச்சரியமாக இருந்தது.

அவரோடு சேர்ந்து நானும் ஏதாவது செய்ய வேணுமென்று தோன்றாத நிலையில் குத்துக்கல்லாய் அமர்ந்திருந்தேன்.

அவரும் என்னை எதுவும் கேட்கவில்லை. அவர் அப்படி இருந்ததற்கான காரணமும் எனக்குத் தெரியும். என்னைத் தொந்தரவு பண்ணினால் - அல்லது வேலைப் பழுக்களை என்மீது சுமத்தினால் விட்டிட்டு இயக்கத்திற்குப் போய்விடுவேனென்கிற பயமே அது.

ஆனால், நான் அந்த முடிவை எடுத்துப் பலமணி நேரங்களாகிவிட்டன.

அம்மாவை நினைக்கத்தான் வேதனையாக இருந்தது.

அம்மாவுக்கு என்னைத் தனது அண்ணன் மகளான கமலினிக்குக் கலியாணம் செய்து கொடுத்து நான் சந்தோசமாக இருக்கிறதை தான் பார்க்கவேணுமென்பது அடிக்கடி அவர் காணும் கனவு.

கமலினி வீட்டிலும் அந்த ஆசையும், அதைப் பற்றிய பேச்சும் நிறையவே இருந்தன.

போன வருச இறுதிக்குள் எங்கள் கலியாணத்தை நடத்தி முடிக்க இரு வீட்டாருமே திட்டம் போட்டிருந்தனர். ஆனால், நடந்ததோ, ஒட்டு மொத்தமாய் யாழ்ப்பாணத்தை விட்டு அலறியடித்துக்கொண்டு எல்லோரும் ஓடிவந்ததுதான்.

"என்ன தம்பி யோசிக்கிறாய்?" அம்மாவின் குரல் என் சிந்தனையைக் கலைத்தது.

"ஒண்டுமில்லையம்மா" கூறிவிட்டு எழுந்தேன்.

இனியும் அதில் இருக்கிறதுக்கு மனசு இடம் கொடுக்கவில்லை. அந்தக் காணியின் பின்பக்கத்திற்கு நடந்து வந்தேன். என்னைக் கண்டதும் அங்கே நின்றிருந்த இரண்டு மயில்கள் ஓடிப்போய் பற்றைக்குள் ஒளிந்துகொண்டன.

கம்பிக்கட்டை ஒன்றில் சாய்ந்து நின்றபடி பார்வையைத் தூரங்களில் செலுத்தினேன்.

இள நீலநிறத்தில் நிமிர்ந்து நின்ற தூரத்துப் பனைகள், காற்றுக்கு மெதுவாய் அசைந்துகொண்டிருந்த நெற்பயிர்கள், சலசலத்து ஓடும் வாய்க்கால் தண்ணீர், எல்லாமே இனிவரப் போகும் வசந்தத்தை ஞாபகமூட்டின.

அவற்றையெல்லாம் பார்க்கும்போது எனக்கு மனசு துள்ளிக் குதித்திருக்க வேண்டும்.

கால்களைத் தண்ணீரில் அலைய விட்டு வாய்க்கால் மேட்டில் உட்கார்ந்துகொண்டு வானத்தையும், வயல்வெளியையும் பார்த்துப் பாட்டுப் பாடி ரசித்திருக்க வேண்டும்.

ஆனால், எனக்கோ விசனமாக இருந்தது.

மனசுக்குள் ஏதோ அப்பிப்போய் இருந்தது மாதிரி எதிலுமே லயிப்பில்லாமல் இருந்தது.

என்னதான் இருந்தாலும் சுதந்திரம் என்ற ஒன்று இருந்தால்தான் எல்லாமே இன்பமளிக்கும்.

அதுதான் உண்மையான சுகம்.

அதுவே மேலான வரம்.

அந்த வரம் சும்மாயிருந்தால் வராது.

வேள்வி செய்தே வரும்.

இந்த லட்சணத்தில் கமலினிக்கும் எனக்கும் இங்கு வைத்துக் 'கைப்பிடிச்சு சோறுகுடுத்து' ஒன்றாய் இருக்க விட்டு விடலாம் என்ற



எண்ணம் இரண்டு வீட்டிலும் பிறந்திருக்கிறது.

"இந்த அவலங்களுக்குள்ள இருந்து கொண்டு இப்பிடி ஒரு எண்ணம் இவையளுக்கு எப்படி வந்தது? இண்டைக்கு இருக்கிற இந்த இரவல் வாழ்க்கையும் எப்ப இல்லாமல் போகுதோ? இனியும் இப்படியே வாழ்ந்து விடுவம் என்கிற நப்பாசையள விட்டிட்டு, இப்ப இருக்கிற இந்த அவலங்கள முதல் இல்லாமல் பண்ணவேணும்" என்று நினைத்துக் கொண்டே வரப்பில் ஏறி நடக்கத் தொடங்கினேன்.

முல்லை கோணேஸ்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

இந்த வயல் வெளியால் நடந்து, பக்கத்திலுள்ள மந்துக் காட்டை கடந்து அப்பால் செல்ல கமலினி குடும்பத்தினர் இருக்கும் காணி இருந்தது.

அவர்களும் யாரோ தங்களுக்குத் தெரிந்தவர்களுடைய தென்னம் தோட்டம் ஒன்றிலேயே கொட்டில் கட்டிக்கொண்டிருந்தனர்.

“கமலினி! இப்படி ஒரு அகதி வாழ்க்கை வாழ்ந்துகொண்டு நீயும் நானும் சேர்ந்து வாழுறதென்பது எப்படி முடியும்? எங்களுக்கென்றொரு நாடில்லாமல் எங்களுக்கென்றொரு வாழ்க்கையை ஏற்படுத்திக்கொண்டு



வாழும் மனோநிலை உனக்கு வருமா கமலினி? என்னால் முடியாது. நான் போகவேணும். எங்களூரை, எங்கள் மண்ணை எந்த அரக்கர்களிடத்தில் பறிகொடுத்துவிட்டு வந்தனோ, அந்தக் கொடியவர்களிடமிருந்து மீட்டு வர எது வழியோ, அங்கே போறன்.”

“கமலினி! உன்னை கடைசியாய் ஒருமுறை பார்த்துப் பேசிவிட ஆசைப்படுகிறேன். பார்த்து உன்னிடம் நான் போகும் வழி சொல்லி விடப் பிரியப்படுகிறேன்.”

நினைத்துக்கொண்டே வரம்பால் இறங்கி அந்த மந்துக் காட்டின் கரையால் நடந்தேன்.

வயலில் நின்று களை பிடுங்கிக் கொண்டிருந்த பெண்கள் நிமிர்ந்து பார்த்துவிட்டுத் திரும்பவும் குனிந்து கொண்டனர். வன்னியின் அயராத உழைப்பு மணத்தது அவர்களிடத்தில்.

இத்தனை நெருக்கடி நிறைந்த வாழ்க்கையிலும், இலங்கை அரசின் பொருளாதாரத்தடை இருந்த நிலையிலும், வானம் பூமிக்கு மழையைத் தர மறுத்த போதிலும் இப்படி வயல் புலங்கள் பச்சைப் பசேலென்று இருந்ததைப் பார்க்கும் போது மனசுக்கு மிகவும் சந்தோசமாகத்தான் இருந்தது.

அந்த விவசாயிகளை மெச்சிக் கொண்டே மந்துக் கரையால் நடந்தேன்.

முயல் ஒன்று துள்ளி ஓடி பற்றைக்குள் மறைந்துபோனது.

தென்னங்கீற்றுகள் காற்றுக்குப் படபடக்க பக்கத்தில் நின்ற முதிரை மரமொன்றில் இருந்த குயிலொன்று சுரமில்லாமல் பாடிக்கொண்டிருந்தது.

மனசுக்குள் கொண்டிருந்த குமைச்சலால் அதைக் கேட்க எரிச்சலாய் இருந்தது.

தென்னந் தோட்டத்து முட்கம்பி வேலியால் புகுந்து உள்ளே போனேன்.

இடுப்பளவு உயரத்திற்கு வளர்ந்திருந்த தகரைச் செடிகளை விலக்கி விலக்கி நடந்து கமலினி குடும்பம் இருந்த கொட்டிலின் பின்பக்கம் போன நான் அங்கே கேட்டுக் கொண்டிருந்த ஒப்பாரி ஒலி கேட்டு ஒருகணம் அப்படியே நின்றுகொண்டேன்.

நெஞ்சு பகீரென்றது.

அழுவது மாமிதான்.

பினபக்கச் செத்தையால் குனிந்து பார்த்தேன். இன்னும் யாரோ சில பெண்களும் குழுமியிருந்தார்கள்.

“என்ர ராசாத்தி! உன்ன விட்டிட்டு என்னண்டு நான் இருக்கப் போறேனோ” புலம்பி அழுதாள் மாமி.

“இஞ்சரப்பா! கமலினி என்ன செத்துப்போட்டாளெண்டே உதில இருந்து ஒப்பாரி வைக்கிறாய்? ஏதோ போர்க்குணம் வந்து போயிட்டுது புள்ள. போராடத்தானே போயிருக்கிறாள். நாங்கள் மறிச்சால் அதுகள் என்ன நிக்கவே போகுதுகள்.”


மாமா கூறுவது மாமியின் அழுகைச் சத்தத்தினூடேயும் எனக்குத் தெளிவாய்க் கேட்கிறது.

வந்த சுவடு தெரியாமல் மீண்டும் எனது இலக்கு நோக்கி நடக்கத் தொடங்குகிறேன்.

★★★



யாழ். மாவட்டம் வடமராட்சிப் பகுதியிலுள்ள கரவெட்டியில் பிறந்த சிவஞானசுந்தரம் அவர்கள் 1965 செப்டெம்பர் 15-ம் திகதி முதல் ஈழத்தில் ‘சிரித்திரன்’ என்ற பெயரிலான கார்ட்டூன் சஞ்சிகையை வெளியிட்டார். ஈழத்தில் சஞ்சிகை வெளியிடுவது என்பதுவே தற்கொலைக்கு ஒப்பான செயல் என்று கருதப்பட்ட காலத்தில் நகைச்சுவை உணர்ச்சி ததும்பும் கார்ட்டூன் சஞ்சிகையை வெளியிடத் தொடங்கியவர் ‘சிரித்திரன் சுந்தர்’ எனப்படும் சிவஞான சுந்தரம் அவர்கள். எந்தவிதமான பின்னணிப் பலமும் இல்லாமல் சிரிக்கவும் சிந்திக்கவுமான பத்திரிகையை சுமார் இருபது வருடங்களுக்கு மேலாக வெளியிட்ட சுந்தர் அவர்கள் புத்தக வெளியீட்டுத்துறையிலும் கால் பதித்தவர். தூரிகை கொண்டு சமூக முரண்பாடுகளைப் படம் பிடித்துக் காட்டி மனப்பக்குவத்தை ஏற்படுத்தப் பாடுபட்டவர். தமிழ் தேசிய இன உணர்வின் ஊற்று நிலங்களில் ஒன்றாக விளங்கி வரும் சுந்தர் அவர்கள் சிறீலங்கா




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அருமையான மனிதர் சிவஞானசுந்தரம்

அரசு வழங்கிய சாகித்திய மண்டலப் பரிசை நிராகரித்ததன் மூலமாகவும் தமது மானவுணர்வை வெளிப்படுத்திக் காட்டியவர்.

பத்திரிகை வெளியீட்டுத்துறையில் குறிப்பிடப்பட வேண்டியவரான திரு. சுந்தர் அவர்கள் நோய்வாய்ப் பட்டிருந்த நிலையிலும் தொடர்ந்து பத்திரிகை வெளியீட்டுக்காக உழைத்து வந்தவர்.


தமிழீழ மண்ணின் மேன்மைக்காக உழைத்தவர். மக்களின் மேம்பாட்டுக்காக அல்லும் பகலும் அயராது பாடுபட்டவர். சிரித்திரன் எனும் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்து திரு. சிவஞானசுந்தரம் அவர்கள் ஆற்றிய பணியானது காத்திரமானது. மேலெழுந்தவாரியாக சிரிப்பை வரவழைப்பது போல இருக்கும் சிரித்திரன் கோபத்தை மூட்டி விடும் குணம் கொண்டது. போராட்டத்துக்கான, வாழ்வியல் செழுமைக்கான கருத்துக்களை வாசகன் மீது ஏற்றி விடுகிறது. பார்க்கிறவனுக்கு எளிமையாக இருக்கிறது. ஆனால் அது ஏமாற்றுகின்ற எளிமைதான். கருத்தோவியங்கள் சரி, நகைத் துணுக்குகள் சரி, ஆழமான அரசியல் சமூகத் தளங்களில் இருந்தே எழுகின்றன.


நிகழ்காலத்தை பின்னணியாகக் கொண்டு அக்காலத்து மக்களின் பிரதான முரண்பாடுகளை, பிரச்சினைகளை, லாவகமாகத் தொடும் நேர்த்தி இவருக்கு கைவந்த கலை. அவை இப்போதும் ரசிக்கக் கூடியதாக இருக்கிறது என்ற விடயம் அவரது ஆழத்தையே புலப்படுத்தி நிற்கின்றன. நல்லதொரு கண்ணாடியால் சமூகத்தைப் பார்த்த சிரித்திரன் ஆசிரியர் இன்று எம்மத்தியில் இல்லை. எனினும் என்றும் பேசப்படுபவராய் இருப்பார் அவர்.

1992-ம் ஆண்டு தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் இவரது சேவையைப் பாராட்டி இவருக்கு 'தமிழீழ தேசிய விருது' வழங்கிக் கௌரவித்தது. வாழும் காலத்தே இனம்கண்டு போற்றப்பட்ட இக் கலைஞனின் தாகம் சதாரணமானதல்ல. மானுடநேயமும், ஆன்மீகப் பற்றும், விடுதலை வேட்கையும் கொண்டு தன் தேசத்துக்காக தன் வாழ்நாள் பூராகவும் வாழ்ந்த மனிதன். இயலாத காலத்திலும் தூரிகையைத் தன் கைப்பற்றி சித்திரங்களை வரைந்து கொண்டேயிருந்தார். அவர் தன்னிடம் இருந்த அறிவை, ஆற்றலை, மக்களுக்காக, மண்ணுக்காக பயன்படுத்தி பயன்விளைத்தவர். உண்மைத் திறமையாளனாக நின்று கடுமையாக உழைத்தவர். அவரது சேவை மேலும் சிறக்க விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத்தினர் உறுதுணையாக, உந்துதலாக இருந்தார்கள்.

வெளிநாடுகளில் சிரித்திரன் சஞ்சிகை மறுபிரதி செய்யப்பட்டு புலம் பெயர்ந்த தமிழ் மக்களிடையே விநியோகிக்கப்பட்டு வந்தது. தமிழீழத்தில் இருந்து வெளியாகும் சிரித்திரன் சஞ்சிகை புலம்பெயர்ந்த நாடுகளிலும் வெளிவந்தமை அதன் காத்திரமான பணிக்கும் அதன் நேர்த்திக்கும் கிடைத்த நல்ல மதிப்பேயாகும்.

எங்களை வருத்தும், வாட்டும் சகல துன்பங்களினாலும், கசங்கி நலிந்து போகாமல் 'சிரித்திரு' எனச் சொல்லி, எழுதி, வரைந்து, வாழ்ந்து காட்டிய சிரித்திரன் ஆசிரியரின் வாழ்க்கை எளிதில் மறந்துவிடக் கூடியதல்ல. அந்தப் பெரிய மனிதன் கொண்ட தாகம் வற்றாத ஊற்றாய் மண்ணில் ஓடிப்பரவும்; நிற்காது.



ஒருவன்: நீங்கள் எங்கே ஸ்ருடியோ வைத்திருக்கிறியள். நிரம்ப போட்டோக்கள் கிடக்கு.

மற்றவன்: நான் கல்யாணத் தரகன். எல்லாம் அந்நிய நாட்டு மாப்பிள்ளையின் போட்டோ தான் வைச்சிருக்கிறன்.



ஒருத்தி: மணமகள் அந்நிய நாட்டுக்குப் போனாள். கடிதம் எதுவும் போட்டவளே?

மற்றவள்: போனநாள் துவக்கம் குளிரில் வாய் கிட்டினதாம். இதுவரை மாப்பிள்ளையோட கூட கதைக்கவில்லையாம். அதுக்குள்ள ஒரு கடிதமே?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எல்லைகள் கடந்த மனிதநேயம்

**அன்பு.... இது மொழி, இனம், நாடு என்ற எல்லைகளையெல்லாம் தாண்டி வியாபித்து நிற்பது. எந்த ஆதிக்கத்துக்கும் கட்டுப்படாதது. மனிதர்களுக்கு தன் தாய்நாட்டின் மீது அன்பு ஏற்படுவது இயல்பானது. தன் நாட்டைக் கடந்து இன்னொரு நாட்டில், வேறு இன, வேறு மொழி பேசும் மக்களிடம் மனிதர்கள் வைக்கும் அன்பே அற்புதமானது. எல்லாராலும் அப்படி ஒரு அபரிதமான அன்பைச் செலுத்த முடியாது. ஒரு சிலரே அப்படி இருப்பார்கள். எங்கள் நாட்டில் கூட ஒரு பிறநாட்டுப் பெண்மணி 71 வருடங்களாக, அவர் இறக்கும் வரை எங்கள் மண்ணுக்குச் சேவை செய்திருக்கிறார்.**

**அவர் 1992-ம் ஆண்டு 'சுதந்திரப் பறவைகள்' இதழுக்காக வழங்கியிருந்த செவ்வியை அப்படியே தருகிறோம்.**

பிரித்தானியாவில் பிறந்து ஆங்கிலத்தைத் தன் தாய்மொழியாகக் கொண்ட செல்வி மியூரியல் ஹட்சின்ஸ் இங்கிலாந்தை விட்டு எங்கள் மண்ணுக்கு வந்து தங்கி, தமிழ் மொழியை இலக்கணச் சுத்தமாகக் கற்று, நாங்கள் பேசும் தமிழைவிட நல்ல தமிழில், செந்தமிழில் (பேச்சுத் தமிழல்ல, எழுத்து வழக்கில் நாம் பயன்படுத்தும் தமிழ்நடையில்) உரையாடுகிறார். எங்கள் தமிழ்ப் பெண்களைப் பராமரிக்கிறார். இராணுவ வன்முறைகள் நடைபெறும் சமயங்களில் கூட இம் மண்ணைவிட்டு விலக மறுக்கிறார். நீண்ட தூரத்திற்கு அப்பாலுள்ள நாட்டில் பிறந்திருந்தாலும் ஹட்சின்ஸ் அம்மையார் மொழியைக் கடந்து, உள்ளங்களையும் உணர்வுகளையும் நேசிப்பதால்தான், தனக்குச் சம்பந்தமே இல்லாத ஒரு மண்ணில் பணிபுரியும் ஆர்வம் வந்தது.

இந்த அன்பு நெஞ்சத்தைச் சந்திக்கிறோம்.

"எப்போது அம்மா இங்கே வந்தீர்கள்?"

"1926-இல் இங்கிலாந்திலிருந்து ஆங்கில வாத்தியாராக இலங்கைக்கு வந்தேன். கிறிஸ்தவ திருச்சபை என்னை அனுப்பிவைத்தது. சுண்டுக்குளி பெண்கள் பாடசாலையிலும், உடுவில் பெண்கள் பாடசாலையிலும் ஆங்கிலம் கற்பித்தேன். அதன்பின் கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் அதிபராக இருந்தேன். கிளிநொச்சியில் வேலை செய்வதற்கு திருச்சபை கேட்டபோது, கிளிநொச்சி காடாக இருந்தது. கிளிநொச்சி காடாக இருந்ததால் எல்லோரும் மறுத்துவிட்டார்கள். என்னை உங்களுக்கு விருப்பமான இடத்தில் பாவியுங்கள் என்று நான் விண்ணப்பித்திருந்ததால், என்னை அனுப்பினார்கள். நான் இங்கே வந்த போது எல்லாமே ஒரே காடாக இருந்தது. காட்டுக்குள்ளே மக்கள் ஏதோவிதமாகச் சீவித்துக்கொண்டிருந்தார்கள். நான் அவர்களுக்கு உதவ நினைத்தேன். 1955-ல் கருணை நிலையத்தை ஆரம்பித்தேன்.

அநாதரவான, கணவனால் கைவிடப்பட்ட, ஏமாற்றப்பட்டடுக் குழந்தைகள் பெற்ற பெண்களைப் பராமரித்தேன். இலங்கை, இந்தியா என்பன சுயாதீனமான அரசுகளான போது திருச்சபை தனது உதவியை நிறுத்தியது. பராமரிப்பு நிலையத்தை என்னையே சுயாதீனமாக இயக்குமாறு அறிவித்தது. நான் எனது பென்ஷன் பணத்தின் மூலம் நிலையத்தைப் பராமரித்தேன். துணியினால் ஆன மேசை விரிப்பு, கயிற்றுப் பின்னலினால் ஆன மேசை விரிப்பு, தலையணை உறைகள் முதலியவற்றை நானே தைத்து, ரயிலேறி யாழ்ப்பாணத்தில் போய் விற்றுவிட்டு வருவேன். ஒரு கட்டிடமாக இருந்த கருணா நிலையத்தின் ஏனைய கட்டிடங்களை என் உழைப்பின் மூலமே கட்டினேன்"

ஹட்சின்ஸ் அம்மையாரின் கருணா நிலையத்தில் பணிபுரியும் செல்வி எஸ்தர் கூறினார்:

"தன் உழைப்பினாலும் முயற்சியாலுமே இவர் கருணா நிலையத்தை இந்த அளவுக்கு வளர்த்தார். கட்டிடம் கட்டுவதற்காக ஒவ்வொரு பை சீமெந்தையும் இவர் தன் சைக்கிள் தாங்கியிலேயே கட்டிக் கொண்டு வந்து சேர்த்ததை, இப்போது கேட்டாலும் இந்த ஊரிலுள்ள வயோதிபர்கள் கூறுவார்கள்."

மீண்டும் நாங்கள் ஹட்சின்ஸ் அம்மாவுடன் உரையாடினோம்.

"தமிழ் படிக்கவேண்டும் என்ற ஆர்வம் எப்போது அம்மா உங்களுக்கு ஏற்பட்டது?"

"தமிழர்கள் மத்தியில் இருந்தேன். அவர்கள் தமிழைப் பற்றிப் பெருமைப்பட்டார்கள். நான் தமிழைப் பற்றி விசாரித்தேன். தமிழ் தெரியாமல் தமிழர்களிடையே செயற்பட முடியாது என்பதால், ஒக்ஸ்போட்டுக்குப் போய் ஒருவருடம் தமிழும் கிரேக்க மொழியும் படித்தேன். தமிழும் கிரேக்கமும், ஒரே இயல்பைக் கொண்ட மொழிகளாதலால் படிப்பது இலகுவாக இருந்தது. இங்கிலாந்தில் நின்ற ஒரு வருடத்தில் கருணா நிலையத்துக்காக காசு சேர்த்து வந்தேன்."

"என்ன காரணத்தினால், பாதிக்கப்பட்ட பெண்களைப் பராமரிக்க வேண்டும் என்று நினைத்தீர்கள்?"

நெற்றியில் கையை வைத்தவாறு சிறிது நேரம் யோசித்த ஹட்சின்ஸ் அம்மையார் சொன்னார், "ஞாபகமில்லை. எனக்கு எல்லாமே மறந்து போய்விட்டது"

சிறிது நேரத்தில் மீண்டும் அவரே கதைத்தார்.

"எனக்கு 93 வயது. இந்த வயதில் மூளை இராது. ஆனால், கடவுளின் கிருபையால் எனக்குக் கொஞ்சம் புத்தி உள்ளது. கொஞ்சம் ஞாபகம் உள்ளது. அதனாலேயே உங்களுடன் சம்பாஷிக்க முடிகிறது."

இந்நேரம் செல்வி எஸ்தர் கூறினார்:

"இங்கே ஒரு பெண் ஏமாற்றப்பட்டு வயிற்றில் குழந்தையுடன் அம்மாவிடம் வந்து, தன்னைக் காப்பாற்றுமாறு கேட்க, அவரைப் பார்த்தே கருணா நிலையம் ஆரம்பிக்கப்பட்டதாக ஒரு கதை உள்ளது."

மியூரியல் ஹட்சின்ஸ் அம்மையாருக்கு இரு தங்கைகள். ஒருவர் இறந்து விட்டார். மற்றவருக்கு 4 குழந்தைகள் உண்டு.

"நீங்கள் இங்கே வந்த பின்னர் உங்கள் குடும்பத்தினரைப் போய்ப் பார்க்கவில்லையா?"

"இரண்டு தடவைகள் இங்லாந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்


துக்குப் போய் அவர்களைப் பார்த்தேன்."

"நீங்கள் இங்கேயே இருந்து பணி புரிய உங்கள் பெற்றோர் அனுமதித்தார்களா?"

"நான் இங்கிலாந்தில் இருக்கும் போதே மிஷனரியில் இருந்தேன். அவர்கள்தான் என்னை இங்கே அனுப்பினார்கள். 26 வயதில் நான் வந்தேன். பெற்றோர் எதுவும் சொல்லவில்லை."

"நீங்கள் ஏன் இங்கிலாந்துக்குத் திரும்ப நினைக்கவில்லை. வயோதிப நேரத்தில் உங்கள் சொந்த மண்ணில் வாழவேண்டும் என்ற ஆவலில்லையா?"

"கடவுள் எனக்கு ஒரு ஊழியம் கொடுத்தார். நான் அதை மறுக்கக் கூடாது. அதனால்தான் நான் இந்த மண்ணிலேயே என் பிள்ளைகளுடன் இருக்கிறேன்."



இந்த நேரம் செல்வி எஸ்தர் எங்களிடம் சொன்னார்:

"அம்மாவுக்கு இங்கே தான் பராமரித்த பிள்ளைகளுடன் இருப்பது தான் சந்தோஷம். அதோ பாருங்கள் அந்த அம்மாவை (நரைத்த தலை முடியைக் குட்டையாக வெட்டி, சட்டை அணிந்து நின்ற ஒரு பெண்ணைச் சுட்டிக்காட்டினார். பார்வைக்கு மனநிலை சரியில்லாதவர் போல் தோன்றினார்.) அவருக்கு இப்போது 60 வயது. இவர் 3 வயதில் மனநிலை பாதிப்படைந்து வீதிகளில் தன்பாட்டில் திரிந்த போது, அம்மா இவரைக் கண்டு, கொழும்புக்குக் கூட்டிக்கொண்டு போய் வைத்தியம் செய்தார். வைத்தியம் பலன் தராததால் தன்னுடன் கருணா நிலையத்தில் வைத்திருக்கிறார். எத்தனை வயது என்று அவரிடம் கேட்டுப்பாருங்கள். 3 வயது என்று சொல்வார். 3 வயதுக் குழந்தையின் மனவளர்ச்சிதான் அவருக்கிருக்கிறது."

www.tamilarangam.net

நாங்கள் சிறிது நேரம் அவரையே பார்த்துக்கொண்டிருந்தோம். அவர் எங்களைப் பார்த்துவிட்டு ஹட்சின்ஸ் அம்மாவிடம் 'குட்நைற்' என்று சொல்லிவிட்டு ஓடினார். செல்வி எஸ்தர் தொடர்ந்து சொன்னார்:

"இவரைப் போல பலரை அம்மா தானே கொழும்புக்குக் கூட்டிக் கொண்டு போய் வைத்தியம் செய்தார். நான் அம்மாவிடம் வேலை செய்ய வந்த ஆரம்பத்தில் ஒருநாள், அம்மா என்னிடம் சொன்னார், ஏமாற்றப்பட்டு வயிற்றில் குழந்தையுடன் தன்னிடம் வந்த ஒரு இளம் பெண்ணை குழந்தை பெறுவதற்காக கிளிநொச்சி வைத்தியசாலைக்குக் கூட்டிப் போய், குழந்தை பிறந்ததும் தாயின் அனுமதியுடன் குழந்தையை வேறொருவரிடம் வளர்க்கக் கொடுத்து விட்டு வெளியே வரும்போது, ஒரு ஆண் தன்னிடம் வந்து, அந்தப் பெண்ணை திருமணம் செய்யப் போவதாகக் கேட்டாராம். அந்தப் பெண் பற்றிய விபரத்தைச் சொன்ன பின்னரும், அவர் தன் முடிவில் உறுதியாக இருந்ததால், அவர்களின் திருமணத்தை தானே நடத்திவைத்ததாகச் சொன்னார்."

இப்போது கருணா நிலையத்தில் ஆசிரியையாகப் பணிபுரியும் ஜீவா என்பவர் கூறினார்:

"1990 ஜூனில் சிறீலங்கா இராணுவத்துக்கும் புலிகளுக்கும் சண்டை நடந்தபோது, அம்மா முதலில் கிளிநொச்சியை விட்டு வரமாட்டேன் என்று சொல்லிவிட்டார். பின்னர் பிள்ளைகள் பயத்தில் அழுததால் இடம்மாற ஒப்புக்கொண்டார். எல்லோரும் முறிப்புக் காட்டுக்குள் போயிருந்தோம். அப்போது அம்மாவுக்கு 90 வயது. காட்டில் குடிக்கத் தண்ணீரில்லை; மலசல கூட வசதியில்லை. ஆனாலும் சமாளித்துக் கொண்டார்."

ஹட்சின்ஸ் அம்மாவிடம் கேட்டோம்,

"சிந்திக்கும்போது அவரவர் மொழியில்தான் சிந்திக்கலாம். உங்களுக்குத் தமிழும் தெரியும் ஆங்கிலமும் தெரியும். நீங்கள் எந்த மொழியில் சிந்திப்பீர்கள்?"

"தமிழ் படித்ததால் தமிழ் கதைத்துக்கொண்டிருக்கிறேன். தமிழிலே யோசிப்பேன். சிலவேளைகளில் ஆங்கிலமும் வரும். ஆனால், இப்போது தமிழில் நன்றாக யோசிப்பேன்."

"உங்கள் கனவுகள் ஆங்கிலத்திலா தமிழிலா தோன்றுகின்றன?"

"கனவில் வரும் காட்சிகளில் சிலர் தமிழ் பேசுவார்கள்; சிலர் ஆங்கிலம் பேசுவார்கள்."

மனிதர்கள் எப்போதுமே தமது தாய் மொழியில்தான் யோசிப்பார்கள்; கனவு காணுவார்கள். அப்படியில்லாமல் இன்னொரு மொழியில் யோசிக்கிறார்கள்; கனவு காணுகிறார்களென்றால், அது தேசம் கடந்த நேசத்தால் மட்டுமே உண்டாவது. ஹட்சின்ஸ் அம்மாவை நாம் சந்தித்தபோது, கண் பார்வை மங்கி, பழைய ஞாபகங்கள் பலவற்றை மறந்து, உடல் தளர்ந்து, சக்கர நாற்காலியில் அமர்ந்திருந்தார். அவருக்கு மிக நெருக்கமாக அவர் கூறுவதையெல்லாம் எழுதிக்கொண்டிருந்த என்னிடம் கேட்டார்:

"நீங்கள் எழுதுவதை உங்களால் படிக்கமுடியுமா?"

"ஓம், படிப்பேன்" என்று சொன்னேன். அதற்கு அவர் கூறினார்:

"ஆம் உங்கள் விழிகள் பிரகாசமானவை. என்னால் படிக்க முடியாது."

அவருடன் நாமிருந்த 150 நிமிடங்களிலும் சேச், மிஷன், பென்ஷன் என்பதைத் தவிர்ந்த வேறெந்த ஆங்கிலச் சொல்லையுமே அவர் உபயோகிக்கவில்லை. எங்கிருந்தோ வந்து, எங்கள் மண்ணில் மனித நேயத்துடன் சேவை செய்யும் ஹட்சின்ஸ் அம்மையாருக்கு நன்றி கூறிவிட்டு நாம் அவரிடம் விடைபெற்ற போது, அவர் எமக்குச் சொன்னார்,

"சென்று வாருங்கள் தமிழ்ப் பிள்ளைகளே!" ★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகள் நடாத்தும் இன்னொரு போர்

ஒரு சம்பிரதாயபூர்வமான இராணுவத்திற்கு அதிக இடம்கொடுத்து, அதனை அளவுக்குமீறி வீங்கவைத்து, அதற்கு பேரினவாத உருவேற்றி, விடுதலைப் புலிகளைச் சிங்களத்தின் எதிரியாகச் சித்திரிப்பதன் அதற்கு மூலம் சிங்களத் தேசப்பற்றை ஊட்ட முனைந்தது அரசு. அதற்கு சிறீலங்கா இராணுவத்தை, தமிழரை விடுதலைப் புலிகளின் பிடியில் இருந்து விடுவிக்கும் விடுதலை இராணுவமாகக் காட்ட முனைந்த அபத்த நாடகம் புலிப்பாய்ச்சலால் படுதோல்வியே கண்டது. இதனால் சிந்தை குழம்பிய நிலையில் சிங்களம் இருந்தாலும், 5,000 கோடிக்கு அழிவாயுதங்கள் வாங்குவதைக் கைவிடவில்லை. ஆனால், போராடும் திறனையும் அதற்கான மனவுறுதியையும் சிங்களம், யாரிடம் எத்தனை கோடி கொடுத்து வாங்க முடியும்?

எனவே, இப்போது தமிழீழப் போரியல் அரங்கில் காட்சிகள் மிகத் தெளிவடைகின்றன. புலிகளின் போரிடும் ஆற்றலை, மனவுறுதியைப் புறக்கணிக்க முடியாத நிலை உலகிற்குத் தோன்றிவிட்டது. 'அதிவேக நகர்வுப் போர் முறையின் மன்னர்கள்' இவர்கள் என மறைக்க முடியாமல் மனமுவந்து கூறவும் நேரிட்டு விட்டது. ஆனால் அதே வேளை புலிகளின் போராட்டத் திறனை, அதன் ஆழமான தாக்கத்தை இராணுவப் பரிமாணம் என்கிற அளவிலே மட்டுப்படுத்தவும் முயல்கின்றது. ஆனால், அதுவல்ல உண்மை நிலை. புலிகளின் போராட்டம் என்பது இன்று பன்முகப் பரிமாணம் கொண்டது. சிங்களத்தின் அரசியற் பொருண்மிய உளவியல் அடித்தளங்களைத் தகர்க்

**வே. பாலகுமாரன்**

கும் பன்முகத்தாக்கம் கொண்டது. இதுவே, மிக விரைவில் உலகம் ஒப்புக்கொள்ள வேண்டிய சங்கதியாகவும், அதுவே சிங்களத்தின் வீழ்ச்சியின் அறிகுறியாகவும் அமையப் போகின்றது.






சிறீலங்கா வாங்கிக் குவிக்கும் போர்த் தளபாடங்கள்...

பொருண்மிய ரீதியாக வீழ்ச்சி காணும் நாடுகள் வெளிப்படுத்தும் குணக்குறிகள் பலவற்றை இப்போது சிறீலங்காவும் வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது. சில காலத்துக்கு முன்னர் ஸயர் (Zaire) நாட்டின் வெளிநாட்டுத் தூதுவர் பலர் பொருண்மியச் சிக்கல் காரணமாகத் தமது அலுவலகங்களுக்கு, வதிவிடங்களுக்கு வாடகை தானும் கட்டமுடியாத நிலையில் அங்குமிங்கும் அலைந்ததுவும், சிலர் புகையிரத நிலையங்களின் தற்காலிகத் தங்கும் அறைகளில் தங்கியதுவும் செய்திகளாக வெளிவந்தன. அப்படி ஒரு நிலை, சிலகாலத்தின் பின் சிறீலங்காத் தூதுவர்க்குத் தோன்றினாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. ஏனென்றால், இப்போது தூதுவர் அலுவலகங்களின் செலவுகளில் கைவைக்க வேண்டிய நிலை தோன்றிவிட்டது.

சிங்களத்தின் பல்கலைக்கழகங்களோ, வெள்ளையடிக்கவும் சிறு திருத்தங்களைச் செய்யவும் கூட, விரைவில் பணத்திற்குத் தட்டுப்பாடு தோன்றுமென அஞ்சத் தொடங்குகின்றன. இவற்றுக்கெல்லாம் காரணம், புலிகளோடான போருக்குத் தேவைப்படும் பல்லாயிரம் கோடி ரூபாவைப் பெறும் ஒரு வழியாக, சென்ற வருடம் ஜூலை மாதத்தில் இருந்து சகல திணைக்களங்கள், கூட்டுத் தாபனங்கள், அமைச்சுக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கள் யாவும் தமது செலவினத்தில் 10 சதவீதத்தை உடனடியாகக் குறைக்குமாறு நிதியமைச்சு கட்டளை பிறப்பித்துள்ளமைதான்.

புலிகள் தாக்கி அழிக்கும் ஒவ்வொரு கடற் கலத்திற்கும், விமானத்திற்கும், டாங்கிக்கும், கவசவாகனத்திற்கும், அள்ளிச்செல்லும் ஒவ்வொரு சுடுகலனுக்கும், றவைக்கும் நிதி தேவை. அவற்றோடு புலிகளின் தாக்குதலால் ஈசல்போல் மடியும் நூற்றுக்கணக்கான இராணுவத்தினருக்கான நட்டஈட்டுக்கும், பதிலாகப் புதிதாகச் சேர்க்கும் ஆளணிக்கும், ஒவ்வொரு புதிய இராணுவ நடவடிக்கைக்கும் நூற்றுக்கணக்கான கோடி நிதி திரட்டப்படவேண்டும். அது தவிர தோல்விகள் மேல்மேலும் சூழும்போது செய்வதறியாமல் நவீனத் தளபாடங்களை வாங்கிக் குவிப்பதற்கும் என, மொத்தத்தில் பாதுகாப்புச் செலவீனம் என்பது எல்லா வரையறைகளையும் தாண்டிவிட்டது.

www.tamilarangam.net

வருடாந்த சராசரிப் பாதுகாப்புச் செலவீனமான 2,500 கோடி இப்போது 3,000 கோடிக்கும் மேல் ஆகிவிட்டது. எவ்வகையாலும் கட்டுப்படுத்தவோ, திட்டமிடவோ முடியாத அளவிற்குப் பாரிய பொருண்மியத் தேவை இப்பொழுது சிங்களத்தைப் பூதாகரமாகப் பிடித்தாட்டுகின்றது. புலிகளோடான போர் ஆரம்பித்த பின், சிங்களத்தின் சகல பொருண்மியக் குறிகாட்டிகளும் வீழ்ச்சி நிலையைச் சுட்டுகின்றன. 'முன்னோக்கிப் பாய்தல்' (Operation Leap Forward) நடவடிக்கையின் வெற்றியை எதிர்பார்த்த முதலீட்டாளர், புலிப்பாய்ச்சல் (Operation Tiger Leap) நடவடிக்கையின் பின் தலையைத் தொங்கப்போட்டுள்ளனர்.

பணவீக்கம் இரட்டை எண் ஆகின்றது. மொத்தத் தேசிய உற்பத்தியில் பாதுகாப்புச் செலவீனம் அபாயகரமான 05 சதவீதத்தை நெருங்குகின்றது. வரவு செலவுப் பற்றாக்குறை, மொத்தத் தேசிய உற்பத்தியில் 09 சதவீதத்திற்கும் மேலாகின்றது.

கொழும்பு வணிக மையம் சுறுசுறுப்பு இழந்து, மக்களின் வாங்கும் திறன் குறைந்து வியாபாரம் பெருஞ் சோர்வு நிலையில் இருப்பதாகக் கொழும்பின் பிரபல வணிகர்கள் முறையிடுகின்றனர். சிறீலங்கா நாணயத்தின் பெறுமதியும் வீழ்ச்சியடைகின்றது. இவற்றின் பொருள் என்ன? இந்தப் பொருண்மிய வீழ்ச்சியினை அரசியல் மொழியில் மொழிபெயர்த்தால், இது இப்படித்தான் இருக்கும் என்கின்றார் ஒரு நிதித்துறை வல்லுனர். இப்போதைய பெருகும் வரவு செலவுப் பற்றாக்குறை, குறைவான வளர்ச்சி வீதம், தாழ்நிலையை நோக்கும் ரூபாவின்

---

சிறிலங்கா தேசம் மிக மோசமான நெருக்கடிநிலைக்கு தள்ளப்பட்டு விட்டது. ஆயினும் அது தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்புப் போரை தொடர்ந்து நடத்துவதிலேயே கருத்தாக இருக்கிறது.

சிங்கள எதிர்க்கட்சிகள், நலிந்து கொண்டு போகும் பொருளாதாரம் பற்றிய கேள்விகளைப் பலமாகக் கேட்கத் தொடங்கிவிட்டன. போருக்கு இவ்வளவு நிதி செலவிட்டால் வேலை வாய்ப்பு வழங்குவது எப்படி? மிகப்பெரிய பிரச்சினையாக இது வளர்ந்து கிடக்கிறது. அமைச்சர் டி.எம். ஜயரட்ண நாட்டின் வேலையின்மைப் பிரச்சினை பற்றிக் கூறிய விளக்கமே பொருத்தமாக இருக்கும். 'நான் இரவில் 11 மணிக்கு படுக்கைக்கு சென்று அதிகாலையில் முகம் கழுவ முன்னரே பெரும் தொகையான இளைஞர்கள் யுவதிகள் தொழில் வேண்டுமென தேடி வருகின்றனர்.' இது சிறிலங்கா தேசத்தின் நிலை. தமிழர்கள் மீதான ஆக்கிரமிப்பு எண்ணம் ஆட்சியாளர்களது கண்களைக் குருடாக்கி விட்டது. போட்டிக் குணாம்சங்களாலும், பகைமையாலும், ஆக்கிரமிப்புணர்வாலும் மூழ்கிப் போயிருக்கும் இவர்களின் போர்த்திட்டங்கள், இராணுவ நடவடிக்கைகள், கண்மூடித்தனமான ஆயுதக்கொள்வனவுகள் பற்றி எதிர்க் கட்சியினர் தட்டிக் கேட்கிறார்கள்.

அதற்கு பதிலளிக்குமாறு அமைந்திருந்த உரையில் 'ஆசியாவின் பொருளாதார வலிமை மிக்க நாடுகளில் ஒன்றாக சிறிலங்காவை மாற்றுவதே அரசாங்கத்தின் நோக்கமாகும். இந்த நோக்கத்தை சீர்குலைப்பதற்காகவே எதிரிகள் பொய்ப் பிரச்சாரங்களை கட்டவிழ்த்து வருகின்றனர் எனக் கூறி அவர்கள் கூறும் கருத்தை அவர் செவிமடுக்காது போகிறார். பொருளாதார வளர்ச்சி, முதலீடுகள் மூலமே வேலையில்லாப் பிரச்சினையை தீர்க்க முடியும். தொழில் வாய்ப்புக்களை உருவாக்கக்கூடிய முயற்சிகளில் தனியார் துறையினரை ஊக்குவிக்கும் அவர்களின் திட்டமும் வெற்றி காணமுடியாத நிலைக்கு வந்து விட்டது. நீண்டகாலமாக கொழும்பில் வதித்து வந்த பலரும் தங்களுடைய வதிவிடங்களை மாற்றி வருகின்றனர். கொழும்பு நகரம் அச்சமும் பாதுகாப்பின்மையும் நிறைந்ததாக இருப்பதால் அவர்கள் இடம் பெயர்கிறார்கள். முதலீட்டாளர்கள் இந்த நிலையில் முதலீடுகளைச் செய்வதில் ஆர்வமற்றவர்களாக காணப்படுகிறார்கள். சென்ற வருடம் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் சிறிலங்காவை நாடி வந்தனர். 30 கோடி ரூபா பெறுமதியான ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட்டன. அவையும் ஆரோக்கியத் தன்மை இழந்து விட்டது. ஜனவரியில் நடந்த மத்திய வங்கி தகர்ப்புக்குப் பின்னர் சிறிலங்காவில் 20, 30 வருடங்களாக முதலிட்டு வைத்திருந்த முதலீட்டாளர்கள் பலர் தமது முதலீடுகளை மீளப்பெற்றுக்கொண்டு திரும்புகின்றனர்.

ஆனால் அனுருத்த ரத்வத்த தனது மக்களை ஒரு மாயைக்குள் வைத்திருப்பதையே விரும்புகிறார். யுத்தத்தில் 60 வீதமான புலிகளை ஒழித்துக்கட்டி விட்டோம். இனிப் பயமில்லை. யுத்தத்துக்காக ஒதுக்கப்பட்ட 3900 கோடியையும் நாங்கள் அப்படியே செலவழிக்கிறது தேவையில்லாமல் போயிற்று. அதனால் அந்தப் பணத்தில் 2500 கோடி ரூபாயை மீதப்படுத்த முடியும் என தான் எதிர்பார்க்கிறாராம். இப் பணத்தை வைத்துக் கொண்டே சரிந்து போகும் சகலதையும் நிமிர்த்தி விடலாம் என அவரும் சந்திரிகாவும் திடமாக நம்புகிறார்களாம். இதனால் நாட்டில் வேலை வாய்ப்பின்மைப் பிரச்சினையை தாம் அடியோடு ஒழித்து விடுவார்களாம்.

60 வீதமான புலிகளை ஒழித்து விட்டோம். போர் ஓய்வுக்கு வந்து விடும். அதன் பின் ஆசியாவின் வலிமை மிக்க நாடாக சிறிலங்கா விளங்கும். சந்திரிகாவும், ரத்வத்தையும் சிங்கள மக்களுக்குக் காதில் பூச்சுத்தும் வேலையை எவ்வளவு காலத்துக்கு இப்படிச் செய்துகொண்டிருக்கப் போகிறார்களோ?

★★★

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

பெறுமதி என்பன சிறீலங்காவின் பெரும்பகுதி மக்களின் மீது அவர்கள் தாங்கமுடியாத, நினைத்துப் பார்க்கவே முடியாத பாரிய பளுவைச் சுமத்தும் என்கின்றார்.

இவ்வாறாகச் சிங்களத்தின் பொருண்மியச் சோகக்கதை தொடர்கின்றது. போர் மேலும் தீவிரப்பட்டு, புலிகளின் தாக்ககுதல் அதிகரிக்க, நிலைமைகள் எவ்வாறு மோசமடையும் என்பது நாம் சொல்லித் தெரிய வேண்டிய செய்தி அல்ல இன்று. எனவே இவை எல்லாம் எவ்வாறு நிகழ்கின்றன? பல்வேறு வழிகளிலும் பல்வேறு நாடுகளில் இருந்தும் நிதியை மிக விரைவில் திரட்டக் கூடிய அரசு எவ்வித வெளிநாட்டு உதவிகளும் கிடைக்காத, தன் மக்களையே நம்பியிருக்கும் ஒரு விடுதலை அமைப்பு ஆகிய இரண்டையும் ஒருகணம் ஒப்பிட்டுப்பாருங்கள். ஒரு பேருண்மை இங்கே புலப்படும். ஒவ்வொரு புலி வீரனும் பல சிங்களப் படைக்குச் சமமாவது போல, இந்தப் போரிலே புலிகள் செலவிடும் ஒவ்வொரு ரூபாவும் பன்மடங்கு செலவினத்தை சிறீலங்காவில் ஏற்படுத்தி விடுகின்றது. ஒப்பீட்டளவில் பார்க்குமிடத்து, இப்பெருக்கம் அதிசயிக்கத்தக்க வகையில் அமைகின்றது. இங்கே இன்னொரு தகவலும் சேர்க்கப்படல் வேண்டும்.

ஏனைய விடுதலைப் போராட்ட இயக்க வரலாறுகளைப் பார்க்குமிடத்து, ஒவ்வோர் விடுதலை அமைப்புக்கும் குறிப்பிட்ட சில நாடுகள் நிதி உதவியை வாரி வழங்கியதை அவதானிக்க முடியும். ஓர் அங்குலத் தாயக மண்ணைக்கூட மீட்க முடியாத பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கு (Palestinian Liberation Organization) அண்மைக் காலம் வரை வெளிநாடுகளில் பணிபுரியும் ஒவ்வொரு பாலஸ்தீனியனும் பல பத்து ஆண்டுகளாகத் தனது மாத வருமானத்தில் கணிசமான சதவீதத்தைக் கிரமமாகச் செலுத்தினான். அத்தோடு இஸ்லாமியச் செல்வந்த நாடுகள் வாரி வழங்கின. தற்போதும், போராட்டத்தைத் தொடர்ந்து மேற்கொள்ளும் குர்டிஸ் (Kurdish) மக்களின் பி.கே.கே. (P.K.K.) அமைப்பிற்கும், மேற்குலகில் தொழில் பார்க்கும் குர்திசு மக்கள் உவந்தளிக்கும் உதவிகளோடு, சிரியா போன்ற நாடுகளும் உதவுகின்றன. அண்மையில் விடுதலை பெற்ற எரித்தியா (Eritria) விடுதலை அமைப்பிற்கு, வெளிநாடுகளில் செல்வந்தராக இருக்கும் எரித்திரியர் மட்டுமன்றி, பல இஸ்லாமிய நாடுகளும் வாரி வழங்கின.

ஆனால், புலிகளைப் பொறுத்தவரையில் அதன் நிதி மூலம் என்பது, தமிழீழ மக்களிடமிருந்து அவர்கள் எங்கிருந்தாலும் மனமுவந்து அளிக்கும் நன்கொடை மூலமே என்பது தெரிந்தது. இங்கே வெளிநாட்டு உதவி என்பது பல இடங்களில் உபத்திரவமாக மாறியதோடு, அவை வற்றிய போது விடுதலைப் போராட்டங்கள் வீழ்ச்சி கண்டது எமக்குப் பாடமாகவும் உள்ளது.

சிறீலங்காவின் இன்றைய நிலையை ஒப்பிடுவதற்கு எத்தியோப்பியாவே தகுந்த உதாரணமாகும். வலுக் கட்டாயமாகத் தன்னோடு இணைத்த எரித்திரியாவின் விடுதலைப் போரை நசுக்க சோவியத்தின் உதவிகளை முழுமையாக நம்பியிருந்த எத்தியோப்பியா, சோவியத் உதவிகள் நிறுத்தப்பட்டபின் தோல்வி கண்டது நாம் நினைவுகூரத்தக்கது. அப்போது எரித்திரிய மண்ணிலே நிலை கொண்டிருந்த ஓர் இலட்சம் படையணி, அடிஸ் அபாபாவோடு (Addis Abba) தொடர்புகள் யாவும் அறுந்த நிலையில் குழம்பிச் சிதைந்து இறுதியில் ரீ85 ரக டாங்கிகள் பீரங்கிகள் சகிதம் ஈ.பி.எல் எப். (Eritrean People's Liberation Front) போராளிகளிடம் சரணடைந்ததுவும் நாம் மனம் கொள்ள வேண்டிய செய்தி மட்டுமன்றி இங்கும் எதிர்பார்க்கக் கூடியதுதான்.


ஆனால் இப்பாரிய மாற்றம் நிகழ, வெற்றி அன்னை எம்மை அணைக்க, தமிழீழ மக்கள் என்ன செய்ய வேண்டும் என்பது தெளிவானது. இளைய தலைமுறையினர் விடுதலைப் போராட்டத்தில் ஆர்வத்துடன் அணியணியாகச் சேர்வதுபோல், எம்மக்களும் புலிகள் அவசர நிதியுதவியாகக் கோரும் நூறு கோடி பணத்தைத் திரட்ட, தாமாகவே முன் வருவர் என்பதில் ஐயம் இல்லை. இந்த நிதியானது, பெருக்கல் அடிப்படையில் எத்தகைய பன்மடங்குத் தாக்கத்தைச் சிங்களத்தில் விளைவிக்கும் என்பதை எம்மக்களால் கணிக்க முடியும். அது மட்டுமன்றி, காலத்தால் செய்யப்படும் இந்நிதியுதவியானது காப்புறுதித் திட்டம் போல எம்மக்களின் உயிருக்கும், உடைமைக்கும் பாதுகாப்பாக அமையும் உன்னத நிலையை மக்களால் உய்த்துணரவும் முடியும். எனவே, பாரதி சொன்னது போல்,

'போருக்கு நின்றிடும் போதும்
உளம் பொங்காத

அமைதி மெய்ஞ்ஞானம்' உடைய
எமது போராளிகளுக்கு

'ஊருக்கு உழைத்திடல் யோகம்
நலம் ஓங்கிடுமாறு வருந்துதல்
யாகம்' என, எம் மக்களும் துணையாக நின்று உதவிடும் பொழுது, இனி வரும் பொழுது எமக்கு விடிவாக மாறும்.

★



'The Island'
12-03-1996

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net













தமிழீழ விடுதலைப் புலிகளின் கலை
பண்பாட்டுக் கழக பிரெஞ்சுக் கிளையினரால்,
10-03-1996 அன்று நடாத்தப்பட்ட
விடுதலை மாலை நிகழ்ச்சியின் காட்சிகள் சில





www.tamilarangam.net

# எழுகிறது தமிழகம்

## தமிழ்ச் சான்றோர் பேரவையின் தமிழர் உரிமைக் கருத்தரங்கும் பேரணியும்

**24–02–96** காரிக் (சனி) கிழமையன்று, 'தமிழை ஆட்சி மொழியாக்கு' என்கிற முழக்கத்துடன் தமிழ்ச் சான்றோர் பேரவை கோவையில் கூடியது.

பேரவைத் தலைவர் சிலம்பொலி செல்லப்பன் கருத்தரங்கைத் துவக்கிவைத்து உரையாற்றுகையில், ஆட்சியாளர்கள் நெஞ்சுரத்துடன் செயல்பட்டால் தமிழை அரியணை ஏற்றுவதில் சிக்கல் இல்லை என்றார். 'தமிழைப் பயிற்று மொழியாக்கு' என்று உரை நிகழ்த்திய பழ. பாலகிருஷ்ணன் 'எங்கள் எதிரி எங்கோ மறைந்தார் - இங்குள்ள தமிழர் ஒன்றாதல் கண்டே' என்ற பாரதிதாசனின் பாட்டிற்கு நாம் செயல் வடிவம் கொடுக்க வேண்டும் என்றார். 'தமிழே ஆட்சி மொழி' என்று இளவேனிலும், 'தமிழே சட்ட மொழி' என்று முதுபெரும் வழக்குரைஞர் கு.ச. ஆனந்தும், 'வழிபாட்டில் தமிழ்' என்று கலைஞர் கனகசுப்புரத்தினமும் உரைகள் நிகழ்த்தினர்.

பிற்பகல் பேரணியைத் துவத்தி வைத்துப் பேசிய சுப. வீரபாண்டியன் தமிழகம் முழுவதும் பீறிட்டுக் கிளம்பும் தமிழுணர்வின் வெளிப்பாடே இப்பேரணி என்றார். 'அன்னைத் தமிழை அரியணையேற்று', 'செந்தமிழ் ஆளத் தேதி குறி, நந்திகள் தடுத்தால் தூக்கியெறி' என்ற வீரமுழக்கத்துடன் கிளம்பிய பேரணி, பெரியார் திடலில் மாபெரும் பொதுக்கூட்டமாக வடிவெடுத்தது. அச்சமயம், தமிழ் தேசப் பொதுவுடமைக் கட்சியின் நிறுவனர் பெ. மணியரசன், தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன், மற்றும் பழ. கருப்பையா உள்ளிட்ட பலரும் உரையாற்றினர். தமிழர் தமிழராய் வாழ்வதும், எழுச்சி பெறுவதும் வரலாற்றில் நாம் நிகழ்த்தவேண்டிய சமூகக் கடமையைப் பொறுத்தது. இந்த நூற்றாண்டில் தமிழன் விழித்தெழாவிட்டால் எதிர்காலம் தமிழரில்லாத உலகை எதிர்கொள்ளும். தமிழின விடுதலைக்காய் நமது ஆற்றல்களை ஒருங்கிணைப்போம் என்ற அடிப்படையில் உரைகள் அமைந்தன. வீழ்ச்சியுற்ற தமிழகத்தின் எழுச்சிக் கூட்டம் புதிய தமிழகம் படைக்கும் நோக்குடன் இனிதே நிறைவேறியது.



காரைக்குடி மக்கள் மாமன்றம் சார்பில் நடைபெற்ற ஈழத் தமிழர் படுகொலைக் கண்டனக் கூட்டத்தில் மதுரை ஆதீனகர்த்தர், திரு. கி. வீரமணி, திரு. பழ. நெடுமாறன், திரு. பழ. கருப்பையா, புலவர் ஆ. பழனி, திரு. க. பரந்தாமன், திரு. சாமி திராவிடமணி, திரு. ச. இன்பலாதன் ஆகியோர் கலந்துகொண்டு உரை நிகழ்த்தினர்.





பாண்டிச்சேரி
26–11–1995 அன்று, தமிழினப் படுகொலையைக் கண்டித்து
தமிழினத் தொண்டியக்கம் நடாத்திய மிதிவண்டிப் பேரணி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இந்தியத் தலையீட்டுக் கண்டனப் பொதுக்கூட்டம்

புலிகளின் ஆயுதக் கப்பலைத் தகர்த்தது, இந்தியக் கடற்படையும் சேர்ந்துதான் என்பதால், அச்செயல் உள்ளிட்ட, பல்வேறு மறைமுக இந்திய இராணுவத் தலையீடுகளைக் கண்டித்து, திராவிடர் கழகம் சார்பில், சென்னைப் பெரியார் திடலில் கண்டனப் பொதுக் கூட்டம் ஒன்று 23-02-96 அன்று நடைபெற்றது.

திராவிடர் கழகத்தின் சட்ட அணிச் செயலர் துரைச்சாமி கூட்டத்திற்குத் தலைமை தாங்கினார். வழக்குரைஞர் அருள்மொழி அனைவரையும் வரவேற்றார். பழ. நெடுமாறன், கி. வீரமணி, கோ. சாமிதுரை, தந்தை சேவியர் அருள்ராஜ், பழ. கருப்பையா ஆகியோர் உரையாற்றினார்கள். இந்தியாவின் இராணுவத் தலையீடும், தமிழின விரோத நடவடிக்கைகளும் வன்மையாகக் கண்டிக்கப்பட்டன. இவை அனைத்திற்கும் தமிழர்கள் ஒட்டுமொத்தமாகக் கணக்கைத் தீர்க்கும் நாள் தொலைவில் இல்லை என்று உறுதிபட அங்கு அறிவிக்கப்பட்டது. பெரியார் திடல் நிரம்பி வழிந்தது.







# உலகத் தமிழர் எழுச்சி இயக்க நிகழ்ச்சி

உலகத் தமிழர் எழுச்சி இயக்கம் முன்னின்று நடாத்திய ஈழத் தமிழர் விடுதலை குறித்த கலந்துரையாடல் கூட்டம், மதுரை மீனாட்சியம்மன் கோவில் வளாகத்துள் திருவள்ளுவர் கழகத்தில் 14-02-96 அன்று மாலை 6.30 மணிக்கு நடைபெற்றது.

கூட்டத்தை அ.தி.செல்வகணபதி தொடங்கி வைத்ததை அடுத்து, தலைவர் முனைவர் திரு. ஜி. வேலன் தலைமையுரை நிகழ்த்தினார். அதன் பின்னர் உரையாற்றிய உலகத் தமிழர் அமைப்பின் துணைத் தலைவர், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த திரு. ஜி. எம். இராசரத்தினம், 'ஏதிலிகளாய், கூலிகளாய், கொத்தடிமைகளாய்த் தமிழர்கள் பன்னெடுங்காலம் இழிவுடன் வாழ்தல் இல்லாதொழிதல் வேண்டும்' என்றார்.

ஈராயிரம் ஆண்டுகளாகத் தமிழர்களின் பூர்வீக இடமான இலங்கை மண்ணிலிருந்து தமிழர்களை அப்புறப்படுத்துவதும், அழித்தொழிப்பதுமாயுள்ள சிங்கள இனவெறியாட்சியின் கொடுங்கொட்டத்தை அடக்குவதற்காய்த் தணியாத தமிழ் ஈழத் தாகத்துடன் நிலைகுலையாப் போராட்டம் நடத்தும் விடுதலைப் புலிகள் வெற்றியடைவது உறுதியெனக் குறிப்பிட்ட அவர், தனித் தமிழீழம் அமைந்து தமிழர் இன்னல் தொலையும் நாள் வெகு தொலைவில் இல்லை என்றார். அதற்கான தியாகம் எந்தளவானாலும் ஏற்கப்பட வேண்டும் என்றும் மக்களை வேண்டினார். அவர் தம் துணைவியார் திருமதி. இராசரத்தினம் இடையிடையே கருத்துக்களை எடுத்துக்கொடுத்து, தமிழின உணர்விலும் துணையாக நின்றார். அவரைத் தொடர்ந்து புலவர் செல்வ கணபதி 'தமிழீழம் இன்று' என்ற தலைப்பில் கவிதை வாசித்தார். கூட்டம் திரு. மார்த்தாண்டம் அவர்களின் நன்றிகூறலுக்குப் பின் முடிவுற்றது.

தமிழர் தேசிய இயக்கத்தின் தலைவர் பழ. நெடுமாறன், உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கத்தின் நிறுவனர் தந்தை சேவியர் அருள்ராஜ் ஆகியோர் கலந்து கொண்டு கூட்டத்தைச் சிறப்பித்தனர்.






இராஜ சிங்க மங்கலம்
05-03-1996 அன்று, உழைக்கும் மக்கள் விடுதலை இயக்கம் நடாத்திய ஈழத்தமிழர் ஆதரவு சாலை மறியல் போராட்டம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

Printed by Vasan Litho Printer (London) - 0181-640 4366




www.tamilarangam.net

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்